www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூன் — 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



## அமெரிக்க மோகம்

படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

* மே மாத இதழில் அட்டைப்படக் கவிதை சிறப்பாக இருந்தது. ஆனால் இந்த வசன கவிதை நடை ஒவ்வொரு இதழிலும் பின்பற்றப்படுவது வடிவத்தின் மீதான விருப்பமா, அல்லது உள்ளடக்கத்தின் விளைவான தீர்மானமா என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதழில் வரும் சிறுகதைகள் கனமான சம்பவங்களைக் கொண்டிருந்த போதும், சராசரிக் கதைகளைவிட வடிவ உத்தியில் மேம்பட்டிருந்தாலும், போதுமான உளப்பதிவையும், நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தத் தவறுகின்றன என்றே கருதுகிறேன். அதன் காரணம், உளவியல் விவரணைகள் சிறப்பாக பிரயோகிக்கப்படுவதில்லை என்பதே என் கருத்து.

**- அரசு, தஞ்சாவூர்.**

* 'பிணங்கள் பேசுகின்றன' கவிதை இரு வேறு தேசிய இனங்களின் அவலத்தையும், ஆள்பவர்களின் அயோக்கியத்தனங்களையும் அம்பலப்படுத்துகின்றது. அஸ்கர் அலி என்ஜினியர் மீதான தாக்குதல் மூலம் 'மத அடிப்படைவாதிகள்' எங்கும் ஒரே மாதிரிதான் செயல்படுகின்றனர் என்பது தெரிகிறது.

**- முரளி, இராஜபாளையம்.**

* பெண்களைப் பெரிதும் பாதித்துள்ள போலித்தனம், தாலி, சாமி, சடங்கு, சாதி, துணி, நகை, சினிமாக் கவர்ச்சி, பெண்ணடிமைத்தனத்தை மனமுவந்து ஆதரிக்கும் மனநிலை, அரசியல் - சமூக போராட்டங்களிலிருந்து ஒதுங்கிச் சென்று தனியொரு வட்டத்திற்குள் நிலைநிறுத்திக்கொள்ளும் போக்கு, இவற்றைப் புரிய வைத்து ; பெண்களை அரசியல்படுத்தும் விதமாக கேள்வி - பதில் பகுதியோ, தொடர் கட்டுரைப் பகுதியோ தொடங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**- வசோசி, மானாமதுரை.**

* கிரிக்கெட் சூதாட்டத்திற்கு காரணம் ஒரு சிலரின் ஊழல் மட்டுமே, அவர்களைத் தண்டித்தால் திரும்பவும் இந்திய மானத்தை விழுந்த இடத்தில் ஒட்ட வைக்கலாம் என பலரும் பேசிவரும் வேளையில், கிரிக்கெட்டின் வாழ்வே அவர்களது சூதாட்ட ஒழுக்கத்தில்தான் இருக்கிறது என்பதை தலையங்கம் நிரூபித்தது.

**- நிர்மலா, திருச்சி.**

* **நூல் அறிமுகம்:** இதற்கு முன் நாராயண குருவைக் கேள்விப்பட்டதில்லை. இப்படியாக ஒரு மனிதர் பெரியார் போல கேரளாவிலும் வாழ்ந்துள்ளார் என்பதை நினைக்கும்போது நமது நாட்டில் இது போன்ற எத்தனை சமூக சிந்தனையாளர்களின் வாழ்க்கை இந்து மதவெறியர்களாலும், ஆளும் வர்க்கத்தாலும் மறைக்கப்பட்டுள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**அஸ்கர் அலி என்ஜினியர்...** மதத்தின் இறுதி மரணம் வரை எந்தவொரு ஜனநாயகவாதியும் நிம்மதியாக வாழ முடியாது என்பதை கட்டுரை விளக்குகிறது. இந்து மதவெறியர்களை எதிர்க்கும்போது நம்முடன் சேரும் இசுலாமிய மதவாதிகள், மதமா, ஜனநாயகமா என்று வரும்போது இந்துமதவெறியர்களுடன் இணைந்து கொள்கின்றனர்.

**தற்கொலைப் படை:** ம.க.இ.க.வினர் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் போராடிய ஒரு நிகழ்ச்சி, கதை வடிவம் பெற்றுவிட்டதோ என நினைக்கும் வகையில் சிறுகதை அமைந்துள்ளது.

**இசைக் கட்டுரை:** மார்க்ஸ் உலகத்தை விளக்குவது மட்டுமல்ல, அதனை மாற்றியமைப்பதே நமது வேலை என்றார். தமிழிசை எது, கர்நாடக இசை எது என விளக்குவது மட்டுமல்ல, தமிழ் மக்கள் இசைவிழாவின் வேலை. அது ஒரு ஆரம்பம் மட்டுமே. மக்களுக்கான புதிய இசையை உருவாக்குவது என்ற சிக்கலான மிகப் பெரிய பணியைச் செய்வதுதான் நோக்கம் என்பதைக் கட்டுரை நன்கு விளக்குகிறது.

**- மகேஷ், திருச்சி.**

* அரசு அவர்களின் 'பரவசம்' கவிதை உண்மையில் பரவசத்தை ஏற்படுத்துவதுடன், ஒவ்வொரு புரட்சியாளனின் எண்ணத்தையும் பிரதிபலிக்கின்றது. இலட்சுமணப் பெருமாளின் சிறுகதை ஒரு குடும்பப் பின்னணியில் விவரித்தாலும், தனியார் மயம் - தாராள மயம் இதனால் வேலையின்றி அல்லல்படும் மக்களுக்காக விபச்சாரத்தை 'தொழில்' என்று மைய அரசின் மந்திரிசபை சட்டம் கொண்டு வரலாம். அப்போது மாமா வேலையை அரசே நின்று செய்யும்.

**- பழனி, மணிப்பூர்**

* **பிணங்கள் பேசுகின்றன:** அகதியின் கடிதத்தில் சாதாரணமாக நேரடி விவரங்களாக தெரிகின்றன, அந்த கோரிக்கைகள். ஆனால் அந்த கோரிக்கைகளை அவசியப்படுத்திய அவர்களது உணர்வுகளை அறிந்து பதிவு செய்திருப்பது பரவசப்படுத்தியது. அப்படியே நிமிர்ந்து 'நீங்கள்' எனும்போது, 'அகதி தற்கொலை என்ற செய்தியின் மீது உங்கள் இரக்கம் நிறைந்த கண்கள் நின்றனவா? கலங்கினவா' என்று கேட்கும்போது கழுவிலேற்றப்பட்டது போன்ற உணர்வு. துப்பாக்கி நிழலில் வாழ்வதைப் பற்றி சொல்லும்போது 'கார்கிலின் போது ஆயுத பூசை செய்தீர்களே அதுதான்' என்பது வெடுக்கெனச் சீண்டுவதாக இருந்தது.

**சில ராப்பாடிகள்:** இரண்டு விலைமாதர்களின் இழிந்த வாழ்வைச் சொல்வதாக யாரும் பார்த்துவிட முடியாது. உயரத்திலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் விரிந்து கிடக்கும் இயற்கை எழிலை அறிவிக்க ஆகச் சிறந்ததென ஒரு சின்ன கட்டம் கட்டுகிறானே ஒரு புகைப்படக் கலைஞன், அதேபோலத்தான் பரந்து விரிந்த அந்த வட்டாரத்து மக்களின் வாழ்வினை எடுத்துச் சொல்ல சரசு, செல்லம்மாள், காளப்பாண்டி, லாரி டிரைவர் என்ற நான்கே பாத்திரங்களை கட்டம் கட்டியிருக்கிறார். லட்சக்கணக்கான மக்களின் வாழ்வின் நிலைமைகளை துயரத்தை சொல்லாமல் சொல்லுகிறது. இலக்கிய நயம் என்பதெல்லாம் எதற்குள் ஒளிந்து கொண்டு இப்படி மனசைப் பிழிகிறது என்றே சொல்லத் தெரியவில்லை.

கடைசியாக காளப்பாண்டி அட்வான்சை திருப்பி வாங்க வந்து நிற்பதாக முடித்திருக்கிறார். உழைக்கும் வர்க்கத்திற்கு இது வாழ்வுக்கான வழியாகி விடாது என்பதை இதைவிடச் சிறப்பாக சொல்ல முடியுமெனத் தோன்றவில்லை. அற்புதம்.

**- சிங்காரம், திருச்சி.**

* ஸ்டாலின் மீதான அவதூறு என்ற தொடர் கட்டுரை மிகவும் தேவையான கட்டுரை. வில்லியம் ரடால்ப் ஹெர்ஸ்ட் என்ற கோடீஸ்வர அவதூறு பொறுக்கியின் செயலைப் படித்தபோது வேதனையாக இருந்தது. 'ஸ்டாலின் எதிர்ப்பில் புதிய வானவில் கூட்டணி' பெட்டிச் செய்தியில் ஓம்கார், மணியரசன், மொகித்சென் மற்றும் ஜெயமோகன், சுந்தரராமசாமி முகங்களைக் கிழித்தது சரியானது.

**- செம்மலர் மா. நடராசன்,**
**அறந்தாங்கி.**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 18
• குரல்: 1
• ஜூன் - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# சாதி ஆதிக்கத்திற்கு சமூக, சட்டபூர்வப் பாதுகாப்பு!

சில ஆண்டுகளுக்கு முன்புவரை தென்மாவட்டங்களை மட்டுமே பெரிதும் உலுக்கிய சாதிவெறிப் படுகொலை - கலவரங்கள் இப்போது கடலூர் மாவட்டத்தைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. அதன் கோரத்தைக் காட்டும் சம்பவங்களில் ஒன்று சிதம்பரம் அருகே மா.புளியங்குடி என்ற கிராமத்தில் நடந்திருக்கிறது. அங்கே காலனியின் பொது இடத்தில் உறங்கிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மூன்று பேரை நள்ளிரவில் சூழ்ந்து கொண்ட வன்னியக் கொலை வெறிக் கும்பல் வெட்டிக் கொன்றிருக்கிறது. காரணம், தாழ்த்தப்பட்ட ஒரு பெண்ணுடன் உறவு வைத்துக் கொண்டிருந்த வன்னிய இளைஞனைக் காலனியிலேயே பிடித்து வைத்து மணம் செய்து கொள்ளும்படி கோரினார்கள், சில தலித் இளைஞர்கள். ஒப்புக் கொண்டு அந்த இளைஞனை மீட்டுக் கொண்டுபோன வன்னியர்கள் அதற்குப் பழி தீர்த்துக் கொண்டனர். அதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக சில வன்னியருக்குச் சொந்தமான கள்ளச்சாராய ஊறலை அழித்திருக்கிறார்கள். "இந்தக் குற்றத்துக்காக" வன்னியர் பஞ்சாயத்து விதித்த 2 ஆயிரம் ரூபாய் தண்டனைத் தொகையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் கட்ட மறுத்தனர்.

"எங்களுக்கும், காலனிப் பெண்களுக்கும் நீண்ட காலமாகவே தொடர்பு உண்டு. பணத்துக்கு ஆசைப்பட்டு அவங்களே வருவாங்க. இதை அங்கேயுள்ளவர்களும் கண்டுக்க மாட்டாங்க. ஆனால் இப்போது மட்டும் பெருசா ஏதோ நடந்துவிட்டது போல இந்த விடுதலைச் சிறுத்தை ஆளுங்க பிரச்சினை பண்றாங்க. காலனியிலிருந்து சென்னைக்கு ஓடிப்போன நாலு பசங்க ஊருக்குள் வரும்போதெல்லாம் இப்படி ஏதாவது பிரச்சினை ஏற்படுது. இந்த முறை வைக்கோல் போரை எரிச்சதோடல்லாமல் சாராய ஊறலையும் உடைச்சிட்டாங்க" என்கிறது வன்னியரின் குரல். சாதி ஆதிக்கத் திமிர் இதைவிட மூர்க்கமாக வெளிப்பட முடியாது. பரம்பரை சாதி ஆதிக்கத்தோடு அரசியல், சமூக விரோத கிரிமினல் ஆதிக்கமும் கைகோர்த்துக் கொண்டிருப்பதை எல்லா சாதிவெறிப் படுகொலை - கலவரங்களிலும் காண முடிகிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதி - இட ஒதுக்கீடு, அரசியல் அதிகாரத்தில் பங்கீடு கோரி உருவாக்கப்பட்ட அமைப்புகளே இத்தகைய சக்திகளின் பின்பலமாக நிற்கின்றன. எந்தப் பார்ப்பனீய ஆதிக்கத்துக்கு எதிராக சமூக நீதித் தத்துவம் பேசி இந்த அமைப்புகள் உருவாகினவோ, அதே பார்ப்பனீய சக்திகளின் தலைமையில் இவை கூட்டணி சேர்ந்துள்ளன. எனவே, பார்ப்பன சனாதன சக்திகள் வழக்கமான சதிகார - நயவஞ்சகத்தோடு, ஆர்.எஸ்.எஸ். பாணி பாசிச முறையில் தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும் துணிந்துவிட்டன. அதே கடலூர் மாவட்டம் சிதம்பரம் தில்லை நடராசர் கோவிலில் பார்ப்பன தீட்சிதர்கள் நடத்தும் சாதி வெறியாட்டம் இதற்கான எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

தில்லை நடராசர் கோவிலின் கருவறைக்கு எதிரே உள்ளது சிற்றம்பல மேடை. அதன் மீது ஏறி நின்று திருவாசகம் பாடிய ஆறுமுகசாமி என்ற அறுபது வயது முதியவரை கோவில் பார்ப்பனப் பூசாரிகளான தீட்சிதர்கள் அடித்து, உதைத்து, கோயிலுக்கு வெளியே வீசியெறிந்துள்ளனர். ஒருமுறை, இருமுறை அல்ல, பலமுறை இப்படித் தாக்கியுள்ளனர். அதே சிற்றம்பல மேடையேறிய ராஜமணி என்ற தீட்சிதரை தமிழில் பாடினார் என்பதற்காக மிரட்டி - ஏசி வெளியே தள்ளியுள்ளனர். இது குறித்த புகாரை ஏற்று நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர், போலீசார். இதுபற்றி, "அம்பலத்துல நின்று பாடறதுக்குன்னுதான் நாங்க இருக்கோமே... இங்கே எதுக்கு ஆறுமுக சாமி...? அம்பலத்துக்குக் கீழே நின்று பாடினா பகவான் ஏத்துக்க மாட்டாரா? ஆறுகால பூஜை நேரம் போக பக்தர்கள் யாரு வேணும்னாலும் சன்னதியில் - அம்பலம் தவிர எங்கே வேணும்னாலும் நின்று பாடிக்கலாம். இதுக்கு நாங்க தடை சொல்றதில்லே! எங்க உரிமையைப் பறிக்க யாரையும் அனுமதிக்க மாட்டோம்." என்று சாதித் திமிரோடு கூறியுள்ளனர், தீட்சிதர்கள். அவர்களின் பின்பலமாக இருந்து ஆர்.எஸ்.எஸ். இயங்குவது தெரிய வந்துள்ளது.

சிற்றம்பல மேடையேறி திருவாசகம் பாடிய ஆறுமுகசாமி தீண்டத்தகாதவர் என ஒதுக்கப்படும் தாழ்த்தப்பட்ட சாதிக்காரர் அல்ல, தமிழில் தேவாரம் பாடிய ராஜாமணி தீட்சிதரும் பார்ப்பனர்தான். இருந்தாலும், தமிழ் தீண்டத்தகாத "நீச பாஷை" எனவும் பார்ப்பனல்லாதவர் அனைவரும் தீண்டத்தகாதவர் எனவும் இழிவுபடுத்தப்படுவது நடக்கிறது. கிரமமான சாதி அடுக்கில் ஆறுமுகசாமி எப்படித் தீண்டத்தகாதவர் என்று பார்ப்பனர் ஒதுக்கி ஒடுக்குகிறார்களோ, அதேபோல வன்னியரும் தனக்குக் கீழுள்ள மக்களை ஒதுக்கி ஒடுக்கினர். தில்லையில் பார்ப்பன தீட்சிதரும், மா. புளியங்குடியில் வன்னியரும் பேசுவதும் செய்வதும் ஒரே அடிப்படையிலான சாதிவெறி ஆதிக்கம்தான். சாதிய அடக்குமுறைக்கும் அநீதிக்கும் பலியான சமுதாயம் என்று சொல்லி சமூகநீதி கேட்டுப் பெற்று அனுபவிக்கிறார்கள். ஆனால், அதே சாதி வெறியை அநீதியை பிற சமுதாய மக்கள் மீது ஏவிவிடுகிறார்கள். சமூக நீதிக்காரர்களின் சாதி ஆதிக்கத்திற்கு சமூகரீதியிலான பாதுகாப்பு இருக்கிறது. பார்ப்பனர்களின் சாதி ஆதிக்கத்துக்கு சட்டபூர்வப் பாதுகாப்பு இருக்கிறது. இந்த சமூக, சட்டப் பாதுகாப்புகளைத் தகர்க்காமல் சமபந்தி, சமத்துவபுரம் போன்ற தீர்வுகளால் ஒரு பயனும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



# வறட்சியின் வள்ளல்கள்

"உதவி செய்வதுபோல
கையை நீட்டுகிறார்கள்
நெற்றியில்
சாவின் அறிகுறிகளைக்
கண்டால் போலும்.
சில நாடுகளில்
தண்டிக்கப்பட்டவர்களைத்
தூக்கில் போடுவதற்கு முன்பு
கொலையாளி
அவனை முத்தமிடுவது கூட
சம்பிரதாயமாக இருக்கிறது"

நாஜிக்களின்
வதைமுகாமில் காட்டப்படும்
போலிமனிதாபிமானத்தை
இப்படி தோலுரித்துக் காண்பித்தார்
செக் நாட்டு கம்யூனிசப் போராளி
ஜூலியஸ் பூசிக்.

குஜராத், ராஜஸ்தான், உ.பி., ம.பி.,
ஆந்திரா என
வறட்சியின் மரண ஓலங்கள்
இந்தியா ஒரு வதைமுகாம் என்பதை
மீண்டும் நிரூபித்து விட்டன.

கொலையாளிகளின் முத்தக்கறைகளும்
போலி மனிதாபிமானத்தின்
இரைச்சல்களும்
வெளிச்சத்துக்கு வந்துவிட்டன.

உயிரோடு இருக்கும்போது
பிழிந்து எடுக்க முடியாததற்கும் சேர்த்து
அழுத்தமாக ஆரத்தழுவுகிறார்கள்
வறட்சியின் பிணங்களை.

வறட்சியின் கோர முகங்களை
வண்ணப்படத்தில் காட்டி
நெஞ்சை இளகவைக்கிறது
இந்து நாளேடு.

"இது அநியாயம், அரசின் அலட்சியம்"
இந்தியா டுடே ஆவேசம்.
தனியாருக்கு விடுவதே நியாயம் என்று
சதா சங்கு ஊதும் இந்தியா டுடேவுக்கு
எப்படி வந்தது அரசின்மேல் கோபம்?

ஒருவேளை பிணங்களையும்
தனியாரிடம் ஒப்படைக்காததால் வந்த
தர்மாவேசமா?

குடிநீர், சாலைவசதி போன்ற
அடிப்படை பிரச்சனைகளுக்காக
போராடினாலே
பொதுமக்களுக்கு இடைஞ்சல்,
போக்குவரத்து பாதிப்பு என்று
சண்டமாருதம் செய்யும்
'இந்தியாவின் மனசாட்சி' இந்துவுக்கும்
'தமிழகத்தின் மனசாட்சி' தினமணிக்கும்
வறட்சியின் பிணங்களுக்காக
கருணை வந்ததெப்படி?

"எங்கள் இதயத்திலும்
மினரல் வாட்டரின்
ஈரம் மிச்சமிருக்கிறது"
என்பதை காட்டிக் கொள்ள இதைவிட
அரிய சந்தர்ப்பம் கிடைக்காது என்ற
அவசரமா? இல்லை அச்சமா?

கேர் டுடே என்ற பெயரில்
வறட்சி நிவாரணநிதி திரட்டும்
இந்தியாடுடே
வாசந்தியிடம் இருக்கிறது
இதற்கான பதில்.
"பாலத்துக்கடியில் காய்ந்த வயிறுடன்
படுத்திருக்கும் பிச்சைக்காரனும்,
சாலையில் அலையும்
வேலையில்லா பட்டதாரியும்,
வானம்
பார்த்த கிராமத்து விவசாயியும்
'ஜெகத்தினை'
அழிக்க
பாரதி கொடுவாள் மீசையுடன்
நிற்பதை உணர்கிறேன்.
நான் அமர்ந்திருக்கும்
குளிர்பதன அறையும்,
ஏ.சி. காரும்
என்றைக்காவது அதன் இலக்காகலாம்
என்கிற பீதி என்னைக் கவ்வுகிறது."
(மே 17 இந்தியா டுடே)

பயத்திலும் கூட பாரதியின் மீசையை
நெஞ்சில் நிறுத்தும் உங்கள் எச்சரிக்கை
யாருக்கு வரும்?

வறட்சியின் வள்ளல்களே!
"தனியாருக்கு விடவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்" என்ற
உங்களின் வெறித்தனத்தில்
விளைந்ததல்லவா இந்த வறட்சி

சவத்துணியின் மூலமாக
எங்களது பிணத்தை மறைக்கலாம்
போர்த்திய உங்களது
குணத்தை மறைக்க முடியுமா?

கொலைகாரர்களே
மலர்வளையம் வைக்கவும்
கருவறுத்தவர்களே
தொட்டில் கட்டுவதுமான

சடங்கைச் செய்வது
சாத்தியமானதெப்படி உங்களுக்கு?

வறட்சியின் மயான அமைதிக்குப் பின்னே
மறைந்திருக்கிறது
உங்கள் சில்லரை சத்தம்.

முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு
சில வறட்சியின் முகவர்கள்
வெளிப்படையாகவே
தமது காருண்ய முகத்தைக்
கழட்டி எறிய ஆரம்பித்து விட்டார்கள்
இந்திய தொழிற்கழக கூட்டமைப்பின்
புதிய தலைவர் அருண் பரத்ராம்
"வறட்சி நிவாரணநிதி என்று எதுவுமே
ஒதுக்கவே கூடாது.
அதனால் இந்தியாவின்
வளர்ச்சிக்கு
என்ன லாபம் இருக்கிறது?"
என்று கேட்கிறார்.

"யாரைக் கேட்கிறாய் வரி?" என்று
அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கும்
தரகு முதலாளிகளுக்கு இது எம்மாத்திரம்?
"இலவச மின்சாரம் கொடுத்ததால் மக்கள்
ஏராளமாக நிலத்தடிநீரை உறிஞ்சி

**வறட்சியின் வள்ளல்களே!**
**'தனியாருக்கு விடவில்லையெனில்**
**ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற**
**உங்களின் வெறித்தனத்தில்**
**விளைந்ததல்லவா இந்த வறட்சி?**


படிப்பகம்

www.padippakam.com

வறட்சியை ஏற்படுத்திவிட்டார்கள்.
எனவே இலவச மின்சாரத்தை
ரத்து செய்ய வேண்டும்''

தீர்ப்பு வழங்குவது யார்?
நேற்றுவரை
'எங்கள் போர்வெல்லைப் போட்டு
விளைச்சலைப் பெருக்குங்கள்' என்று
மக்களிடம்
போர்வெல் விற்று
மகசூல் கண்ட
முதலாளிமார்கள்தான்.

சாகும்படி அம்பையும் எய்துவிட்டு
சாகக் கிடந்த கர்ணனிடம்
கவசகுண்டலங்களையும்
கழட்டித் தருமாறு கேட்ட
கிருஷ்ணபரமாத்மாக்களின் வாரிசுகளுக்கு
கற்றுத் தரவா வேண்டும்?

எரிகிற வீட்டில் அவர்களுக்கு
புடுங்கிய வரை ஆதாயம்.
ஆளாளுக்குத் தண்ணீர் எடுத்தால்
அதை பாட்டிலில்
அடைத்து விற்பதற்காக
பலகோடி முதல்போட்ட நாங்கள்
எப்படி லாபத்தை எடுப்பது என்று
துடித்துப் போகிறார்கள் முதலாளிகள்.

கங்கா ஜலத்தை கையளவு செம்பில்
முன்னரே விற்ற மூத்தகுடி
என்ற பெருமையோ!

○●○

"தாகம் என்றால் மக்களுக்கு
தண்ணீர் நினைவுக்கு
வரக்கூடாது.
கொக்கோகோலா என்று
வரவேண்டும்.
எனவே எங்களுக்குப் போட்டி
பெப்சி அல்ல தண்ணீர்தான்''

மக்களிடமிருந்து
தண்ணீரைப் பறித்துக் கொள்ள
தருணம் பார்த்துக் கொண்டிருக்கும்
கொக்கோ கோலா நிர்வாக இயக்குனரின்
குறிக்கோள் இது.

தண்ணீர் விற்பனையிலேயே ஆண்டுக்கு
3 லட்சத்து 20,000 கோடி கல்லா கட்டும்
அமெரிக்க என்ரான் கம்பெனியின்
குறிக்கோளோ
உலகத்தின் ஜீவநதிகளையெல்லாம் தனது
லாபநதியாக்கி விடவேண்டும் என்பது.

உலகத்தில் முன்னணியில் இருக்கும்
பன்னாட்டுக் கம்பெனிகள் மூன்றின்
முக்கிய வருமானம்
தண்ணீர் விற்பனையால்
வருகிறது
என்றால் நம்ப முடியுமா உங்களால்.



வறட்சி நிவாரணநிதியளிக்கும் பம்பாய் நட்சத்திரங்களிடம் - வாஜ்பாயின் அரட்டை.

தண்ணீருக்குக் காசா? என்று
தவித்துக் கேட்பவர்கள் இருக்கும்
இந்த நாட்டில்தான்
தாய் தந்தைக்கு ஒரு கழிப்பறை
தனக்கு ஒரு கழிப்பறை
தன் நாய்க்கு ஒரு கழிப்பறை
கட்டிக் கொண்டு
அத்தனைக்கும்
அரசின் குடிநீர்வாரியத்தையே
கொள்முதல் செய்து கொள்ளும்
குபேரர்களும் இருக்கிறார்கள்.

வறட்சியின் தாக்குதலில்
தாய்ப்பால் சுண்டிப்போய்
ஊரைவிட்டு ஓடத் தெரியாதவர்கள்
வாழும் இந்த நாட்டில்தான்
தனது வளர்ப்பு மிருகங்களுக்கும்
மினரல் வாட்டர் இல்லையென்றால்
"என்ன நாடு இது?'' என்று
எரிச்சல் அடைபவர்களும்
இருக்கிறார்கள்.

"குடிநீர்க் குழாய் இல்லாமல்
என்னடா பஸ் ஸ்டாண்டு?'' என்று
கோபம் வருவதில்லை
இந்தக் கனவான்களுக்கு.
எங்கள் மேலுக்கும் கீழுக்கும்
மினரல் வாட்டர் இல்லாமல்
என்னடா ஊர் என்று
பொங்கி எழுகிறார்கள்
இந்த தனவான்கள்.

'இன்டர் நேஷனல் லெவல்' பானங்களை
சுலபமாக இறக்குமதி செய்யும்படி
இன்றும்
தாராளமயப்படுத்த வேண்டும் என்பது
நகரத்தை
உறிஞ்சி வாழும் வர்க்கத்தின் கவலை.

பொழுது விடிந்தால் குடும்பமே
கழிக்கவும், குளிக்கவும்
சுலாப் இண்டர்நேஷனலுக்கு காசை
கொட்டி அழவேண்டுமே என்பது
நகரத்தில்
உழைத்துவாழும் வர்க்கத்தின் கவலை.

வெளிநாட்டு மூலதனத்தை
விலக்கக்கூடாது என்ற வெறியோடு
நமது வேரறுத்து வெள்ளிப்பணம் சேர்த்த
கும்பல் தான்
இப்போது
கொள்ளிப் பணம் தர வருகிறது.

ராஜஸ்தானில் ஒரு குடம் தண்ணீர்
பத்து ரூபாய் என்று படித்துவிட்டு
நிலமை இங்கு பரவாயில்லை என்ற
நினைப்போடு ஒரு லிட்டர் தண்ணீரை
பன்னிரண்டு ரூபாய் கொடுத்து குடிக்கும்
நடுத்தர வர்க்கமே,
அப்படியானால் தமிழ்நாடு என்ன
வறட்சி பாதித்த மாநிலமா?

நடக்காத காரியத்தை
தண்ணீரில் எழுதி வை
என்பது கடந்த காலம்
"இந்த தண்ணீர் எங்கள் கடமை'' என்ற
அதிகாரபூர்வ எழுத்தோடு
திருப்பூரில் திறக்கப்பட இருக்கிறது
தனியார் தண்ணீர் விநியோகம்

இன்னும் 69 நகரங்களில்
அமல்படுத்தி
உடன் பிறப்புகளின் வாழ்க்கையை


படிப்பகம்

www.padippakam.com



குஜராத், ராஜ்கோட்டிற்கு அருகே வாரம் இருமுறை அரைமணிநேரம் நிற்கும் தண்ணீர் வண்டிக்காக அணிவகுக்கும் பாத்திரங்கள்.

ஊத்தி மூடக் காத்திருக்கிறது
கலைஞர் அரசு.

தண்ணீரை தனி உடமை ஆக்கும்
அயோக்கியத்தனத்தை ஒரு பக்கம்
ஆமோதித்துக் கொண்டே
இன்னொரு பக்கம்
வண்ணத் தொலைக்காட்சிக்கு முன்பு
வறட்சியின் கோரத்தைப் பார்த்து
நீலிக் கண்ணீர் வடிப்பதை
நிறுத்துங்கள் முதலில்.

○●○

தண்ணீர் வெறும் திரவமல்ல
மக்களது வாழ்க்கை, சுயமரியாதை,
பண்பாடு
அனைத்திற்குமான தாய்ப்பால்

கையிலிருக்கும் கொஞ்சம் குடிநீரை
யாருக்குத் தருவது? யாரைச் சாகவிடுவது?
மடி திறந்து படியளந்து பால் கொடுத்து
குடும்பத்தில் ஒரு உறுப்பினராக
உறவாடிய
கால்நடைகளுக்கா?

கண்களின் பசையும் வற்றி
உதடுகளின் ஈரத்தை உறிஞ்சவரும்
ஈக்களை
விரட்டவும் தெம்பில்லாமல்
கிடக்கும்
தனது குடும்ப முதியவர்களுக்கா?

இந்தக் கோரமான சூழ்நிலையைக்
கொண்டு வந்தது யார்?

ஒரு குவளை நீருக்காக
தனது மனைவியை
கயிற்றில் கட்டி பாழும் கிணற்றில் இறக்கி
பறிகொடுத்த ராஜஸ்தான் விவசாயியை
கல்நெஞ்சக்காரன் என்பீர்களேயானால்
இந்தச் சூழ்நிலைக்குக் காரணமான
கல்லுளிமங்கர்களை
என்னவென்று அழைப்பது?

உலகவங்கி உதவியுடன் குடிநீர்த் திட்டம்
இந்தியன் வங்கி உதவியுடன்
எருமை வளர்ப்புத் திட்டம் என்று
தேட்டை போடத்தெரிந்த
தேசாபிமானிகளே
இப்பொழுது எந்தவங்கி உதவியுடன்
எங்களை எரியூட்டப் போகிறீர்கள்?

எல்லாம் முடிந்துவிட்டது
அனாதைப் பிணங்களைக் கணக்கெடுக்க
அதிகார வர்க்கத்தின் நடைபிணங்கள்
நகரத் தொடங்கி விட்டன.
இன்னும் உயிரோடிருப்பவர்களை
நோட்டம் பார்க்க.
பிணம் தின்னிகள்
பேச ஆரம்பித்து விட்டன

பெத்த தாய் தகப்பனுக்கு
சோறுபோட வக்கில்லாத
உதவாக்கரைப் பிள்ளை
இவர்கள் செத்தபிறகு சீரும் சிறப்புமாக
பாடையைச் சோடித்து
ஊரைக் கலக்குவது போல

பிணங்களின் மீதான
எங்களது உரிமையை
விட்டுக் கொடுக்க மாட்டோமென்று
பேச ஆரம்பித்து விட்டன
பிணந்தின்னிகள்.

வறட்சியின் விற்பனையாளர்களே!
உங்கள் 'கிளிசரின்' நெடியைத்
தாங்க முடியவில்லை எங்களால்.

உங்கள் இரக்கத்தின்
அருவெறுப்புக்கு முன்னே
கூசுகின்றன எங்கள் பிணங்கள்.
வாழ்வதற்கான அத்தனை வழிகளையும்
அடைத்து விட்டு
காசு கொடுத்தால் கதவு திறக்கும்
பொருளாதாரக் கொள்கைக்காகவே
உயிர்வாழும்
உங்கள் போலி மனதாபிமானம்

புரிந்து விட்டது எங்களுக்கு.

"ஜனங்களைக் கவருவது பற்றி
கவலைப்படாத
துணிச்சலான
ஒரே முதலமைச்சர் நாயுடுதான்,
நாயுடு வெற்றி பெற்றதில்
மகிழ்ச்சி என்றால்,
பஞ்சாபில் இலவச மின்சாரம்
வாக்களித்த பிரகாஷ்சிங் பாதல்
தோற்றுப் போனதும்
மகிழ்ச்சியான விசயம்தான்
ஏதோ கொஞ்சநஞ்சமாவது
நம்பிக்கை தெரிகிறது"
(இந்தியா டுடே அக்.20,1999)

கறிசோறு சாப்பிடுபவனின்
கையையும், வாயையும் பார்த்தபடி
அவமானத்தைத் தாங்கிக் கொள்ளும்
நாயின் துணிச்சல் நாயுடுவுக்கும் வர
எசமான் வர்க்கம் இந்தியாடுடேவுக்கு
ஏக நம்பிக்கை

வறட்சிக்குக் கண்ணீர் வடிக்கும்
தினமணியின் கைங்கர்யம் இது
"அத்தியாவசியப் பொருள்களின்
விலை உயர்வைக் காரணம் காட்டி
அடிக்கடி வேலை நிறுத்தம்
கடையடைப்பு நடத்தினால்
நாட்டின் தொழில் வளர்ச்சியும்
சாதாரண மக்களும்
பாதிக்கப்படுவார்கள்"
தினமணி போன்ற 'சாதாரண' வர்க்கம்
அன்றாடம் காய்ச்சிகளின்
'தொழில் வளர்ச்சியில்'
அக்கறைப்படும் பாசாங்கு இது.

இந்தப் பிணந்தின்னிகள் தான்
நீலிக்கண்ணீரோடு
நீட்டி முழக்குகிறார்கள் இப்படி
"வறட்சியைப் போக்க நிரந்தர தீர்வுக்கான
ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்
நாம்."

வழியைக் கண்டுபிடித்துவிட்ட நாம்
உரக்கச் சொல்லுவோம்

"உங்களை ஒழிப்பதுதான் ஒரே வழி"

● துரை சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com

தொடர் கட்டுரை: 6

# சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்



# கிறித்தவச் சீரழிவும், இசுலாமிய பயங்கரவாதமும்

"இன்று உலகில் அதிக குற்றங்கள் செய்பவர்களை உடைய நாடு என்பது கிறிஸ்தவ நாடுகளாய்த்தான் உள்ளது. லட்சியமற்ற வாழ்க்கையை வாழ்ந்து வரும் அங்நாட்டு மக்கள் போதை, காமம் ஆகிய வற்றுக்கு உட்பட்டு நம்பிக்கையற்ற வாழ்க்கை நடத்தி வருவதுடன் சமுதாய சீர்கேட்டிற்கு காரணமாய் இருந்து வருகி றார்கள். இசுலாம் நாடுக்ளில் ஜனநாயகம் என்பது மருந்திற்குக் கூட இல்லாத நிலை. ஒருநாடு ஒரு நாட்டை ஏப்பம் விட்டு வருகி றது. இசுலாத்தால் உலகத்தில் சமாதானத் திற்குப் பதில் சகிப்பற்ற தன்மையும் யுத்த மும்தான் ஏற்பட்டு வருகிறது. இங்நி லையில் மீண்டும் ஒரு உலகப்போர் ஏற்ப டுமானால் அது கிறித்தவ நாடான அமெரிக் காவின் ஆதிக்க வெறியாலோ, அல்லது உலகம் முழுவதும் இசுலாம் மயமாக்க விரைந்து செயல்பட்டு வரும் முசுலீம் நாடு களாலோ தான் ஏற்படும். இது உலக சமா தானத்திற்கு ஆபத்தையே ஏற்படுத்தும்."

– 'மதமாற்றத் தடை சட்டம் ஏன்?' இந்து முன்னணி வெளியீடு. பக்: 42

"மேலை நாடுகளில் உள்ள பெண்கள் யார் அழைத்தாலும் சோரம் போவார்கள். ஆண்கள் காமவெறியுடன் குடி, கூத்து என்று அலைகிறார்கள். இத்தகைய பண்பாட்டுச் சீரழிவுக்குக் காரணம் கிறித் தவ மதம். இசுலாமிய நாடு என்றால் கோ மேனி, சதாம்உசேன், இடி அமீன், கடாஃபி, ஜியாவுல் ஹக், தாலிபான் போன்ற சர்வாதி காரிகள், பயங்கரவாதிகள்தான் நினை வுக்கு வருவார்கள். இதற்குக் காரணம் முசுலீம் மதம். இவற்றுடன் ஒப்பிடும் போது நம் நாட்டின் ஜனநாயகம், அகிம்சை, உயர்ந்த பண்பாடு ஆகிய வற்றின் அடிப்படை இந்து மதம்தான்." இவைதான் இந்நூற்றாண்டு முழுவதும் இந்திய செய்தி நிறுவனங்கள் உருவாக்கி வரும் பொதுக் கருத்து. இதிலிருந்து கட்டி யமைக்கப்பட்ட விசமப்பிரச்சாரம்தான் மேற்கண்ட இந்துமதவெறியர்களின் அவ தூறு.

இது உண்மைதானா என்ற பரிசீலிப்ப தற்கு இவர்கள் கூறுகின்ற ஜனநாயகம், உயர்ந்த பண்பாட்டை இந்து மதமும், இன்றைய இந்தியாவும் கொண்டுள்ளதா என்பதைப் பார்ப்போம்.

### இந்து மதம் ஜனநாயக மதமா?

முதலில் இந்து மதம் ஒரு மதமே அல்ல. மதம் என்ற வகையில் உள்ள ஆன்மீகவிசயங்களை விட, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சட்டதிட்டங்களே அதனுடைய சாரம். நேற்றும், இன்றும் இந்திய வாழ்வின் பல நிலைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் அந்தச் சாரத்தின் அடிப்படையே ஜனநாயக மறுப்புதான்.

சாதி, மொழி, இன, பாலியல் ஒடுக்கு முறைதான் இந்துமதத்தின் நான்கு வேதங்கள். இம்மையில் மட்டுமல்ல மறு மையில் கூட உழைக்கும் மக்களுக்கு விடு தலை கிடையாது எனும் மதம் இது மட்டுமே. வாழ்க்கை முறை, சட்டதிட்டம், தண்டனை அனைத்தும் பார்ப்பன - சமஸ் கிருத இலக்கியங்கள் முழுவதிலும் பெருக் கெடுத்து ஓடுகின்றன. இலக்கியத்தில் மட்டுமல்ல இன்று வரை நடைமுறை யிலும் இந்திய உழைக்கும் மக்களை மூழ்க டித்தே வந்திருக்கின்றன. இப்படி பிறப்பு முதல் இறப்பு வரை பெரும்பான்மை மக்க ளுக்கு ஜனநாயகத்தை மறுத்த கொடூரமான வாழ்க்கை விதிகள் பைபிளிலோ, குர்-ஆனிலோ நிச்சயம் இல்லை.

### இந்து மதம் ஒழுக்கமான மதமா?

வாத்ஸ்யாயனாரின் காமசூத்திரம், அச்சில் ஏற்ற முடியாத ஆதி சங்கரனின் சௌந்தர்ய லஹரி, அஜந்தா - கஜுராகோ சிற்பங்கள் போன்றவையும், புராணங் களின் காமவெறி வக்கிரங்களும் இவர் களின் ஒழுக்கத்தை பறைசாற்றுகின்றன. ஓடிப்போன சங்கராச்சாரி, கம்பி எண்ணும் பிரேமானந்தா முதல் கிராமத்தின் குறி சொல்லும்சாமியாடி வரை, இந்துமதத்தின் ஒழுக்கத்தைப் பறைசாற்ற அடிக்கடி தலைப் புச் செய்திகளில் இடம் பெறுகிறார்கள்.

அடுத்து சூத்திரன் என்ற நான்காம் வருண மக்களுக்கு இந்துமதம் கூறுகின்ற பொருளைப் பார்ப்போம். படிதாண்டிய மேல் வருண - சாதிப் பெண்களுக்கும், கீழ் வருண - சாதி ஆண்களுக்கும் பிறப்பவர் களே சூத்திரன் அதாவது வேசிமகன் என்று பார்ப்பனியம் வரையறுத்தது. இப்படி தன் சொந்த நாட்டின் பெரும்பான்மை ஆண்க ளையும், பெண்களையும் ஒழுக்கம் கெட்டு சோரம் போனவர்கள், வேசி மக்கள் என்று வரையறுத்து நடத்திய ஒரே மதம் இந்து மதம்தான், இத்தகைய கேவலத்தை உலக மதங்கள் எவற்றிலும் பார்க்கமுடியாது என்கிறார் அம்பேத்கர்.

சரியோ, தவறோ ஒரே வகையான ஒழுக்கத்தை தத்தமது மதங்களில் இருக்கும் அனைவரும் பின்பற்ற வேண்டும் என ஏனைய மதங்கள் கூறுகின் றன. ஆனால் இந்து மதம் மட்டுமே சாதி - வருணத்திற்கேற்றபடி ஒழுக்கம் சட்ட திட்டங்களை மாற்றி அமல்படுத்துகிறது எடுத்துக்காட்டாக மேல்சாதி - வருண ஆண்கள் எல்லா சாதிப் பெண்களையும் பெண்டாளலாம், கீழ் சாதியினரைக் கொலை செய்யலாம், வரையறை இல்லாமல் சொத்து சேர்க்கலாம் - தானப் பெறலாம் - கொள்ளையடிக்கலாம். இந்த 'சலுகைகள்' கீழ் சாதியினர்க்கு கிடையாது என்பதோடு இவற்றுக்கு உட்பட்டே வாழ வேண்டும். மீறினால் மரணதண்டனை இது புராணக் கதையல்ல என்பதையே கோபாலகிருஷ்ண நாயுடுக்களும், ரன்பீர் சேனாக்களும் நிரூபித்து வருகின்றனர்.

### இந்து மதம் அகிம்சையான மதமா?

பிற மதங்கள் வாயளவிலாவது அகிம் சையைப் போதிக்கின்றன. குறைந்த பட்ச தன்மதத்தினரிடையேயாவது அகிம் சையைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகின் றன. ஆனால் இந்துமதம் மட்டுமே தன் மதத்தினர் மீதே வன்முறை - பயங்கரவா தத்தை ஏவிவிடுகிறது. தர்மம் என்ற பெயரில் நியாயப்படுத்துகிறது. சம்பூகன், ஏகலைவன், நந்தன் ஆகியோரைப் பிரதி நிதிகளாகக் கொண்டுள்ள சூத்திர - பஞ்சம மக்கள்தான் இந்துமத வன்முறையின் சாட்சியங்கள்.

> இந்தியாவில் உள்ள சீரழிவுகள், பிரச்சினைகள் எல்லா நாடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றன. இசுலாமிய நாடுகள் பலவற்றில் ஜனநாயகம் இல்லை என்பதும் உண்மைதான். ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்கு மதம் காரணமல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### இந்தியா பண்பாட்டுச் சீரழிவு இல்லாத நாடா?

பிஞ்சுக் குழந்தைகளுக்கு இன்றுவ...



படிப்பகம்

www.padippakam.com



இராஜஸ்தான், ஜோத்பூர் நகரின் கிராமத்தில் அழுது கொண்டிருக்கும் 6 வயது சிறுமி ராதா, 10 வயது சிறுவன் சுந்தரை மணக்கும் காட்சி. மணநாள் 8.5.2000. பார்ப்பனியத்தின் பண்பாடு!

திருமணம் நடத்தும் இராஜஸ்தான் மாநிலம் இந்தியாவில்தான் இருக்கிறது. மூன்று லட்சம் குழந்தைகளை வைத்து சிறார் விபச்சாரத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நாடும் இதுதான். எயிட்ஸ் தடுப்புப் பிரச்சாரத்திற்கு அதிகம் செலவழிக்கும் ஆசிய நாடும், எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவுவதில் முதல் நிலையிலுள்ள நாடும் இந்தியாதான். பெண் சிசுக்கொலை, கட்டி வைத்து எரிக்கப்படும் கலப்பு மணக் காதலர்கள், ஸ்டவ் வெடித்து சாகும் மருமகள்கள், உடன் கட்டை ஏற்றிக் கொல்லப்படும் இளம் பெண்கள், உலகின் பழம் பெரும் விபச்சார நிறுவனமான தேவதாசி முறை ஆகியவற்றின் உறைவிடம் இந்தியாதான்.

மேலவளவு படுகொலை, தாழ்த்தப்பட்டவரின் இரத்தத்தில் பெயர் எழுதும் ரன்பீர் சேனா, முசுலீம்களின் தலைகளை விதைத்துப் பயிரிடப்பட்ட பகல்பூரின் காலி பிளவர் வயல்கள், சிறுநீரகங்களை வெட்டிக் கொடுத்து கடன் வாங்கும் நெசவாளர்கள், கடன் அடைக்க முடியாமல் தற்கொலை செய்யும் பருத்தி விவசாயிகள், இவற்றினை உலக வரலாற்றில் பார்ப்பது சிரமம். இந்தியப் போலீசின் உதவியோடு லாக்கப் கொலை - கற்பழிப்பிலும் இந்தியாவே முதலிடத்தில் வருகிறது. மேலும் தொழுநோய், காசநோய், யானைக்கால், பெரியம்மை, பார்வையற்றோர், ஊழல் இவற்றிலும் இந்தியா தான் முதலிடத்தில் இருக்கிறது.

**இந்தியா ஜனநாயக நாடா?**


பல இசுலாமிய நாடுகளை ஒப்பிடுகையில் இங்கே பெயரளவில் ஜனநாயகம் இருப்பது உண்மைதான். ஆனால் 'பெயரளவில்' என்ற பொருள்தான் மிகவும் முக்கியம். இப்படி பெயரளவு ஜனநாயகம் கிடைப்பதற்கு காரணம் இந்து மதப் பாரம்பரியம் அல்ல. பார்ப்பனிய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, சாதி - தீண்டாமை எதிர்ப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு, மன்னர் எதிர்ப்பு மற்றும் ஆங்கிலேய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களின் தவிர்க்க இயலாத விளைவாகத்தான் இந்த ஜனநாயகம் கிடைத்தது. இந்த ஜனநாயகத்தைப் பற்றி பெருமையடிக்கும் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் இந்த ஜனநாயக போராட்டங்கள் அனைத்தையும் எதிர்த்தே வந்திருக்கிறது.

இவர்களும், இவர்களின் முன்னோடிகளும், காங்கிரசில் இருந்த பார்ப்பன - மேல்சாதி வெறியர்களும், தேவதாசி ஒழிப்பு, விவகாரத்து சட்டம், வைக்கம் போராட்டம், தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்கள், விவசாயக் கூலிகளின் போராட்டம், நிஜாம் எதிர்ப்புப் போராட்டம், இந்து சிவில் சட்டம் அனைத்தையும் வன்மம் கொண்டு எதிர்த்ததே இந்நூற்றாண்டின் வரலாறு. எனவே இந்துமத வெறியர்களை ஓரளவுக்கேனும் முறியடித்ததால் கிடைத்ததே இந்தப் பெயரளவு ஜனநாயகம். இவர்களை முழுமையாக வீழ்த்தும் போதுதான் உண்மையான ஜனநாயகம் கிடைக்க முடியும். ஆனால் ஜனநாயகம் பேசும் இந்து மதவெறியர்களின் நோக்கம், இசுலாமிய நாடுகளைக் காட்டி இங்கேயும் பெயரளவு ஜனநாயக உரிமைகளை ரத்து செய்வதுதான்.

**இந்தியா பயங்கரவாதத்தைப் பரப்பாத நாடா?**

பயங்கரவாதம் என்பது யாரோ சில தீவிரவாதிகள் பாலத்துக்கோ, பிரதமருக்கோ குண்டு வைப்பது மட்டுமல்ல. உண்மையில் அரசு ஏவிவிடும் பயங்கரவாதத்தின் எதிர்விளைவுதான் இத்தகைய தீவிரவாதங்கள். எனவே அரசு பயங்கரவாதம்தான் பிரதானமானது. கலவரங்கள் அதிகமில்லாத குஜராத்தில் 15,000 பேர் தடா சட்டத்தில் கைதானது, பஞ்சாபில் 25,000 இளைஞர்கள் கொல்லப்பட்டு காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்த்தது, காஷ்மீரில் காணாமல் போனவர்களைத் திருப்பித் தருமாறு ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களைக்கூட காக்கை குருவி போல சுட்டுக் கொல்வது, வடகிழக்கில் போராளிகளையும், ஆந்திரா - பீகாரில் நக்சல்பாரி புரட்சியாளர்களையும் போலி மோதலில் சுட்டுக் கொல்வது, பஞ்சாப், ஈழம், வடகிழக்கு, காஷ்மீரில் போராடுகின்ற குழுக்களை உடைத்து கைக்கூலிக் குழுக்களை உருவாக்கியது, மனுக் கொடுக்க வந்த மாஞ்சோலைத் தொழிலாளர்களையும், நாக்பூர் கோவாரி பழங்குடியினரையும் அடித்துக் கொன்றது, வீரப்பன் தேடுதலைச் சாக்கிட்டு அதிரடிப்படை கிராமம் கிராமமாக பெண்களைக் கற்பழித்தது, இவையெல்லாம் இந்தி

1994-ஆம் ஆண்டு பீகாரின் மெட்கார் பகுதியில் மேல்சாதி குண்டர்படை ரன்பீர் சேனாவால் விதவையாக்கப்பட்ட தலித் பெண்கள் - பார்ப்பனியத்தின் பயங்கரவாதம்!





படிப்பகம்

www.padippakam.com

யாவின் மத்திய, மாநில அரசுகள் நடத்திய சில பயங்கரவாதங்கள்.

**மேலை நாடுகள், இசுலாமிய நாடுகளின் நிலை**

எனவே மேலை நாடுகளும், இசுலாமிய நாடுகளும் நம்மைவிட உயர்ந்த நிலையில் இருக்கின்றனவா? இல்லை என்கிறோம். இந்தியாவில் உள்ள சீரழிவுகள், பிரச்சினைகள் எல்லா நாடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றன. இசுலாமிய நாடுகள் பலவற்றில் ஜனநாயகம் இல்லை என்பதும் உண்மைதான். ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்கு முக்கியமான காரணம் மதம் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மன்னனையும், நிலப்பிரபுக்களையும், சர்ச்சையும் எதிர்த்த மக்களின் போராட்டத்தினால்தான் மேற்கத்திய நாடுகளில் ஜனநாயகம் வந்தது. இப்படிப்பட்ட போராட்டம் நடைபெறாத இசுலாமிய நாடுகளில் ஷேக்குகளும், இராணுவ சர்வாதிகாரிகளும் ஆண்டு வருகின்றனர். இவர்கள்தான் தமது சர்வாதிகாரத்தைத் தக்க வைத்து, ஜனநாயகத்தை மறுப்பதற்கு மதத்தை முகமூடியாகப் பயன்படுத்துகின்றனர். போராட்டம் நடைபெற்ற துருக்கி, எகிப்து போன்ற நாடுகளிலும், முன்னாள் சோசலிச நாடுகளான சீனா, ரசியாவில் உள்ள இசுலாமியப் பகுதிகளிலும் சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டது.

பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு முக்கியமான காரணம் ஏகாதிபத்திய நாடுகள் உருவாக்கி வரும் சமூக நிலைமைகள்தான். மேல்நிலை வல்லரசுகளின் உலக மயமாக்கத்தால் உலக மக்கள் மீது சொல்லெண்ணாத் துயரம் திணிக்கப்பட்டு வருகிறது. தொழிற்துறை உற்பத்தியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பங்குச் சந்தை, தகவல் தொடர்பு, காப்பீடு, வங்கி, நிதி, கேளிக்கை, நுகர்பொருள், திரைப்படம் போன்ற சேவைத் துறைகளை வைத்தே பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையடிக்கின்றன. இவற்றின் சமூக விளைவாக பண வெறி, நுகர்வு வெறி, தனிநபர் வாதம், சூதாட்டம், பாலியல் சுற்றுலாக்கள், காமக் களிவெறியாட்டங்கள் போன்ற பண்பாட்டுச் சீரழிவுகள் இசுலாமிய - நாடுகளை உள்ளிட்டு உலகம் முழுவதும் பரவி வருகின்றன.

இந்து மதவாதிகளைப் போல கிறித்தவ திருச்சபைகளும், அரபு சேக்குகளும் இத்தகைய சீரழிவுகளை எதிர்ப்பதாக நடிக்கின்றனர். சாதாரண மக்கள் 'ஒழுக்கம்' தவறினால் கடுந் தண்டனை வழங்கும் அரபு சேக்குகள் தங்கள் சொந்த வாழ்வில் கேட்பாரில்லாத கேளிக்கை வெறியர்களாக உள்ளனர்.

## மஞ்சள் துண்டு ஆசியுடன் காவி விஷம் பரவுகிறது

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் வேலூர் நகர பேருந்து நிலையம் அருகில் இந்து முன்னனி பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. சுமார் 100 பேர் கூடியிருந்தார்கள். மாநிலப் பொதுச் செயலாளர் S.S.ஜெயராஜ் என்பவர் வெறியுடன் பேசியதிலிருந்து சில பகுதிகள்:

“அரசு அதிகாரிகள் இந்துமத உணர்வுடன் இருக்கவேண்டும். இந்து மதக் கொள்கைகளை உயர்வாகக் கருத வேண்டும். ஆனால் இங்கே என்ன நிலைமை? மாவட்ட கல்வித்துறை அதிகாரி புனிதவல்லி ஒரு கிறிஸ்துவச்சி. பள்ளிக் கூடப் பிள்ளைகள் மதம் மாற வேண்டும் என்று பேசி வருகிறாள். இந்தப் பொம்பளையைப் பற்றி முதல்வரிடம் பேசியிருக்கிறோம். நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்.”

“அதே மாதிரி இங்கே ஒரு துலுக்கப் பயதான் மாவட்ட ஆட்சியதிகாரி. நம்ம முதல்வர் கலைஞர் அவர்கள் போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தச் சொல்லியிருந்தார்கள். இந்த முகாமில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கையைப் பற்றி இந்த கலெக்டர் சொல்லும்போது என்ன சொன்னான் தெரியுமா? 786 பேர் கலந்து கொண்டார்கள் என்கிறான். இவன் மத வெறி எப்படி இருக்கிறது பாருங்கள்.”

கோவை, நாகூர், புளியங்குடி, குமரி போன்ற இடங்களில் நடந்த இந்துமத வெறியர்களின் கலவரம் இத்தகைய வெறிப் பேச்சுக்களிலிருந்துதான் தொடங்கியது. ஒரு மாவட்ட ஆட்சியரையே இப்படி இழிவாய்ப் பேசுபவர்கள் அப்பாவி இசுலாமியர்களை என்னவெல்லாம் சொல்லித் தூற்றுவார்கள்?

அடுத்து பொதுக்கூட்டம் அருகில் இந்து முன்னணியின் சுவரொட்டி ஒன்று கண்டோம். அதில் ‘‘மயிலாடுதுறை, நாகப்பட்டினம் இரண்டு ஊரிலும் வனத் துறையின் சட்டவிரோதப் போக்கினைக் கண்டித்து ‘‘பாரதீய நரிக்குறவர் நல சம்மேளனம்’’ ஆர்ப்பாட்டம்; தலைமை ஜெயராஜ், மாநிலப் பொதுச்செயலாளர்’’ என்றிருந்தது.

ஊசியும், பாசியும் விற்று நாடோடிகளாக வாழும் குறவர்களையே, பாரதீயத்தில் இழுத்துப்போட்டு, இந்துவாக்கி, மதவெறி ஊட்டுகிறார்கள் என்றால் ஏனையோர் எம்மாத்திரம்?

- தகவல்: முத்துராமன், வேலூர்.

ஆனால் மத ஒழுக்கம்தான் சீரான ஒழுக்கம் என்றும், அதிலிருந்து பிறழ்வதுதான் சீரழிவு என்றும் எல்லா மதவாதிகளும் கூறுகின்றனர். எடுத்துக் காட்டாக கிறித்தவம் கருச்சிதைவையும், இசுலாம் பர்தா அணியாமையும், இந்துமதம் விதவை மறுமணத்தையும் சீரழிவு என்கின்றனர். அதேசமயம் இத்தகைய பிற்போக்கு மதங்கள் அனைத்தும் விபச்சாரம், அழகிப் போட்டி போன்ற முதலாளித்துவ சீரழிவுகளையும் சேர்த்தே எதிர்க்கின்றன. ஆனால் முதலாளித்துவத்தின், பண்பாட்டு சீரழிவுகளுக்கு, பிற்போக்கான மத ஒழுக்கம் மாற்றாக முடியாது. இரண்டையும் களையக்கூடிய சனநாயகப் பண்பாடுதான் மாற்றாக விளங்க முடியும் என்கிறோம்.

அடுத்து, இசுலாமிய தீவிரவாதத்தை சில நாடுகளும், குழுக்களும் ஆதரிப்பது உண்மைதான். ஆனால் அவற்றுக்கு அடிப்படையாக இருந்து பயங்கரவாதத்தைப் பல நாடுகளில் தூண்டிவிடுவது, பிறகு அதை அடக்குவதாகக் கூறி தலையிடுவது, ஆக்கிரமிப்பு செய்வது, குண்டு பொழிவது போன்றவையெல்லாம் அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகளின் கைங்கரியங்களே. ரசியாவை எதிர்த்துப் போரிட தாலிபானுக்கு ஆயுத உதவி செய்து, தேச பக்தர்கள் என்ற பட்டமும் கொடுத்த அமெரிக்கா இன்று அவர்களைப் பயங்கரவாதிகள் என்று சீறுகிறது. உல கிற்கு சமாதான உபதேசம் செய்யும் வாத்திகன் திருச்சபை, இந்த அமெரிக்க பயங்கரவாதத்தை ஆதரிக்கிறது.

சீரழிவுகளை எதிர்த்து பாரதப் பண்பைக் காப்பதாகக் கூறும் ஆர்.எஸ்.எஸ். கூட்டமும் வாத்திகனின் அடியொற்றி, அமெரிக்காவையும் அதன் இந்தியத் தரகு முதலாளிகளையும் ஆதரிக் கின்ற எடுபிடியாகத்தான் இருக்கிறது கிளிண்டனின் இந்திய வருகையின் போது, நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழுந்து உபசரித்தது இவர்களின் சமீபத் திய உதாரணம். பாபர் மசூதி இடித்த கையுடன் ராமஜன்மபூமி முக்தி மோர்ச்சாவின் தலைவர் கிளிண்டனுக்கு எழுதிய கடிதத்தில், முசுலீம்களிடமிருந்து இந்துக்களையும், உலகையும் காப்பாற் அவதரித்த நவீன கிருஷ்ண பகவானே என்று உருகுகிறார்.

இத்தகைய அட்சர சுத்தமான கேவ மான அடிமைகள், இசுலாமிய நாட் மக்களை அடக்கி ஆட்டம் போடும் அர சேக்குகள் பெற்றுள்ள உரிமை பார்ப்பன - பனியா கும்பலுக்கும் பெற்று தர விரும்புகிறார்கள். மேலை கிறித்தவச் சீ ழிவு, இசுலாமிய பயங்கரவாதம் என் மதச்சாயம் பூசி அவதூறு செய்வது இதற்க கத்தான்.

- தொடரு



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# அர்ப்பணிப்பு

இலட்சுமணப் பெருமாள்

மாடிக்கு மேலே நின்று முதலாளியம்மா கிளம்பி போர்வதையே ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருந்தாள் பூமாரி. சிவந்த கையிலே கட்டெறும்பு ஊறுகிற மாதிரி செம்மண் ரஸ்தாவிலே அந்த சின்ன கார் குறுகுறு என்று ஊர்ந்து, கேட்டை கடந்து கிழக்காய் திரும்பி திடீர் வேகங்கொண்டு மெயின்ரோட்டின் ஆரவாரத்தில் கலந்தது.

அந்த ஏரியாவிலேயே பெரிய பங்களாவுக்குள் தனிமையில் இருந்த பூமாரி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தலைமுடியை அவிழ்த்து உதறினாள். பத்து விரலாலும் தலையை அரைமணிநேரமாய் வங்கு வங்குவென்று' பலங்கொண்ட மட்டும் சொரிந்தாள்.

ரொம்ப சுகமாய் இருந்தது. விரிந்து கிடந்த தலைமயிருக்குள் பேன் திக்கத் துக்கு திக்கம் கலைந்து ஓடி ஒளிவது புறுபுறுப்பில் தெரிந்தது. இந்த அரிப்பைச் சொரிந்து விட இப்படி ஆள் அரவமில்லாத நல்ல நேரத்துக்காக தவமிருப்பாள். மாறி மாறிச் சொரிந்து முடித்து தாய் முடியை இறுகப்பிடித்துக் கொண்டை போட்டாள். அந்த இறுக்கத்தில் கொஞ்சம் அரிப்பும் கலைச்சலாய்த் திரிந்த போக்குவரத்துகளும் கட்டுப்பட்டு நின்றன.

வீட்டின் குளிர்ச்சி பூமாரிக்கு கண்களைச் செருக வைத்தது. கொஞ்சம் காலை கையை விரித்து மல்லாக்கப் படுத்தாள். தரையின் குளிர்ச்சி ஜிலு ஜிலுவென்று உடம்பெல்லாம் பாய்ந்தது. ஒரு நிமிசம்தான். வாரிச் சுருட்டி எழுந்தாள். 'போச்சு அப்படியே அசந்தா அவ்ளதான்'.

பங்களாவின் ரெண்டு மாடிகளையும் நீண்ட மூங்கில்கம்பில் துவலையைச் சுற்றி பினாயிலை நனைத்து துடைத்தெடுக்க வேண்டும்.

காலையில் நான்கு மணிக்கு எழுந்திருக்கிறாள். வாசலிலிருந்து கேட் வரைக்கும் உள்ள ரோட்டையும் தோட்டக் காலையும் பெருக்கிச் சுத்தம் பண்ண வேண்டும். பால் மாடுகளுக்குத் தண்ணீர் வைத்து செடி கொடிகளுக்கும் பாய்ச்ச வேண்டும். கறவைக்காரர் வருவார். ஒவ்வொரு கன்றுக் குட்டியாய் அவிழ்த்து விடவேண்டும்.

பசுவின் மடியில் முட்டி முட்டி காதுகள் வெடைக்க பாலை காம்புகளில் இறக்கப் பட்ட பாடு என்ன! கிர்ரென்று பால் காம்புகளில் சுரந்து விடைத்தவுடன் கறவைக் காரர் முழங்காலால் கன்றின் கழுத்தில் மிதித்து சங்குகுழி தெறிக்கும்படியாக இழுந்து வந்து பூமாரியின் கையில் கொடுத்து விடுவார். அதை மாட்டின் பார்வைக்கு முன்னால் பிடித்து நிற்க வேண்டும். அதை தாமரிப்பது பூமாரிக்கு பெரிய ரோதனையாய் இருக்கும். பால் கடைசி 'சொர்க்' இருக்கும் வரை கறவைக் காரர் பிழிபிழி என்று பிழிந்து விடுவார். 'ம்.. விடு' என்ற வார்த்தை பூமாரியின் காதுகளில் விழும்முன் கன்றின் காதில் விழுந்து பூமாரியை இழுத்து கீழே தள்ளி பிடியிலிருந்து உயிர்போக திமிறிக் கொண்டு தாய்ப் பசுவை நோக்கி ஓடும்.

ஏதாவது சொல்லி முதலாளியம்மாவிடம் ரெண்டு வாங்கி கொடுக்கும் கறவைக்காரர் அன்று அவரே கை நீட்டினார். 'பால் பீச்சற எடத்தெ எவ்வளவு லட்சணமயிரா வச்சிருக்கே' பிடரியோடு பிடித்து ஏவினார். சற்றைக்கு முன்தான் சாணியை அள்ளினாள். ஐந்து எருமை ஒரு பசு. மாட்டின் தொழுவத்தை இருட்டிலேயே சுத்தம் பண்ணி விடுவாள். அவளுக்கு ஒரே பாவாடை. அது சாணியாகிப் போனால் வீட்டிற்குள் புழங்க முடியாது. அதனாலே பாவாடையை அவிழ்த்து வைத்து விட்டு இடுப்பிலே ஒரு கந்தல் துணியைக் கட்டிக் கொள்வாள். யாரும் பார்க்காத இருட்டிலேயே தொழுவம் சுத்தமாகிவிடும். ஒருநாள் திடீரென்று யாரோ இவளை மறைந்திருந்து பார்க்கிறமாதிரி இருந்தது. மனசு படபடக்க பயந்து பயந்து கிட்ட நெருங்கிப் போய் பார்த்தாள். அட! அது இவள் பாவாடை துணியில் ஒரு அங்குல கனத்திற்கு அழுக்கிருந்தால்? கீழே படிந்து விழாமல் ஒரு ஆள் மாதிரியே நிற்கிறது.

> அரிவாளோ கத்தியோ ஆயுதமேயில்லாமல் அந்த அர்த்த ராத்திரியில் முழு நிர்வாணமாக்கி ஒருவர் மாற்றி ஒருவர் வந்து பந்து போல் திரண்டிருந்த ஓதத்தில் உயிர் போகும் வரை மிதித்து சாமி... சாமி... என்று கும்பிட கும்பிட தடயமில்லாமல் துடிக்க துடிக்க கொன்று போட்டார்கள்.

இன்றும் அப்படித்தான் வழக்கம்போல் சாணியை அள்ளி பெருக்குமாறால் சுத்தம் செய்து விட்டாள். அதன் பின்னால் அந்தக் கறவைப் பசு சாணம் போட்டு விட்டது. அது அவருக்குத் தெரியாதா என்ன? அவர் அரிப்பைத் தீர்த்துக் கொண்டார். மாடிக்குப் போய் வாஸ்பேசனில் சுத்தமாகக் கையைக் கழுவி விட்டு அய்யாவிற்கும் அம்மாவிற்கும் காபி, ஹார்லிக்ஸ் தனித்தனியாகக் கலந்து பெட்ரூமில் கொண்டு போய் ஓசைப்படாமல் வைக்க அவர்கள் தூக்கம் கலையாமல் குடித்த பிறகு எச்சில் கப்புடன் மெல்ல கால் பொத்தி வெளியேறி வந்து அந்த புறநகர் பங்களாக்கள் பூராவுக்கும் ஆறு மணிக்குள் வீடு வீடாய் பால் அளந்து கொடுத்து வரவேண்டும்.

அவரவர்களுக்கு அன்றைக்கு வேண்டிய உடைகளை எடுத்து வைத்த பின் ஷூ செருப்புகளுக்கு பாலீஸ் போட ஆரம்பிப்பாள். மீனுவை காலைக் கடனெல்லாம் முடிக்க வைத்து குளிப்பாட்டி டிரஸ் மாற்றி பிரட் பால் ஊட்டி விட்டு ஒரு கி.மீ. தூரத்தில் இருக்கிற அன்னை தெரசா கான்வென்ட்டுக்கு இடுப்பில் தூக்கிக் கொண்டு போய் விட்டு வர மணி எட்டரையாகும். அதற்குள் சமையல்காரி வந்து விடுவாள். அவளுக்கு ஊடுமாடாய் இவள்தான் ஒத்தாசை.

எஜமானர்களின் பத்து மணி டூட்டி அவசரத்திற்கு ஆற்றமாட்டாமல் பூமாரியின் முகவாயில் ஏதாவது குறை சொல்லி இடிப்பாள். எல்லாமே அவளால்தான் தாமதமாகிற மாதிரி. பத்து மணிக்குள் ஐந்தாறு வீடுகளில் சமையல் பண்ணும் சாமர்த்தியக்காரி. ஆங்காங்கே கிடைக்கும் மிச்ச சொச்சங்களை தன் புருசனிடம் கொடுத்து அவன் பிளாட்பாரத்திலே 'கலவை சோறு கப் ஐந்து ரூபா' வியாபாரம் பண்ணுகிறான். இந்த வீட்டில் விழும் மிகுதியை பூமாரி தின்று விடுகிறாளே என்கிற ஆத்திரம். அதனாலே சில சமயம் நாக்கைத் துருத்திக் கொண்டு ரெண்டு செவியையும் பிடித்து சுவரில் கூட முட்ட வைப்பாள்.

திடீரென்று கான்வென்டிலிருந்து போன் வரும். ஐயா திட்டுவார். அம்மா பல்லைக் கடித்துக் கொண்டு கிடைத்ததைக் கொண்டு அடிப்பாள். 'நல்லா இருக்க வச்சு கொண்டுபோய் விடுறதில்லே செத்த நாயி! வேற டிரஸ் எடுத்திட்டுப் போயி கழுவி குளிப்பாட்டி மாத்திவிட்டு வா!'' ஓடுவாள்.

இனி நாளை இல்லை நாளை மறுநாள் பூமாரி ஊருக்கு போய் விடுவாள். மனசுக்கு ரொம்ப சந்தோசமாய் இருந்தது. எத்தனை வருசமாச்சு ஊரைவிட்டு வந்து!



படிப்பகம்

www.padippakam.com

அம்மா, அந்த கூரை வீடு, விளையாடின தெரு, பள்ளிக்கூடம், மந்தை கண்மாயி, முத்தாலம்மன் கோயில், தளுகச் சோறு கொடுக்கிற பூசாரி, அவர்களையெல்லாம் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பு நெஞ்சுக்குள் பூவானமாய் விரிந்து பொழிந்தது.

அப்பன் போன கவலையிலே இருந்த அம்மாவிடம் அப்பன் வாங்குனதா ஆயிரம் ரூபாய வட்டியும் அசலுமா தரச் சொல்லி வார வட்டிக்காரர் எப்படியெல்லாம் பேசி அம்மாவை அவமானப்படுத்தினார்.

'ரூபாய வாங்கி புருசனும் பொண்டாட்டியும் நல்லா பொங்கி பொரிச்சி தின்னுட்டு ராத்திரி பகலா சுகம்மா படுத்து படுத்து எந்திரிக்கும்போது நல்லாயிருந்திச்சி! இப்பொ திருப்பி கேட்கும்போது வலிக்கி... ம்...''

''ஐயா அவர் வாங்கி வச்சதே எனக்குத் தெரியாது. எப்ப எதுக்கு வாங்குனாரோ அவரு உயிரோட இருக்கும்போதெல்லாம் நீங்க வந்து கேக்கல... அதனால் இப்ப நான் இல்லேன்னும் சொல்லல. எப்பாடுபட்டாச்சும் ஓங்க கடன அடச்சிருதேன். பத்து நா தவண கொடுங்க.''

''பத்து நா என்ன பத்து நா. ஒரு மாசம் தவ்ணை தாரேன். எனக்கு வட்டிதான். மவளே தரலே சேலய உருவி அம்மணமா தெருவில விட்டுருவேன் ஆமா.'' அப்பவெல்லாம் பூமாரிக்கு அம்மாவைக் காட்டிலும் ஐயா தான் செல்லம். கையிலே சிறு பொட்டலம் இல்லாமல் வீட்டிற்கு வரமாட்டார். வரதாமசமானாலும் ரோட்டுமேலே இருக்கிற பெட்டிக் கடைக்கு தேடிப் போய் விடுவாள்.

ஐயா அங்கே உட்கார்ந்து பீடி குடிச்சிகிட்டு இருப்பார். ''எங்க ஆத்தா வந்துட்டா எங்க ஆத்தா வந்துட்டா, என்ன வேணுந்தாயி வேணுங்கிறத வாங்கிக்கெ'' அப்படீன்னுவார். கடைக்கார தாத்தாவிலிருந்து எல்லோரும் 'என்னய கட்டிக்கோ' 'எனக்கு வாக்கப்படுவியா அப்பதான் முறுக்கு.' முறுக்கோடு வெட்கத்தில் அந்த இடத்தில் நிற்க முடியாமல் ஒரே ஓட்டம். இடையில் மறித்துக் கொண்டு எத்தனை பேர்! ஏய் மாமாவுக்கு... ஏ... புள்ள மாமாவுக்கு...

ஒரு சமயம் ஐயா ரொம்ப நாள் வீட்டுக்கே வரவில்லை. அத்தனை நாள் அவர் பூமாரியை பார்க்காமல் இருந்ததில்லை. பூமாரியும் ஐயா நினைப்பில் ரொம்ப மெலிந்து போனாள். அப்பதான் ஆடு மேய்க்கிற ஆளுகள் வந்து ரெயில்வே ரோட்டு பக்கமா ஓடைப்பட்டிக்கு போற பாதையில் பத்து நாளாய் அழுகிய பிணம் ஒன்று கிடப்பதாய்ச் சொன்னார்கள். அது கண்டிப்பாய் பூமாரியின் ஐயாதான்.

அவருக்குத்தான் அந்த மாதிரி பாரிச வாயு உண்டு. ரெண்டு கால்களையும் அகட்டி அகட்டி நடக்கிற அளவுக்கு,



வேகமாய் நடக்கவோ ஓடவோ முடியாதவர். நிர்வாணமாய் அழுகிக் கிடந்த பிணத்தில் அந்த ஓதம் பெரிதாக ஊதி வெடித்து ஏதேதோ இடித்து குதறி இருந்தது. முத்துராம அம்பலக்காரர் வாழைத் தோட்டத்துக்கு ரப்பட்டு காவலுக்கு போன போது பேய் அடித்திருக்கலாம் என்று பேசிக் கொண்டார்கள். இப்பொ... இப்பொ முதலாளியம்மா ரெண்டு விதமாய் பேசி வருகிறாள். அதைக் கேட்டு இத்தனை அலுப்பிலும் இரவெல்லாம் தூக்கமில்லாமல் கிடக்கிறாள் பூமாரி.

''முன்ன மாதிரியெல்லாம் விமன்ஸ் கிளப் ஹால் மீட்டிங்லேயும் என்னால கலந்துக்க முடியறதுல்ல. ஆபீஸ் ஆபீஸ் விட்டா வீடு ரெண்டு ஷிப்ட் வேலை இப்பொ மூணு யூனிட் போட்டதனாலே டொண்டி போர் ஹவர்ஸீம் எனக்கு சரியா இருக்கு லேபர்ஸ் யூனியன் ப்ராப்ளம் வேற.''

வந்திருந்த பெண்களுக்கு பூமாரி காபி கொண்டு வந்து வைப்பாள்.

''இந்தா இப்படி தெண்டங்களெ வேற வச்சி மாரடிக்கிறேன். இப்படி அனாதைகளையும் பராமரிச்சுகிட்டுதான் வாரேன். நிக்காதெ... நிக்காதெ முண்டம்.. போயி வேலையப் பாரு. ஒடம்புல ஊர்ப்பட்ட ஈ மொக்கிது. ஆளுக நடுக்கொண்டு நின்னுகிட்டு வாய வாய பாத்துக்கிட்டு நிப்பா.''

''பரவாயில்லையே! நீங்க சொல்றதுக்கு கொஞ்சங்கூட முகஞ் சுளிக்காம சிரிச்ச முகத்தோட வேலய பாக்குறாளே! சொந்தமா மேடம்?'

''சீச்சி அய்யய்யோ நீங்க வேற... கிராமத்துக்கு அம்மா வீட்டுக்கு போயிருந்தேன். இவளோட பேரண்ட்ஸ் எங்க பண்ணையில வேலை செய்யற கூலிங்க. அவங்க கதை ரொம்ப சுவாரஸ்யமாயிருக்கும். இவளோட அம்மா ஒரு டி.பி. பேசண்ட். அப்பன்காரன் அவளோட ஒரே ஒரு குழந்தையைப் பெத்துக்கிட்டதும், இந்தா இவதான்'... அவ உடம்பு ரொம்ப நஞ்சி போச்சு. பிறகு அவன் தாம்பத்ய உறவுல திருப்திப்படாம பக்கத்து ஊர்ல ஒரு பெண்ணோட ரொம்ப நாளா தொடர்பு வச்சிருந்தான்.

''ஒரு நா அவ வீட்ல இவளோட அப்பன் படுத்திருந்ததை அவ புருசன் பார்த்துக்கிட்டான். அவ்ளோதான் அங்கே கிடந்த அரிவாமனையை எடுத்து ரெண்டு பேரையும் அந்த இடத்திலேயே வெட்டி கொன்னு போட்டான். இவ அப்பன் வாங்குன ஆயிரம் ரூபா கடன கட்ட இவள அனுப்பி வச்சு இன்னைய தேதி வரைக்கும் இவளோட அம்மா ஏன்னு கூட எட்டிப் பாக்கலை. நானும் ஒரு குறையும் வக்கலேன்னு வையுங்களேன்.''

பூமாரிக்கு அழுகையாய் வந்தது. அம்மா சீக்காளி என்கிறது மட்டுந்தான் உண்மை. ஐயாவைப் பற்றி எப்படி

படிப்பகம்

www.padippakam.com

யெல்லாம் இட்டுக்கட்டிப் பேசுகிறாள், அன்றைக்கு முதலாளி ஐயாவிடம் தனியாய் வேறு விதமாகச் சொன்னாங்களே.

ஒரு நில தாவாவிலே முதலாளி அம்மாவோட ஐயா முத்துராம அம்பலக்காரர், கீழ் கோர்ட் தீர்ப்பை எதிர்த்து ஐகோர்ட்ல அப்பீல் பண்ணுனார். பதினோரு வருசமா வில்லங்கம் பண்ணுற அம்பலக்காரரை மெட்ராஸ்ல இருந்து வரும்போது ரயிலடியில வச்சே கதையை முடிக்க பங்காளிகள் முடிவு பண்ணி காத்திருந்தார்கள். இதைக் கேள்விபட்ட பூமாரியின் ஐயா வேலைக்கார விசுவாசத்தில் ஒத்தையடி தடத்தில் ஸ்டேசனுக்கு நடந்து போய் அம்பலக்காரரைப் பார்த்து ரயிலில் அப்படியே திருநெல்வேலிக்கு போய்விடுமாறு செய்தியை சொன்னார். அம்பலக்காரர் தப்பினார்.

வெறி கொண்ட பங்காளிகள் 'இந்த காவக்காரனை காவு வங்குகிறதுல அவன் கேஸை வாபஸ் வாங்கணும்' என்று ஓடைப்பட்டி பாதையில் பத்து பேர் வழி மறித்தார்கள். அரிவாளோ கத்தியோ ஆயுதமேயில்லாமல் அந்த அர்த்த ராத்திரியில் முழு நிர்வாணமாக்கி ஒருவர் மாற்றி ஒருவர் வந்து பந்து போல் திரண்டிருந்த ஒதத்தில் உயிர் போகும் வரை மிதித்து சாமி... சாமி.. என்று கும்பி கும்பிட தடயமில்லாமல் துடிக்க துடிக்க கொன்று போட்டார்கள்.

அன்றைக்கு வேலையெல்லாம் முடித்துவிட்டு பூமாரி வராண்டாவில் படுக்கும் போது மணி பன்னிரெண்டு. அம்மா பொழுதனைக்கும் நினைப்பில் வந்தாள். மொதலாளியம்மா அம்மாவை குறை சொன்னது இவளுக்கு பிடிக்கவில்லை. என்னைப் பார்க்க அம்மாவுக்கு நினைப்பு இல்லாமலா இருக்கும். மேலுக்கு முடியாமல் எப்படி இருக்கிறாளோ? இந்தக் கடன் மட்டும் இல்லேன்னா நான் அம்மா பக்கத்திலேயே இருந்திருப்பேன். நான் என்ன வேலை செஞ்சும் அம்மாவைக் காப்பாத்த மாட்டேனா? அவள் நினைவுகளை முறித்து வீட்டின் உள்ளிருந்து பேச்சு சத்தம் கேட்டது.

"இதோ பாருங்க.. இவள ஊருக்கு அனுப்ப ஏற்பாடு பண்ணுங்கோன்னா காதுல போட மாட்டேங்கிறீங்களே. மெசூர்ட் ஆகுற ஸ்டேஜ்ல இருக்கா. இனிமே இவளை வச்சிருக்க வேண்டாம். பின்னாடி இவளோடலைப்சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சனையும் நம்ம தலையிலே விழுந்துரும். அவ அம்மாயிருக்கும் போதே கொண்டு போய் விட்டுருங்க. எங்க அம்மாகிட்டெ சொல்லி இன்னொரு ஆயிரம் ரூபா அட்வான்ஸ் கொடுத்து எட்டு ஒன்பது வயசுலவேற ஒரு புள்ளைய பாத்து அனுப்பி வைக்க சொன்னாலும் சரி. இல்லெ நீங்களே கையோடு இருந்து கூட்டிட்டு வந்தாலும் சரி... இன்னிக்கு ஆபீஸ்லருந்து வர்றபோது அவளுக்கு ஒரு புது டிரஸ் எடுத்துட்டு வாங்க. இத்தோட அனுப்பிடுவோம்."

ரெண்டு மாடியையும் துடைச்சு சுத்தம் பண்ண மணி பன்னிரெண்டாகி விட்டிருந்தது. நேற்றைய பழையதைப் பிழிந்து வைத்து காலையில் செய்த டிபனில் மீதியைச் சுரண்டி மொத்தமாய்க் கொட்டி சாப்பிட்டுவிட்டு பாத்திரங்களைக் கழுவினாள். ஊருக்கு... ஊருக்கு. இப்பவே கொண்டு போய் விட்டால் தேவலாம் போல் இருந்தது. நிலை கொள்ளாமல் தவித்தாள்.

அம்மா இப்ப எப்படியிருப்பாள்? உடம்புக்கு எப்படி இருக்கும்? சின்னப் பிள்ளையில் இடுப்பில் வைத்து தூக்கி கொண்டே திரிவாளே. சம்சாரி வீடுகளில்

> **"உங்க ஆத்தா ஒருத்தி இருந்தா. அவ செத்த இடமும் புல்லு முளைச்சி போச்சி. வெட்டியா இங்க சோலி? எல்லாம் இந்தக் காலத்துல, இருந்தாத்தான். இல்லேன்னா கஞ்சி குடிச்சியான்னு கேக்க நாதியிருக்காது."**

கையில் ஒரு சின்ன கிண்ணத்தை வைத்துக் கொண்டு 'தாயி பிள்ளை சோறு இல்லேங்காம போடுங்க இந்த பச்ச மண்ணுக்கு' என்று தினசரியும் ஒவ்வொரு வீடாய் ஏறி இறங்கி எனக்கு ஊட்டுவாளே. என்னைய விட்டுட்டு இத்தன வருசம் எப்படிம்மா இருந்தே? அம்மா கிட்டெ போய் கேள்வியாய் கேக்கனும். சின்னப் பிள்ளையில ஓ... டிப்போய் சேந்து கட்டிப் பிடிச்சி விளையாடின மாதிரி இப்பவும் கட்டி அணைச்சி ஒன்னு அழுகனும். அம்மா... எனக்கு நீ வேணும் எனக்கு வேற ஒண்ணும் வேண்டாம். நான் உன் பக்கத்திலேயே இருக்கனும். நான் உனக்கு ஒரு பாரமா அம்மா?

என்ன மாதிரி பிள்ளங்க பிறந்த ஊரு எந்த திசையில இருக்குன்னு தெரியாம இருக்காங்க. தினம் தினம் அம்மாவையும் ஊரையும் நெனச்சி நெனச்சி என்ன மாதிரி அழுகிறாங்க. அம்மா யோசனை பண்ணிப் பாரேன். எனக்கு உடம்புக்கு நோவு வரும் போதெல்லாம் அதை யார்ட்டே சொல்லுவேன். அதை எப்படிப் பொறுப்பேன். நோவை பிள்ளை சொல்லாமல் கண்ணுல பார்த்ததும் கண்டு பிடிக்கிறவளாச்சே தாய். இந்த ஆழ சமுத்திரத்தில் அத்துவானக் காட்டில் என் அவயம் உன் காதுகளுக்கு கேட்கவழியில்லையே அம்மா!

சுவரைப் பார்த்து அம்மாவிடம் பேசுவதுபோல் பாவனை செய்து பேசிக் கொண்டிருந்தாள். வாயைத் திறந்து 'ஆ'ன்னு செம்பட்டை மயிர் சிலிர்க்க சிலிர்க்க தலையில் அடித்து அடித்து அழுதாள். திடீரென்று கெஞ்சினாள் கொஞ்சினாள் அடம் பிடித்தாள்.

"அம்மா நான் ஒரு நா பிள்ளங்களோட முத்தாலம்மன் கோயிலுக்குப் போய் அப்பா வீட்டுக்கு எப்ப வருவார் அம்மாவுக்கு உடம்பு எப்ப சரியாகும்னு அந்த வயசுலெயே பூகட்டி பார்த்தேன். வெள்ளைப்பூ கொடு சாமின்னு கீழே விழுந்து எந்திரிச்ச என்னை கோயிலுக்கு முன்னாடி வந்து நின்ன காரிலே தூக்கிப் போட்டு இப்படி தூராந்திரத்துக்கு அனுப்பிட்டேயம்மா..." அந்த வயசுல திக்குத் தெரியாத இடத்துல என்னை மூணு மணிக்கு எழுப்பி விட்டு அந்த வேலை செய் இந்த வேலை செய்யின்னா எனக்கு என்ன புரியும்? மருகி மருகி தூங்குவேன். காதைத் திருகி கன்னத்தைக்கிள்ளி 'என்னமோ மகாராணி வீட்டுப் புள்ள மாதிரி மெத்தையில படுத்துக் கிடக்கான்னா' என்று அப்போது வாங்கிய அழியா தழும்பேறிய சூடுகள். கன்றுக்குட்டிக்கு கீழே வளர்த்தி கொண்ட எனக்கு மாடுகளை அவிழ்த்து மேய்க்கிற வேலை. செய்ய முடியாத வேலைக்கு பட்டினி. பட்டினி கிடந்தால் எல்லாம் சரியாகும் என்பது எஜமான் சூத்திரம். செய்து முடித்தால் சோறு. ஐயோ இம்சை.. இம்சை...

"அம்மா... அம்மா... என் தலையில் பேனெடுத்து விட்டு எண்ணெய் தேச்சி குளிப்பாட்டி சுத்தம் பண்ணி சிக்கெடுத்து உன் கையால எனக்கு சடைபின்னி தலை நிறைய பூ வச்சி. இன்னும்... ம் வட்டில்ல சோறு போட்டு குழம்பு ஊத்தி இன்னுஞ் சாப்பிடு... இன்னுங் கொஞ்சம்.. எம்புள்ளையில்ல... ராசாத்தியில்ல இன்னும் இம்புட்டு... கொஞ்சங்காணி அப்படி ஒருநாள் ஒங்கூட இருந்தாலும் போதும்மா. அன்னையோட எனக்கு சாவுன்னாலும் அதை சந்தோசமா ஏத்துக்கிடுவேனும்மா."

●○●

காலையில் மீனுவை ஸ்கூலில் விட்டு வந்து ஐயாவும் அம்மாவும் ஆபீஸ் புறப்ப



படிப்பகம்

www.padippakam.com

டுவதற்கு வேண்டிய வேலைகளை யெல்லாம் பொடு பொடுவென்று செய்து கொண்டிருந்தாள் பூமாரி. "பட்டிக்காடும் முன்னம் மாதிரியா இருக்கு. காடுகள்ல வேலை செஞ்சி அரை வயித்து கஞ்சி குடிச்ச நாய்கள்லாம் நாலு தொழில் முளைச்சவுடனே ஊருக்குள்ளே ஒரு மரியாதை இல்லை. வீட்டு வீட்டுக்கு டி.வி. முன்னாடி நம்ம காரு போனா ஊரு சனமே பின்னாடி வரும். இப்பொ டி.வி.எஸ். 50 இல்லாத வீடு இல்லெ. இந்த மெட்ராஸ் சிட்டி மாதிரியே இங்கேயும் எதிர்த்த வீட்டுக்காரன் தயவு தேவையில்லங்கிற மாதிரிதான் இருக்காங்க." தன்னாலே புலம்பிக் கொண்டிருந்த முதலாளியம்மா கிட்ட வந்தார் முதலாளியய்யா.

"இந்தா தபால்! ஊர்லருந்து என்னன்னு கேளு."

"யாரு கிட்டேயிருந்து?"

"படிக்கிறேன் கேளு. 'ஊர் மணியக்காரர் வணக்கத்துடன் எழுதிக் கொண்டது. உங்க பூமாரியின் தாயார் ரொம்ப நாளாய் சரீர சௌபாக்கியமில்லாமல் இருந்ததை தாங்கள் அறிவீர்கள். சமீப காலமாய் கவனிப்பாரற்று தேவையான ஔடதங்கள் கொடுக்க வழியில்லாமல் சரீரம் லகுவுக்கு வராமல் கடந்த வாரம் வைகுண்டபதவி அடைந்து விட்டார்கள். ஊர் பெரிய தனக்கார்ர்கள் சிலர் தயவில் அன்னாரின் ஈமக் கிரியைகளும் உடனடியாக செய்து முடிக்கப்பட்டன என்பதை அறியவும்."

கடிதம் கொண்டு வந்த செய்தியை பூமாரிக்கும் கேட்கும்படியாக உரக்கப் படித்தும் கூட பூமாரி காதில் போட்டுக் கொள்ளாததுபோல் எப்பவும் போல் வேலையில் மும்முரமாக இருந்தாள்.

அவளை அன்று ஊருக்கு அனுப்ப இருந்த நாள்.

வேண்டாம்... வேண்டாம் அம்மா இல்லாத அந்த ஊரில் யார் ஆதரவு? தன்னை ஏதாவது ஒரு பூதம் வந்து விழுங்கி ஏப்பம் விடாதா என்று குமைந்தாள். 'ஊருக்கு' என்ற ஆசையில் மண் விழுந்தது. எந்த நம்பிக்கையில் அங்கு போக முடியும். யாரிருக்கிறார்கள்?

"இந்தப் பிள்ளைதானா?

"இங்கெ எதுக்கும்மா வந்தெ... உங்க அம்மா காலமெல்லாம் இருந்த ஊரிலேயே அனாதியா செத்தா. உனக்கு ஒண்ட இடங் கூட இல்லை. ஒரு உடுமாத்துக்கு துணி மணி கூட இல்லாம வந்திருக்கியே. யாரிருக்கான்னு வந்தே!

"அட்ப்பாவமே பச்சைக் கிளிபோல பிள்ளை. இது என்னான்னு இன்னும் கரை சேரப் போகுதோ. தாய் தகப்பன் பொட்டப் புள்ளகளை இழுத்துக்கோ பறிச்சுக் கோன்னு கரையேத்தணும். ஏத்தமோ இறக்கமோ கிடைக்கிற கஞ்சிய குடிச்சிட்டு இருக்கிற இடத்துல காலந்தள்ளு.

"உங்க ஆத்தா ஒருத்தி இருந்தா. அவ செத்த இடமும் புல்லு முளைச்சி போச்சி. வெட்டியா இங்க சோலி? எல்லாம் இந்தக் காலத்துல இருந்தாத்தான். இல்லேன்னா கஞ்சி குடிச்சியான்னு கேக்க நாதியிருக்காது."

ஊரின் நிலைமைகள் காட்சிப் பொருளாய் அவதானித்து அசை போட்டாள். 'இந்தப் பிள்ளைதானா இந்தப் பிள்ளைதானா' என்ற விசாரிப்புகள் சில மணித் துளிகளில் முடிந்து போகும். அப்புறம்? இங்கே மாதிரியே அந்த ஜனங்கள் மத்தியிலும் தனி மனுஷியாய்த்தான் திக்கு தெரியாமல்......

ஊருக்குப் புறப்படச் சொல்லும் உத்தரவு ஓநாய் போல் கடித்துக் குதற நிற்கிறது.

அம்மா செத்ததை எப்படி காதில் போட்டுக் கொள்ளவில்லையோ அதே போல 'ஊருக்குப் புறப்படு' என்பதையும் காதில் போட்டுக் கொள்ளக் கூடாது.

பயத்தில் வேலையில் பம்பரமாய்ச் சுழன்றாள். நேரம் நெருங்க நெருங்க கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன.

முதலாளிமார்களின் நடவடிக்கையை கண்கள் சுழற்றிச் சுழற்றிக் கண்காணிக்க ஆரம்பித்தது. இனிமேல் தூங்காமலும் சாப்பிடாமலும் இருக்க கற்றுக் கொள்ள மனசில் உறுதியைக் கொண்டு வந்து விட்டாள்.

முதலாளியம்மா ஒரு மஞ்சள் பையை கொண்டு வந்து கூடத்தில் வைத்தாள். அதில் பூமாரிக்கு வாங்கிய கோடித் துணி இருந்தது.

"இந்தா பூமாரி........."

அடுத்து வருகிற வார்த்தைகளை காதில் பெறாமல் ஆவேசமாய் "என்னப் பெத்தவளே! சண்டாளி... பெத்த அன்னைக்கே கொஞ்சம் சாம்பலை மூக்கிலெ வெச்சு என்ன கொன்னிருக்கக் கூடாது! பாதகத்தி..." என்று கத்தி ஆத்திரத்தைத் தணிக்க வாயெடுத்தவள்,

பூமித்தீயின் தீக்குழம்பு பலஹீனமான பூபாள பகுதியை உடைத்துக் கொண்டு வெளிவருகிற மாதிரி அவள் அடி வயிற்றில் கூர்மையான ஆயுதத்தால் யாரோ உள்ளிருந்து பிளந்து விட்டது போல் 'அம்மா... அம்மா' என்று துயரம் மிக்க குரலில் அலற அலற அங்கு ஒரு மூலையில் அதிர்ச்சியில் 'உட்கார்ந்தாள்' பூமாரி. ●

# இடைஞ்சல்

"யோவ் சுண்ணாம்பு மட்டை உள்ளார போயா" நடத்துநரின் குரல் காட்டமாக இருந்தது. "யாருக்கும் எடஞ்சல் இல்லாம இறங்கி ஏறிக்கிறேன்" என்று சுண்ணாம்பு மட்டையை வைத்திருந்தவர் விளக்கம் சொன்னதுதான் தாமதம், நடத்துநருக்கு பொத்துக் கொண்டு வந்தது. "யோவ் நா சொல்றத நீ கேளுயா. உங்க ஆடு மாதிரி பேசற. போ உள்ளார."

"எங்கள மாதிரி ஆளை பார்த்தாலே உனக்கு எரியது போல இருக்கு" முனகிக் கொண்டே சுண்ணாம்பு மட்டையை தலை கீழாக பிடித்தபடி கூட்டத்திற்குள் புழு போல வளைந்து நெளிந்து ஓரம் கட்டினார்.

"கால நேரத்துல, ஆபிஸ் டயத்துல நீ வேற" சுண்ணாம்பு மட்டையைப் பார்த்தவுடன் அருவெறுப்பாக முனகினார் பக்கத்திலிருந்தவர். "நீங்க மட்டும்தான் ஆபீசுக்குப் போறீங்களா? நாங்கல்லாம் வேலைக்கு போக வேணாமா? பேனாவாலயா சுண்ணாம்பு அடிக்கிறோம், பாக்கெட்ல வைச்சிட்டுப் போறதுக்கு. அதுவும் பேப்பர்ல சுத்திதான வைச்சிருக்கிறேன், பெரிசா வந்து ஒட்டிக்கிதா."

"இடுக்கில மட்டய வைச்சிகிட்டு அந்தாண்ட போயா" என்று இன்னொருத்தரும் முனக ஆரம்பிக்க சுண்ணாம்பு மட்டைக்காரர் மறுபடி படியைப் பார்க்க வேண்டியதாயிற்று. படிக்கட்டுப் பக்கம் அவரைப் பார்த்ததுமே நடத்துநருக்கு சூடு ஏறியது. "இங்க பாரு இஸ்டம் இருந்தா உள்ளார போயி நில்லு. இல்லன்னா வண்டிய வுட்டு இறங்கு."

சுண்ணாம்பு மட்டைக்காரர் கெஞ்சலாய்ப் பேசி பார்த்தும் பலன் இல்லை. எரிச்சலுடன் மேலே ஏறினார். நிறுத்தம் விட்டு பேருந்து புறப்பட, நீண்ட லத்திக் கம்புடன் போலீஸ்காரர் ஒருவர் படிக்கட்டில் இடம் பிடித்துக் கொண்டார். நடத்துநருடன் போலீஸ்காரர் இயல்பாக பேசிக் கொண்டே வருவதைப் பார்த்ததும் சுண்ணாம்பு மட்டைக்காரர் அழுத்தம் அடக்க மாட்டாமல் பேசத் துணிந்து விட்டார். "ஏன்யா சுண்ணாம்பு மட்டன்னா மட்டும் உங்களுக்கு எடஞ்சல், லத்தி கம்பு மட்டும் வாட்டமா இருக்கா, இதாவது உழைக்க பயன்படும். லத்தி கம்பால நாளைக்கு உன்னையும் என்னையும் உதப்பான் நல்லா வாங்கிக்க, இதுக்கு மட்டும் எவனும் முணங்க மாட்டான்." கேட்ட மாத்திரத்தில் "யார்ரா நாய" என்று பாய்ந்து சட்டையைப் பிடிக்க வந்த நடத்துநரையும் போலீஸ்காரரையும் தள்ளவிட்டபடி சிக்னலில் இறங்கி ஓடி மறைந்தார் சுண்ணாம்பு மட்டைக்காரர்.

● சுடர்விழி

www.padippakam.com

“நாட்டை மீண்டும் காலனியாக்காதே மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே” - என்ற முழக்கங்களை முன்வைத்துத் தமிழகமெங்கும் நடத்தப்பட்டது இவ்வாண்டு மே நாள் இயக்கம். மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து தமிழகமெங்கும் நடத்திய இப்பிரச்சார இயக்கம் பா.ஜ.க. அரசின் மறுகாலனியாக்கக் கொள்கைகள்தான் மக்களின் அதிகரித்து வரும் துன்பத்திற்குக் காரணம் என்பதை ஆதாரபூர்வமாக எடுத்தியம்பின; ஆயிரக் கணக்கான துண்டறிக்கைகள், வெளியீடுகள், சுவர் விளம்பரங்கள், ஒலிப்பேழைகள் வாயிலாகத் தமிழகமெங்கும் நடைபெற்றது இப்பிரச்சாரம். நாட்டை மீண்டும் வல்லரசுகளுக்கு அடிமையாக்கும் ஆளும் வர்க்கங்களின் சதிக்கு எதிராகப் போராடுமாறும் மே நாள் பேரணிக்கு தருமபுரியை நோக்கி அணிதிரளுமாறும் அறைகூவின.

# தருமபுரி: மே நாள் - 2000

# மறுகாலனியாக்கத்திற்கெதிரான போர் முழக்கம்

தருமபுரி, 1980-களில் தேவாரத்தால் கொலையுண்ட நக்சல்பாரிகளால் நாடெங்கும் அறியப்பட்டது இம்மாவட்டம். நரவேட்டை முடிந்த பின்னர் ‘‘மாவட்டத்தின் வறட்சிதான் நக்சல்பாரிகளின் வளர்ச்சிக்குக் காரணம்’’ என்று கண்டுபிடித்து அறிவித்தன ஆளும் வர்க்கங்கள்.

கடந்த இருபது ஆண்டுகளில் மக்களின் பின்தங்கிய நிலை மாறவில்லை. பின்தங்கிய மாவட்டத்துக்கான சலுகைகளைப் பெற்றுக் கொண்ட பன்னாட்டு நிறுவனங்களும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களும்தான் ஒசூரில் முன்னேறியுள்ளன. விவசாயமோ ஏறத்தாழ அழிந்துவிட்டது. தஞ்சாவூர் காவிரி நீருக்கு கர்நாடகத்தை எதிர்பார்த்திருக்கிறது என்றால், தருமபுரியோ பிழைப்புக்கு பெங்களூரை நம்பும் நிலை வந்துவிட்டது. இப்போது அங்கும் வேலையின்றித் திக்கற்றவர்களாகத் திரும்பி வருகிறார்கள் மக்கள்.

உலக மயமாக்கத்தின் கீழ் பட்டுநூல் இறக்குமதி, தருமபுரியின் பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழிலை அழிக்கிறது; கடன் அடைக்க வழியின்றி 'மெடிசின் காய்' எனும் நச்சுக்காயைப் பயிரிடும் விவசாயிகள், இரண்டே ஆண்டுகளில் நிலம் தரிசாவதைக்கண்டு வெதும்புகிறார்கள்; உரம், பூச்சி மருந்து வாங்க முடியாத விவசாயிகளிடம் காதும் காதும் வைத்தாற்போல மான்சாண்டோவின் முடிப்பு விதைகள் தள்ளிவிடப்படுகின்றன. மரங்களை வேரோடு மேயும் காட்டிலாகா அதிகாரிகள், ஆடு மேய்ந்தால் காடு அழிந்துவிடும் என்று அதையும் தடுக்கிறார்கள்.

இதுதான் தருமபுரி. இங்கே வளர்ந்திருப்பவை கந்து வட்டி பைனான்சு நிறுவனங்களும், காக்கிச் சட்டையின் பயங்கரவாதமும் மட்டும்தான். தமிழகம் முழுவதற்கும் ஒருசட்டம் என்றால் கோவைக்கும் தருமபுரிக்கும் தனிச்சட்டம். ஜனநாயகத்தின் முகமூடியைக்கூடக் கழற்றி வைத்துவிட்டு போலீசு ஆட்சி நடத்தும் இடங்கள் இவை. உழவர் உழைப்பாளர் மாமன்றத்தைச் சேர்ந்த தோழர். ரவீந்திரன் மோதல் என்ற பெயரில் போலீசால் படுகொலை செய்யப்பட்டார். கிராமம் கிராமமாகச் சென்று மக்களை அச்சுறுத்தியது போலீசு படை. நக்சல்பாரி என்ற சொல்லைக் கேட்டாலே உடனே போலீசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்றும் அறிவித்து மாவட்டம் முழுதும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது போலீசு.

இத்தகைய சூழலில்தான் நடைபெற்றது மே நாள் பேரணிக்கான பிரச்சார இயக்கம். மறுகாலனியாக்கத்திற்கெதிராகப் பிரச்சாரம் செய்வதுடன், போலீசால் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த இந்தப் பீதியை ஒழிப்பதையும் மக்களை அணிதிரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது எமது பிரச்சாரம்.

சுவர் விளம்பரங்கள் போலீசால் அழிக்கப்பட்டன. பிரச்சாரம் செய்து முடித்துவிட்டு புறப்படுவதற்காகப் பேருந்தில் அமர்ந்திருந்த கலைக் குழுவினரை, திடீரென்று வந்திறங்கிய ஆயுதம் தாங்கிய அதிரடிப் படை சுற்றி வளைத்துக் கொண்டு சென்றது. பிரச்சாரக் குழுவினரை சென்றவிடமெல்லாம் பின் தொடர்ந்தது உளவுத்துறை. எனினும் அச்சுறுத்தல்களை மீறி ஏப்ரல் மாதம் முழுவதும் மாவட்டமெங்கும் சென்றது பிரச்சாரம்.



தருமபுரி, பென்னாகரத்தைச் சுற்றிலும் உள்ள சுமார் 50 கிராமங்கள், பாலக்கோடு, தேங்கனிக்கோட்டை, ஓசூர், கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை என்று மாவட்டம் முழுவதிலும் மற்றும் திருப்பத்தூர் வட்டாரத்திலும் பிரச்சாரம் நடந்தது. விவசாயிகள், தொழிலாளிகள், அரசு ஊழியர்கள் என எல்லாத் தரப்பினரையும் எட்டியது பிரச்சாரம். போலீசு பரப்பியிருந்த பீதி முறியடிக்கப்பட்டது. பலர் அமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்தனர். தருமபுரி நகரில் மட்டும் 2000 வெளியீடுகள் விற்பனையாயின.



மருதை

மே நாளன்று மாலை தருமபுரி தொடர்வண்டி நிலையத்தில் துவங்கியது பேரணி. கண்ணுக்கெட்டிய தூரம் வரை செங்கொடிகளால் நிறைந்தது சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலை. இருமருங்கிலும் திரண்டிருந்த மக்களின் காதுகளில் நிறைந்தது நக்சல்பாரி ஒன்றே பாதை என்ற முழக்கம். நாடு மீண்டும் காலனியாவதற்கெதிராக, மக்களைச் சூறையாடும் பொருளாதாரக் கொள்கைக்கெதிராக, தேர்தல் பாதைக்கெதிராக அலையலையாக எழும்பிய முழக்கங்களைக் கூர்ந்து செவி மடுத்தார்கள் மக்கள். இடுப்பில் குழந்தையும் கையில் செங்கொடியுமாக ஏராளமான பெண்களும் அணி



www.padippakam.com



வகுத்துச் சென்ற காட்சியை ஒளிபரப்பின தனியார் தொலைக் காட்சிகள்.

மாலை கே.ஆர்.எம்.எஸ். திடலில் துவங்கிய பொதுக் கூட்டத்தில் சுமார் 5000 பேர் நிறைந்திருந்தனர். ஓட்டுக் கட்சிகளின் உள்ளூர் அணிகளில் பலர் வந்திருந்தனர். தலைமையுரையாற்றிய தோழர். வெங்கடேசன், (வி.வி.மு. பென்னாகரம்) மறுகானியாக்கத்தின் விளைவாக தருமபுரி மாவட்ட மக்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விளக்கினார். அடுத்து உரையாற்றிய தோழர். சேகர் (பு.மா.இ.மு., திருச்சி) வறட்சியால் வட மாநில மக்கள் தவிக்கும் போதும் இரக்கமற்றிருக்கும் பா.ஜ.க. அரசின் மக்கள் விரோதத் தன்மையைச் சாடினார். தோழர். விஜய குமார் (பு.ஜ.தொ.மு., சென்னை) மறுகாலனியாக்கமும், புதிய பொருளாதாரக் கொள்கையும் தொழிலாளர்களின் வேலையிழப்பிற்கும், தனியார்மய மாக்கலுக்கும் காரணமாகவிருப்பதைச் சான்றுகளுடன் விளக்கினார்.



இறுதியாகச் சிறப்புரையாற்றிய ம.க.இ.க.வின் மாநிலச் செயலர் தோழர். மருதையன் "நாம் தொழிலாளி வர்க்கம் கொள்ளையிடப்படுவதை எதிர்த்து மே நாள் பேரணி நடத்துகிறோம். இரண்டு தெருக்கள் தள்ளி அ.தி.மு.க.வினர் புரட்சித் தலைவியின் கொள்ளையடிக்கும் உரிமையை நிலைநாட்டக் கூட்டம் நடத்துகிறார்கள்" எனக் கூறி பிழைப்புவாதிகள் மே தினத்தை இழிவுபடுத்துவதையும், சாடினார். நாட்டை மீண்டும் காலனியாக்காதே என்பது தான் இன்று நம் அரசியல் முழக்கமாக இருக்க முடியும் என்பதைப் பல சான்றுகளுடன் விளக்கினார்.



"வட மாநிலங்களில் வறட்சியால் 5 கோடி மக்கள் தவிக்கும்போது நிரம்பி வழியும் உணவு தானியக் கையிருப்பிலிருந்து ஒரு கிலோ அரிசியைக் கூட இலவசமாக அவர்களுக்கு வழங்க மறுக்கிறது வாஜ்பாயி அரசு. காரணம் உலக வர்த்தகக் கழகம் கூறும் நிபந்தனைகள்" என்று கூறி மறுகாலனியாக்கத்தின் இரக்கமற்ற சந்தை வெறியைச் சாடினார்.

பருத்தி விவசாயிகள் தற்கொலை, கரும்பு விவசாயிகளின் போராட்டம், நீலகிரி தேயிலை விவசாயிகளின் போராட்டம், உணவு உற்பத்திச் சீர்குலைவு ஆகிய ஒவ்வொன்றுக்கும் உலகமயமாக்கக் கொள்கைகளே காரணம் என்பதையும் கோழி இறைச்சி, பால் பவுடர் போன்றவற்றையும் இறக்குமதி செய்வதன் மூலம் விவசாயிகள் எல்லாத் திசையிலிருந்தும் அழிக்கப்படுகிறார்கள் என்பதையும் விளக்கினார்.

கைத்தறி உள்ளிட்ட ஜவுளித் தொழில் அழிக்கப்படுவது, பொதுத் துறைகள் தனியார் மயமாக்கப்படுவது, ஆழ்கடல் மீன்பிடி உரிமை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவது, மின்சாரம், சாலை, துறைமுகம், தொலைபேசி உள்ளிட்ட கட்டுமானத் துறைகளும் தண்ணீர் விநியோகமும் கூட அந்நியக் கம்பெனிகளுக்கு அளிக்கப்படுவதை அவர் பட்டியலிட்டார்.

இப்படி நாட்டின் ஆகப் பெரும்பான்மையான மக்களின் நலனுக்கு எதிராக, சில பன்னாட்டு முதலாளிகளின் லாபத்துக்காக நாடே விற்கப்படுவதையும், உலக வர்த்தகக் கழகம், உலகவங்கி போன்றவை நகராட்சி வரையில் நேரடியாக ஆணை பிறப்பிப்பதையும், இதற்கேற்ப அரசியல் சட்டத்தைத் திருத்த முயல்வதையும் அம்பலப்படுத்தினார்.

இந்தச் சட்டங்களுக்கு உட்பட்டு மக்கள் வாழ இயலாது என்பதையும், இந்த ஓட்டுச் சீட்டு அரசியல் மூலம் இதற்குத் தீர்வு காண இயலாது என்பதையும் விளக்கியபின் மக்கள் மீது அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த வன்முறைக்கு வன்முறையால்தான் பதிலளிக்க இயலும் என்றும், புதிய ஜனநாயகப் புரட்சியை முன்வைக்கும் நக்சல்பாரிப் பாதையே இதற்குத் தீர்வு என்றும் அறைகூவி முடித்தார்.

**இந்தச் சட்டங்களுக்கு உட்பட்டு மக்கள் வாழ இயலாது! இந்த ஓட்டுச் சீட்டு அரசியல் மூலம் மக்களுக்கு தீர்வில்லை! மக்கள் மீது அரசு ஏவி விட்டிருக்கும் இந்த வன்முறைக்கு வன்முறைதான் பதில்! புதிய ஜனநாயகப் புரட்சியை முன்வைக்கும் நக்சல்பாரிப் பாதையே இதற்குத் தீர்வு!**

இறுதியாகத் துவங்கியது கலை நிகழ்ச்சி. "விடுகதையில் விடையும் இருக்கு. சொல்ல விவரம் வேணும் உனக்கு" என்ற பாடல் மறுகாலனியாக்கத்தைப் புதிர் போட்டு விடுவித்தது. "எனக்கு நாடுண்டு ஆனால் ஊர் இல்லை. என் பெயர் இந்தியன்" என்ற பாடலை பிழைப்புக்காக மண்ணை விட்டு ஓடும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ள தருமபுரி மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள்.

அடுத்தடுத்த பாடல்களைக் கேட்க மக்களின் ஆர்வம் கூடிக் கொண்டிருந்த போதே, போலீசுக்கு ஆத்திரம் தலைக்கேறிக் கொண்டிருந்தது. சிறப்புரை தொடங்கிய சிறிது நேரத்திலேயே "உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. கூட்டத்தை முடியுங்கள்" என்று நச்சரித்து வந்த அதிகாரிகள் நிகழ்ச்சியைத் தடுக்கவும் முடியாமல் சகிக்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். கலை நிகழ்ச்சி துவங்கியவுடனே "இனிமேலும் இது நீடிக்க முடியாது" என்ற கொதிநிலைக்கு வந்தது காவல்துறை. கூட்டம் சர்வதேசிய கீதத்துடன் முடிவடைந்தது.

அடுத்த தெருவில் மேடையில் 50 பேரும், கீழே 25 பேரும் அமர்ந்திருந்த அ.தி.மு.க. பொதுக் கூட்டம் நள்ளிரவு வரை போலீசு பாதுகாப்புடன் நடந்து கொண்டிருந்தது. இந்த அநீதியைக் கண்டு கொதித்துப் போன ஒரு தோழர் "இனிமேலும் இது நீடிக்கக் கூடாது" என்றார். அதுதான் இம்மேதினத்தின் அறைகூவல்!

www.padippakam.com



# அமெரிக்க மோகம்

வெங்காயத்திற்கு விலை கிடைக்கும் என்று நம்பிப் பயிரிட்டு ஏமாந்த விவசாயிகள், விலை போகாமல் குவிந்த வெங்காயத்தைத் தெருவில் கொட்டினார்கள். விலை போகாத பட்டதாரிகளை எங்கே கொட்டுவது?

பலரையும் கலந்தாலோசித்து "இந்தப் படிப்புக்குத்தான் எதிர்காலம்" என்று நிச்சயப்படுத்திக் கொண்டு படித்து முடித்த பட்டதாரிகள், விலை போகாமல் உழைப்புச் சந்தையில் குவிந்து வருகிறார்கள்.

பட்டதாரிகளை வெங்காயத்திற்கு ஒப்பிட நேர்ந்தது வருந்தத்தக்க நிலைதான். எனினும், உலகமயமாக்கமும் சந்தைப் பொருளாதாரமும் பட்டதாரிகளுக்கு வெங்காயத்திற்குரிய தகுதியைத்தானே வழங்கியுள்ளன!

"டெக்ஸ்டைல் தொழில் நுட்பம் படித்து விட்டு வந்தேன். கோவையில் பாதி மில்கள் மூடிக் கிடக்கின்றன. அடுத்து ஆயத்த ஆடை வடிவமைப்பு படிக்கிறேன். ஆடை இறக்குமதிக் கட்டுப்பாட்டை அரசு நீக்கவிருப்பதால் நான் படித்து முடிக்கும்போது அந்தத் தொழிலும் நசித்து விடும்" என்று வருந்தினார் ஒரு மாணவர்.

சோப்பு உற்பத்தியிலிருந்து எண்ணெய் சுத்திகரிப்பு - அங்கிருந்து அப்படியே தகவல் தொழில் நுட்பம் என்று லாபமீட்டும் துறைகளை நோக்கி பங்குச் சந்தையில் தாவியபடியே இருக்கும் நிதிமூலதனத்திற்குக் கல்வித் தகுதி தேவைப்படுவதில்லை. ஆனால் கல்வித் தகுதியை மட்டுமே தமது மூலதனமாகக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஒரு தொழிலிலிருந்து இன்னொரு தொழிலுக்கு நிதிமூலதனத்தைப் போலத் தாவ முடிவதில்லை.

எனவே, "எந்தத் தொழிலுக்கு எதிர்காலம் இருக்கிறது" என்பதை ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் பெற்றோர்கள்.

ஆனால் அதையெல்லாம் யார் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பது? நண்பர்கள் கூறும் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதானால் ஆய கலைகள் அறுபத்து நான்கிற்கும் அப்ளிகேசன் போடலாம். ஆனால், "பிள்ளை இளவரசனா ஆகப் போகிறான், எதையோ படித்துத் தொலைக்கட்டும்" என்று கடைசியில் சோர்ந்து விடுகிறார்கள் பல பெற்றோர்கள்.

நீதிமன்றங்களின் வாசலில் மொய்க்கும் கிளி ஜோசியக்காரர்களைப் போல கல்விச் சந்தையை மொய்க்கிறார்கள் கல்வி வியாபாரிகள். உழைப்புச் சந்தையில் வேலை இல்லாதோர் கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க கல்வி வியாபாரிகளின் வர்த்தகத் திறமையும் அதிகரிக்கிறது.

"இணையப் புரட்சிக்கு இன்னுமா நீங்கள் தயாராகவில்லை? காலத்தால் கழித்துக் கட்டப்படுவோம் என்ற அச்சம் உங்களுக்கு இல்லையா?" என்று மிரட்டுகிறது ஒரு விளம்பரம். "பில் கேட்ஸ் பத்து வயதில்தான் கணினியைக் கற்கத் தொடங்கினார்; உங்கள் மகன் இரண்டு வயதிலேயே தொடங்கட்டுமே" என்று 'ஆலோசனை' சொல்கிறது ஒரு விளம்பரம். "எங்களிடம் அனுப்புங்கள் 20 வயதில் உங்கள் மகனைக் கோடீசுவரன் ஆக்கிக் காட்டுகிறோம்" என்று ஆசை காட்டுகிறது இன்னொரு விளம்பரம்.

"பி.காம் (வணிகவியல்) படிக்கப் போகிறீர்களா, அதனுடன் இ.காம் (மின் வணிகம்) சேர்த்துப் படியுங்கள். எது படித்தாலும் முன்னால் ஒரு 'இ' (E) சேர்த்து அதையும் படியுங்கள்" என்கிறார் அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அனந்த கிருஷ்ணன்.

"இது தகவல் தொழில் நுட்ப (Information Technology) யுகம். இதில் இ-ந்தியர்களுக்கு மட்டும்தான் எதிர்காலம்" என்கின்றன பல்கலைக் கழகங்களின் மாணவர் ஆலோசனை மையங்கள்.

ஏற்கனவே பொறியியல், இயற்பியல், வணிகவியல் என்று பல்வேறு இயல்களைப் படித்தும் வேலையின்றித் தவிக்கும் இளைஞர்கள் "சுய வேலை வாய்ப்பு" தேடிக் கொள்ள வேண்டியதுதான் என்று கையை விரித்துவிட்ட அரசு, அமெரிக்க முதலாளிகளுக்கு "ஆள் சப்ளை" செய்வதற்கு மட்டும் உத்திரவாதம் தருகிறது.

"தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு உலகச் சந்தையில் பெரும் தேவை இருப்பதால் ஆண்டுக்கு 2 லட்சம் வல்லுனர்களை 'உற்பத்தி' செய்ய இந்திய அரசு திட்டமிடும். இதற்காகப் பிராந்திய பொறியியல் கல்லூரிகளின் (R.E.C.) 'தரத்தையும்' அரசு உயர்த்தும்" என்று வாஷிங்டன் சென்று சத்தியம் செய்து கொடுத்துள்ளார் அமைச்சர் பிரமோத் மகாஜன். (இந்து - மே-27) ஏற்றுமதிக்கான உற்பத்தியில் இறால் பண்ணைகளுடன் இ-கல்விப் பண்ணைகளும் சேர்கின்றன.



தினமணி வெளியிட்டுள்ள "மாணவர் மலர்-2000"த்தில் விளம்பரங்கள் போக மீதி உள்ள பக்கங்களில் எங்கும் நிறைந்திருக்கும் ஒரே செய்தி: கணினி - இணையம் - அமெரிக்கா!

"போலீஸ் வேலை - 8000 பேர் தேவை" என்று பெட்டிக் கடைகளில் அட்டை தொங்க விட்டு விண்ணப்பப் படிவம் விற்பது போல "அமெரிக்காவில் வேலை -


படிப்பகம்

www.padippakam.com

"லட்சம் பேர் தேவை" என்று அட்டை தொங்காத குறைதான். அமெரிக்க வேலை 'கவுரவமானது' என்பதால் அமைச்சர்களும் துணைவேந்தர்களுமே கழுத்தில் அட்டையைக் கட்டிக் கொண்டு அலைகிறார்கள்.

சென்னையில் உள்ள அமெரிக்க கான்சல் அலுவலகமோ சீரங்கம் கோயிலை நினைவுபடுத்துகிறது. வைகுந்த ஏகாதசியன்று நள்ளிரவிலும் சொர்க்கவாயிலின் கதவு திறக்கப்படுவதற்காக முண்டியடிக்கும் பக்தர்கள் போல இங்கே 365 நாளும் சொர்க்க வாசல் கூட்டம். அந்த வரிசையில் துண்டு போட்டு இடம் பிடித்துத் தரும் சுய வேலைவாய்ப்பையும் படிக்காத இந்தியர்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறது அமெரிக்க வேலை வாய்ப்பு.

இந்தத் தகவல் தொழில்நுட்பப் போதையிலோ, பீதியிலோ ஆயிரக்கணக்கில் கொட்டியழுது ஆப்டெக், என்.ஐ.ஐ.டி. போன்ற கணினிப் பயிற்சி நிலையங்களுக்குள் காலடி வைக்கும் மாணவர்களை, நட்சத்திர ஓட்டலை விஞ்சும் உள் அலங்காரங்கள் மயக்குகின்றன. அமெரிக்காவிற்குப் பாதிதூரம் வந்துவிட்டதைப் போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றன.

நகர்ப்புறத்தின் நடுத்தர வர்க்கத்திற்கு மட்டுமே உரியதல்ல இந்த அமெரிக்க மோகம். ஒரு கிராமத்து வாத்தியார் மகன் அமெரிக்கா போய்விட்டால் ஊரே அவன் சம்பளத்தை விசாரிக்கிறது. மாதம் 6000 டாலர் என்றால் அதை 40 ஆல் பெருக்கிப் பார்த்து, 30 ஆல் வகுத்துப் பார்த்து "ஒரு நாளைக்கு 8000 ரூபாய் சம்பளமா?" என்று வாய் பிளக்கிறது.

ஆண்டு முழுவதும் பாடுபட்டும், தான் சம்பாதிக்க முடியாததை ஒரே நாளில் சம்பாதிக்க முடியுமென்றால் அந்த சொர்க்க பூமிக்குத் தன் மகனையும் அனுப்பினால்தான் என்ன என்ற ஆசை விவசாயிக்கும் வருகிறது. "அமெரிக்காவில் ஒரு லட்சம் வேலைகள் தயார் - நீங்கள் தயாரா?" என்ற விளம்பரம், "நீங்கள் ஏன் அந்த லட்சாதிபதியாக இருக்கக் கூடாது?" என்ற கே.ஏ.எஸ். சேகரின் லாட்டரி விளம்பரத்திற்கு இணையான கவர்ச்சியுடன் மாணவர்களைத் தாக்குகிறது.

தங்கத்தைத் தேடி அமெரிக்காவின் மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் அலைந்த சினிமா கௌபாய்களைப்போல சிலிகான் பள்ளத்தாக்கின் தங்கத்திற்காகத் தவமிருக்கிறார்கள் பல இந்திய மாணவர்கள். இந்தத் தங்கக் கனவு நிலைக்குமா? 'இனி மேற்கில்தான் விடியும்' என்ற ஆருடம் பலிக்குமா?



**சென்னையில் உள்ள அமெரிக்க கான்சல் அலுவலகமோ சீரங்கம் கோயிலை நினைவுபடுத்துகிறது. வைகுந்த ஏகாதசியன்று நள்ளிரவிலும் சொர்க்க வாயிலின் கதவு திறக்கப்படுவதற்காக முண்டியடிக்கும் பக்தர்கள் போல இங்கே 365 நாளும் சொர்க்க வாசல் கூட்டம்.**

***

வெளிநாட்டுக்குப் பிழைக்கப்போவது ஒன்றும் நமக்குப் புதிதில்லை. இலங்கையின் தேயிலைத் தோட்டத்தையும், மலேசியாவின் ரப்பர் தோட்டத்தையும், பிஜியின் கரும்புத் தோட்டத்தையும் நம் மக்கள் உருவாக்கியிருக்கிறார்கள்; பின் வளைகுடா நாடுகளுக்குப் போயிருக்கிறார்கள். முன்னவர்கள் கந்துவட்டியின் கொத்தடிமைகளாகவும், கட்டாய அடிமைகளாகவும் போனார்கள்; பின்னவர்கள் கலியாணக் கடன் அடைக்கவும் கொஞ்சம் காசு பார்க்கவும் போனார்கள். பெரம்பலூர் போன்ற வறட்சிப் பகுதிகளிலிருந்து கூட்டம் கூட்டமாக இளைஞர்கள் வேலை தேடி சிங்கப்பூர் போகிறார்கள்.

"துபாயில் தச்சு வேலைக்கு நல்ல சம்பளம், குவைத்தில் ஓட்டுனருக்கு நல்ல சம்பளம், சவுதியில் லைன்மேனுக்கு நல்ல சம்பளம்" என்று தொழிலாளர்கள் திரவியம் தேடப் போன ரகத்தைச் சேர்ந்ததல்ல இந்த அமெரிக்க மோகம்.

**"இணையப் புரட்சிக்கு இன்னுமா நீங்கள் தயாராக வில்லை? காலத்தால் கழித்துக் கட்டப்படுவோம் என்ற அச்சம் உங்களுக்கு இல்லையா?" என்று மிரட்டுகிறது ஒரு விளம்பரம். "எங்களிடம் அனுப்புங்கள், 20 வயதில் உங்கள் மகனைக் கோடீசுவரன் ஆக்கிக் காட்டுகிறோம்" என்று ஆசை காட்டுகிறது இன்னொரு விளம்பரம்.**

"தகவல் தொழில்நுட்பப் புரட்சி → கணினி → இணையம் → அமெரிக்கா → டாலரில் சம்பளம்" என்ற எளிய கனவுதான் முதலில் மாணவர்கள் கண்களுக்குத் தெரிகிறது என்றாலும் இந்தக் கனவு மாளிகையின் கற்களுக்கிடையில் பல்வேறு கருத்துக்கள் சாந்தாகப் பூசப்பட்டுள்ளன. விளம்பரங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைச் செய்திகள், கல்வி நிறுவனங்கள், அரசுக் கொள்கைகள் போன்றவை வாயிலாக இக்கருத்துக்கள் ஆக்கிரமித்துள்ளன.

அமெரிக்கக் கனவை நியாயப்படுத்துவோரிடமிருந்து சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப கீழ்க்கண்ட அரை உண்மைகளும், முழுப்பொய்களும் வெளிப்படுவதை நீங்கள் கவனித்திருக்கலாம்.

"இந்தியர்களின் அறிவுத்திறனைக் கண்டு உலகமே வியக்கிறது. ஏழ்மையும் மூடத்தனமும் நிறைந்த நாடு என்று மேற்குலகம் நம்மைப் பற்றி வைத்திருந்த கருத்து தகர்ந்து தரைமட்டமாகி வருகிறது.

இந்தியாவில் திறமைக்கு மதிப்பில்லை. அமெரிக்கா மதிக்கிறது. அதனால்தான் அது வல்லரசாக வளர்ந்திருக்கிறது.

நம்மவர்கள் பலர் அமெரிக்கா சென்று பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பார்ப்பதன் மூலம் அந்நிய மூலதனத்தைக் கவர்ந்து இங்கே கொண்டு வரலாம்.

படித்தவர்கள் வெளிநாடு போகக் கூடாது என்று பேசுவது பழமைவாதம். இன்று தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் உலகமே கிராமமாகி

www.padippakam.com

விட்டது. இனி உலக வேலை வாய்ப்பு பற்றித்தான் பேச முடியும்.

அமெரிக்கா போவதே ஒரு வகையில் நாட்டுப் பற்றுள்ள நடவடிக்கைதான். அங்கிருந்து டாலரை அனுப்பினால் இங்கே அந்நியச் செலாவணி பெருகும்.

இங்கிருந்து வேலைக்காகச் செல்லும் ஒவ்வொரு இளைஞனும் முதலாளியாக வாய்ப்பு உள்ளது. புதிய மென்பொருள் எழுதும் அறிவு, இணையத்தில் புதிய, கவர்ச்சிகரமான சேவையை அறிமுகப்படுத்தும் திறமை ஆகியவை இருந்தால் போதும் - மூலதனம் இல்லாமல் ஒவ்வொரு அறிவாளியும் முதலாளி ஆகலாம்.

இன்று அமெரிக்காதான் வல்லரசு. நம்மவர்கள் பெருமளவில் அங்கே குடியேறுவதன் மூலம் யூதர்களைப் போல ஒரு லாபியை (குழுவை) உருவாக்கி அமெரிக்க அயலுறவுக் கொள்கை நமக்குச் சாதகமாக இருப்பது போலச் செய்ய முடியும்.

விவசாயம், ஆலை உற்பத்தி ஆகியவற்றைச் சார்ந்து பொருளாதாரம் இயங்கிய காலம் முடிந்து விட்டது. இனிமேல் கணினி - இணையம், மின் - வணிகம், இணையப் பத்திரிகைகள், மல்டி - மீடியா, தொலைக்காட்சி போன்ற புதிய புதிய சேவைத்துறைகளுக்குத் தான் எதிர்காலம் - உற்பத்தித் துறைக்கு அல்ல.

தொழில்புரட்சியை நாம் தவறவிட்டு விட்டோம். அறிவுப் புரட்சி நம் கதவைத் தட்டுகிறது. நாம் தகவல் தொழில்நுட்ப வல்லரசாக வளர முடியும். நூறு பில் கேட்ஸ்களை உருவாக்கலாம். இணையத்தில் யார் வேண்டுமானாலும் கருத்தைப் பரப்பலாம். தொழிலில் போட்டியிடலாம். இது ஒரு உலகு தழுவிய ஜனநாயகம்.''

இந்த வாதங்கள் அனைத்தும் அமெரிக்காவின் தலைமையிலான ஒற்றைத்துருவ உலக அமைப்பை கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள்வதுடன் சம்பந்தப்பட்டவை.

தமது தடையற்ற வர்த்தகத்திற்காக நாடுகளின் எல்லை, இறையாண்மை ஆகியவற்றைத் தகர்த்தெறியும் பன்னாட்டு நிறுவனங்களின் திட்டத்துடன் சம்பந்தப்பட்டவை. பின் தங்கிய ஏழை நாடுகளை மீண்டும் காலனி நாடுகளாக மாற்றும் சதியுடன் சம்பந்தப்பட்டவை.



'எதிர்கால கணினி ஜீனியஸ்' 4 வயது சம்பாவ் பாணியைக் கொண்டாடும் பெற்றோர். இன்றைய இந்திய நடுத்தரவர்க்கத்தின் லட்சியக் குழந்தை!

உலகு தழுவிய உற்பத்தி வலயங்கள், உலகு தழுவிய வேலைப் பிரிவினை என்று உற்பத்தி முறையில் பன்னாட்டு நிறுவனங்கள் புகுத்தும் புதிய உற்பத்திப் போக்குகளுடன் சம்பந்தப்பட்டவை.

வெறிகொண்ட முதலாளித்துவச் சந்தை வாதத்துடன் சம்பந்தப்பட்டவை.

உடல் உழைப்பை இழிவானதாகவும், மூளை உழைப்பை மேன்மையானதாகவும் கருதும் பார்ப்பனியக் கண்ணோட்டம், அறிவைத் தன் சொந்த உடைமையாகக் கருதும் முதலாளித்துவ சமூக விரோதக் கண்ணோட்டம், இவையிரண்டும் இணைந்த 'தகுதியற்றவர்கள் அழியத்தான் வேண்டும்' என்று கூறும் சமூக டார்வினியக் கண்ணோட்டம் ஆகிய அனைத்தையும் வெவ்வேறு விதமாக வெளியிடுகிறார்கள் இந்த புரட்சிக்காரர்கள் - அதாவது தகவல் தொழில்நுட்பப் புரட்சிக் காரர்கள்.

**நகர்ப்புறத்தின் நடுத்தர வர்க்கத்திற்கு மட்டுமே உரியதல்ல இந்த அமெரிக்க மோகம். ஒரு கிராமத்து வாத்தியார் மகன் அமெரிக்கா போய்விட்டால் ஊரே அவன் சம்பளத்தை விசாரிக்கிறது. மாதம் 6,000 டாலர் என்றால் அதை 40 ஆல் பெருக்கிப் பார்த்து, 30 ஆல் வகுத்துப் பார்த்து "ஒரு நாளைக்கு 8000 ரூபாய் சம்பளமா?'' என்று வாய் பிளக்கிறது.**

***

சமீபத்தில் தமிழ் வார இதழொன்று கணினிப் பட்டம் பெறப் படிக்கும் மாணவர்களின் பேட்டியை வெளியிட்டிருந்தது. சாதாரண நடுத்தர வர்க்கப் பின்னணி கொண்ட மதுரையைச் சேர்ந்த ஒரு மாணவர் அதில் இப்படிக் கூறுகிறார்.

''நான் எம்.சி.ஏ. படிக்கிறேன். எனக்கு இந்தியாவில் அதிக பட்சம் 20,000 ரூபாய் மாதச் சம்பளம் கிடைக்கும். அமெரிக்காவிலோ எடுத்தவுடனே ஒரு லட்சத்துக்கும் மேல் கிடைக்கும். பத்தாண்டுகள் அங்கே சம்பாதிப்பேன். வர்த்தகத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்வேன். பிறகு ஒரு பன்னாட்டு நிறுவனக் கூட்டுடன் இந்தியாவில் தொழில் தொடங்குவேன்.''

இந்த மாணவரின் கூற்றுப்படியே பார்த்தாலும், இவர் இந்தியாவில் வேலை கிடைக்காதென்பதால் அமெரிக்கா போக விரும்பவில்லை. தன் 'திறமைக்கு' உரிய 'மதிப்பு' கிடைக்காததால் போகிறார். தன்னுடைய திறமைக்கு உரிய சம்பளம் கிடைக்கவில்லை என்று இந்தியாவை விட்டுப் போனவர் பத்தாண்டுகள் கழித்து ஒரு அமெரிக்க முதலாளியாக இந்தியாவுக்குத் திரும்பி வருவாராம். தொழில் தொடங்கி, திறமைக்கு 'உரிய' சம்பளம் கொடுக்கத் தேவையில்லாத இந்தியாவில், இளைஞர்களைச் சுரண்டுவாராம். இதைக் கூறுவதற்காக அவர் கடுகளவும் கூச்சப்படவில்லை.

ஏனென்றால் இன்றைய இளைய தலைமுறையின் நாயகர்களாகவும் முன்னோடிகளாகவும் இத்தகையவர்கள்தான் சித்தரிக்கப்படுகின்றனர்.

''1980-இல் சி.பி.எஸ்.இ தேர்வில் நாட்டிலேயே முதல் மாணவனாக வந்த நரேஷ் குப்தாவிடம் 'உங்கள் லட்சியம் என்ன?' என்று கேட்ட போது 'அமெரிக்கா சென்று திரும்பி வந்து இந்தியாவில் பன்னாட்டு நிறுவனமொன்றின் கிளையைத் துவங்குவதே என் லட்சியம்' என்றார். சொன்னதைச் செய்து விட்டார். அடோப் சிஸ்டம்ஸ் என்ற அமெரிக்க கணினி நிறுவனத்தை இந்தியாவில் துவக்கி விட்டார்'' என்று புகழாரம் சூட்டுகிறது டைம்ஸ் ஆப் இந்தியா.

''விப்ரோ நிறுவனத்தின் முதலாளி ஹஷாம் பிரேம்ஜி 2 லட்சம் கோடிக்கு


படிப்பகம்

www.padippakam.com

அதிபதி. உலகின் முதல் 5 பணக்காரர்களில் ஒரு இந்தியர்! அவருடைய நிறுவனத்தின் 2 ரூபாய் மதிப்புள்ள பங்கு இன்று 9,600 ரூபாய்க்கு விற்கிறது. பாதி பங்குகளை விற்றால் அவர் ரிலையன்ஸ், இந்துஸ்தான் லீவர் போன்ற நிறுவனங்களையே விலைக்கு வாங்கி விடலாம். இருந்தும் அவர் எளிமையானவர். இன்றைக்கும் பத்தாவது மாடியில் உள்ள தன் அலுவலகத்திற்குப் படியேறித் தான் போகிறார்'' என்று உருகுகிறது இந்தியா டுடே. பத்தாவது மாடிக்குப் படியேறிச் செல்பவர்களுக்கெல்லாம் 'நம்பிக்கை' ஊட்டுகிறது.

''சாதாரணப் பள்ளி ஆசிரியரின் ஐந்தாவது மகனாகப் பிறந்து இன்று 37,000 கோடி சந்தை மதிப்புள்ள **இன்போசிஸ்** என்ற நிறுவனத்தின் முதலாளி ஆகியிருக்கும் நாராயணமூர்த்தியின் கதையைக் கேளுங்கள்'' என்கிறது இன்னொரு ஏடு.

''தலைக்கு 10,000 ரூபாய் போட்டு 7 நண்பர்கள் சேர்ந்து 1981-இல் இந்த நிறுவனத்தைத் துவக்கினோம். எந்த முதலாளியின் தயவையும் நாடாமல் எங்கள் மூளையை மட்டும் பயன்படுத்தினோம். ஒரு நாளைக்கு 20 மணி நேரமெல்லாம் உழைத்திருக்கிறோம்''.

''இந்தியர்கள் மேலைநாடுகளுக்கு ஓடுவது சரியா, என்று 20 ஆண்டுகளுக்கு முன் யாராவது என்னைக் கேட்டிருந்தால் 'தவறு' என்று சொல்லியிருப்பேன். இன்றோ 'போக வேண்டும்' என்கிறேன். இந்தியர்களாலும் சாதிக்க முடியும் என்பதை அமெரிக்காவில் நம்மவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.''

''அவர்களில் சிலராவது இங்கே திரும்ப வேண்டுமென்றால் அதற்கு உகந்த படி இந்த நாட்டை மாற்ற வேண்டும். செல்வத்தை சிலர் உருவாக்கினால்தான் இல்லாதவர்களுக்கு அதை விநியோகிக்க முடியும். வறுமையை நாம் விநியோகிக்க முடியாது.'' என்கிறார் நாராயணமூர்த்தி.

செல்வத்தைச் சிலர் உருவாக்கிப் பலருக்கு விநியோகிப்பது என்ற நைந்துபோன முதலாளித்துவப் பொய்யை, ஜமீன்தாரின் தயவில்தான் ஏழை விவசாயிகள் கஞ்சி குடிக்க முடியும் என்ற நிலப்பிரபுத்துவ மூடத்தனத்தை ஒரு தத்துவஞானிக்குரிய கம்பீரத்துடன் பிரகடனம் செய்கிறார். ''அவர் ஒரு முன்னாள் இடதுசாரி'' என்று அடிக்கோடிட்டுச் சொல்கின்றன பத்திரிகைகள்.

ஐ.ஐ.டி.யில் - இந்திய மக்களின் வரிப் பணத்தில் படித்து, அமெரிக்கா சென்று பன்னாட்டு நிறுவன அதிகாரிகளாகி, சொந்த வீட்டுக் கூரைக்குக் கொள்ளி



**சென்னையில் சர்புதீன் - தவுலத் பானு தம்பதியினரின் மகன் சாய்ரா பானு கூறுகிறார், ''நான் படிச்சுட்டு அமெரிக்கா போவேன்'' - ஆனந்த விகடனில்.**

வைக்கக் கையில் தீவட்டியோடு திரும்பி வந்திருக்கும் 'பாரதத்தாயின் தவப்புதல்வர்களை' அட்டையில் போட்டு கவுரவிக்கிறது அவுட்லுக் வார ஏடு.

மென்பொருள் தயாரித்து பன்னாட்டு நிறுவனத்துக்கு விற்றுக் கோடிக்கணக்கில் சம்பாதித்த ரிஷி பட் என்ற இளைஞரின் கதை தினத்தந்தி இளைஞர் மலரில்; சி.டி திருட்டைத் தடுக்கும் மென்பொருளை ஜப்பானிய நிறுவனத்துக்கு விற்று பல கோடி ஈட்டிய கேரள கிராமத்து ஊனமுற்ற இளைஞரின் கதை குங்குமத்தில்; குமுதத்திலோ பிசனஸ் மகாராஜாக்கள் எனும் தொடர்....

அமெரிக்காவுக்கு ஓடியவர்கள், அந்நிய நிறுவனங்களுக்கு ஆள் பிடிக்கும் கங்காணிகள், அறிவைக் காசாக்கும் அற்பர்கள் - இவர்கள்தான் உலகமயமாக்கம் படைக்கும் இலக்கியத்தின் தேசிங்கு ராஜாக்கள்.

**செல்வத்தைச் சிலர் உருவாக்கிப் பலருக்கு விநியோகிப்பது என்ற நைந்துபோன முதலாளித்துவப் பொய்யை, ஜமீன்தாரின் தயவில்தான் ஏழை விவசாயிகள் கஞ்சி குடிக்க முடியும் என்ற நிலப்பிரபுத்துவ மூடத்தனத்தை கம்பீரத்துடன் பிரகடனம் செய்கிறார் இன்போசிஸ் நிறுவனத்தின் முதலாளி நாராயணமூர்த்தி.**

ஆவியெழுப்பும் கூட்டத்தின் தேவசாட்சியங்களைப் போல இவர்கள் ஒருவர் பின் ஒருவராக மேடையேறி 'முதலாளித்துவத்தின் ஆவி' தமக்குள் இறங்கிய அனுபவத்தை விவரிக்கிறார்கள். பரவசமடைந்த மதுரை மாணவரைப் போன்ற இளைஞர்கள் ''அல்லேலுயா'' என்று உடல்நடுங்கக் கூவுகிறார்கள். இந்த நற்செய்தியை எல்லா மாணவர்களுக்கும் கொண்டு செல்கிறார்கள். வேலைவாய்ப்பு தேடும் இளைஞன் உலகமயமாக்கத்தின் பிரச்சாரகனாகப் பதவி உயர்வு பெறுவது இப்படித்தான்.

''இங்கு நிலவும் முதலாளித்துவ உணர்ச்சியின் வேகமும் வெறித்தனமும் எனக்கு ஆச்சரியமளிக்கிறது'' என்கிறார் இந்தியாவுக்கு வந்திருக்கும் இன்டெல் கணினி நிறுவனத்தின் தலைவர் கிரெய்க் பாரெட். இதென்ன ஆச்சரியம், இதைவிட ஆச்சரியத்தைக் கேளுங்கள்.

''பில் கேட்ஸின் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கெதிராக அமெரிக்க நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியுள்ளதே அதைப் பற்றி மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள்?'' என்று ஒரு அரசுப் பொறியியல் கல்லூரி மாணவரைக் கேட்டேன். ''பில் கேட்ஸ் தண்டிக்கப்படுவது தகவல் தொழில்நுட்பத் துறைக்கே நல்லதில்லை. அவர் இல்லையென்றால் இந்தத் துறையே இல்லை என மாணவர்கள் கருதுகிறார்கள்'' என்று அவர் பதிலளித்தார்.

பில் கேட்ஸ் மீதான குற்றச்சாட்டு என்ன, தீர்ப்பு என்ன என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் பில்கேட்ஸ் பக்தர்களாகிவிட்டனர் மாணவர்கள்!

பில்கேட்ஸ் 10 வயதில் கணினியைக் கற்கத் தொடங்கிய கதை, அவர் உலகின் முதல் பணக்காரராக உயர்ந்த கதை, அவரது தரும சிந்தனை, அவரது நாயின் உணவுப் பழக்கங்கள் போன்றவை உட்பட பில் கேட்ஸ் புராணமாக பத்திரிகைகளில் வருகின்றன.

'எசமான் காலடி மண்ணெடுத்து நெத்தியில பொட்டு வைப்போம்' என்கிறார் சந்திரபாபு நாயுடு. கேட்ஸ் இந்தியா வந்தபோது அவரது டவாலியைப் போல பின்தொடர்ந்தார் இந்தியப் பிரதமர்.

ஒரு ஏகபோகக் கொள்ளையன் காவியத் தலைவனாகச் சித்தரிக்கப்படும் போது வழிப்பறியும் திருட்டும் அறநெறிக்குரிய அந்தஸ்தைப் பெறுவதில் வியப்பென்ன? எனினும் வாலியின் கொலையையும் சம்புகன் கொலையையும் ராம


படிப்பகம்

www.padippakam.com

பக்தர்களுக்குத் தெரிவிப்பது நமது கடமை.

உலகில் உள்ள 90 சதவீதம் கணினிகளின் மூளையாகவும், நரம்பு மண்டலமாகவும் இருப்பது பில் கேட்ஸின் **விண்டோஸ்** என்ற ஆபரேடிங் சிஸ்டம். விண்டோஸ் - 95, 97, 98 என்று பில் கேட்ஸின் மைக்ரோசாப்ட் நிறுவனம் புதிய கண்டுபிடிப்புகளை சேர்ப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருப்பது மட்டுமல்ல, பல புதிய கண்டுபிடிப்புகளைத் தடுக்கும் ஆயுதமாகவும் இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

புதிய மென்பொருள் (Software) உருவாக்குவோர், சில்லுகளை (Chips) உருவாக்குவோர், இணைய வணிக (Dot com) நிறுவனங்கள் யாராக இருந்தாலும் பில் கேட்சுக்குப் பணியாதவர்கள் அழிக்கப்பட்டார்கள். விண்டோஸ் -இல் புதிய வசதிகளைச் சேர்ப்பது என்ற பெயரில் கணினியின் மீது தனக்கிருந்த ஏகபோகத்தை இணையத்திற்கும் (Internet) விரிவுபடுத்தினார் பில்கேட்ஸ்.

மைக்ரோசாப்ட் நிறுவனம் தனது ஏகபோகத்தை நிலைநாட்ட "ஒரு கொள்ளைக்காரனைப் போல நடந்து கொண்டிருக்கிறது" என்று தீர்ப்பளித்திருக்கிறார் கேட்சுக்கு எதிரான இவ்வழக்கை விசாரித்த நீதிபதி.

நெட்ஸ்கேப், இன்டெல், ஆப்பிள், காம்பாக், சன் போன்ற பல பெரிய பன்னாட்டு நிறுவனங்களின் கண்டுபிடிப்புகள் பில் கேட்ஸால் முடக்கப்பட்டன; அல்லது அவை மிரட்டிப் பணிய வைக்கப்பட்டன.

"இதன் விளைவாக, நுகர்வோருக்கு உண்மையிலேயே பயனளித்திருக்கக் கூடிய பல புதிய கண்டுபிடிப்புகள் கருவிலேயே கொல்லப்பட்டன. அவை மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நலனுக்கு எதிராக இருந்தன என்ற ஒரே காரணத்துக்காக" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி ஜாக்சன்.

பில் கேட்ஸ் இல்லையென்றால் கணினியும் இல்லை, இணையமும் இல்லை என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள் மாணவர்கள். அவர் இருப்பதனால்தான் கணினி - இணையத்தில் முன்னேற்றமில்லை, விலைகுறையவுமில்லை என்கிறார் நீதிபதி!

தகவல் தொழில்நுட்பத் துறையில் தனது உலகமேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு மட்டுமல்ல, ராணுவ ரீதியாக அமெரிக்க வல்லரசின் உலகமேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக உளவு வேலையும் பார்க்கிறது பில் கேட்ஸின் மைக்ரோ சாப்ட் நிறுவனம் என்பதும் அம்பலமாகியிருக்கிறது.



பில்கேட்ஸ் மீதான குற்றச்சாட்டு என்ன, தீர்ப்பு என்ன என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் பில்கேட்ஸ் பக்தர்களாகி விட்டனர் மாணவர்கள்.

ஐ.ஐ.டி.யில் - இந்திய மக்களின் வரிப்பணத்தில் படித்து, அமெரிக்கா சென்று பன்னாட்டு நிறுவன அதிகாரிகளாகி, இந்நாட்டை கொள்ளையடிக்க வரும் பாரதத் தாயின் தவப்புதல்வர்களை அட்டையில் கவுரவிக்கிறது அவுட்லுக் வார ஏடு.




தனது கடற்படையில் பயன்படுத்தப்படும் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் மென்பொருட்கள் (Software) அமெரிக்க உளவுத்துறைக்கு ராணுவ ரகசியங்களைக் கடத்துகின்றன என்று சந்தேகித்த ஆஸ்திரேலிய அரசு தனது கடற்படையில் மைக்ரோசாப்ட் மென்பொருட்களைப் பயன்படுத்தத் தடைவிதித்தது. பிரெஞ்சுக் கடற்படையிலும் இத்தகைய உளவு வேலை நடப்பது நிரூபிக்கப்பட்டது.

இப்பேர்ப்பட்ட மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஏகபோகத்தை ஒழிக்க வேண்டும் என்றும், அதற்காக அந்த நிறுவனத்தை உடைக்க வேண்டும் என்றும் ஒரு நீதிபதி தீர்ப்பளித்தால்? "மைக்கேரா சாப்டை உடைக்க முடியாது; வேண்டுமானால் நீதித்துறையை உடைக்கலாம்" என்று கிண்டல் செய்கிறார் அமெரிக்க செனட் சபை பெரும்பான்மையின் தலைவர்.

மைக்ரோசாப்ட் உடையக்கூடாது என்று ஒரு அமெரிக்க செனட்டர் விரும்பலாம், அந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் பதறலாம். ஆனால் நம்மூர் மாணவர்கள் ஏன் பில் கேட்சுக்காக வருந்தவேண்டும்?

தீர்ப்பு வெளிவந்தவுடன் அமெரிக்கத் தொலைக்காட்சியில் பில் கேட்ஸ் ஆற்றிய உரையில் இதற்கு விடை இருக்கிறது;

"25 ஆண்டுகளுக்கு முன் எனது நண்பர்களும் நானும் (இந்நிறுவனத்தை) துவங்கும்போது எங்கள் கையில் எதுவும் இல்லை - கணினியின் ஆற்றலைப் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறெதுவும் இல்லை."

பேசுபவர் உலகின் முதல் பணக்காரரான ஏகபோக முதலாளியா அல்லது மனிதகுல சேவைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட போராளியா என்ற ஐயம் ஏற்படுகிறதோ?

"துவங்கும்போது என் கையில் 10,000 ரூபாய் தான் இருந்தது" என்ற நாராயண மூர்த்தியின் வசனமும், "கையில் எதுவுமே இல்லை" என்ற பில் கேட்ஸின் வசனமும்தான் மிக முக்கியமானவை.

தங்கள் அறிவை, திறமையை, வைத்து முன்னேறி கோடீசுவரனாக வேண்டும் என்று கனவு காணும் ஒவ்வொரு இளைஞனும் பில் கேட்சுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் வசனம் அது.

● மருதையன்

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

இறுதிப் பகுதி:

# ஸ்டாலின் மீதான அவதூறு: ஹிட்லர் முதல்...

சோவியத் ஒன்றியத்தில் உயிரையோ, சுதந்திரத்தையோ இழந்ததாகப் புளுகும் புத்தகங்கள் கட்டுரைகளோடு எப்போதும் தொடர்புபடுத்தப்படும் இன்னொரு நபர் ருசிய எழுத்தாளர் **அலெக்சாண்டர் சோல்ஜெனித்சின். "தி குலாக் ஆர்சிபிலாகோ"** என்ற அவரது நூல் மூலமாக 1960-களின் இறுதியில் முதலாளித்துவ உலகம் முழுவதும் பிரபலமடைந்தவர் இந்த சோல்ஜெனித்சின். சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரத்தைப் பரப்பிய எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்காக இவர் 1946-ஆம் ஆண்டிலிருந்து எட்டு வருடங்கள் உழைப்பு முகாமில் வாழும்படி தண்டிக்கப்பட்டவர்.

இட்லருடன் சோவியத் ஒன்றிய அரசு ஒரு சமரசத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தால் இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனிக்கு எதிரான மோதலை அது தவிர்த்திருக்கலாம் என்பது சோல்ஜெனித்சின்னின் கருத்தாகும். சோவியத் ஒன்றியத்தின் மக்கள் மீது போர் ஏற்படுத்திய பேரழிவுப் பாதிப்பின் நோக்கில் பார்த்தால் சோவியத் அரசாங்கமும் ஸ்டாலினும் இட்லரை விட மோசமானவர்கள் என்று சோல்ஜெனித்சின் கூறினார். தனது நாஜி ஆதரவு - அனுதாபங்களை அவர் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினார். ஆகவேதான் அவர் ஒரு துரோகி எனக் கண்டிக்கப்பட்டார்.

ஸ்டாலினுக்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தின் ஆட்சியைப் பிடித்த நிகிடா குருசேவின் ஒப்புதலோடும் உதவியோடும் சோல்ஜெனித்சின் 1962 முதல் தனது நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கினார். ஒரு கைதியின் வாழ்க்கையைப் பற்றி, **"ஐவான் டெனிசோவிச் வாழ்வில் ஒரு நாள்"** என்பது அவர் பதிப்பித்த முதல் நூல். ஸ்டாலினுடைய சோசலிசப் பாரம்பரியத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு சோல் ஜெனித்சினுடைய எழுத்தை குருச்சேவ் பயன்படுத்திக் கொண்டார். "தி குலக் ஆர்சிபிலோகோ" என்ற அவரது நூலுக்காக 1970-இல் சோல்ஜெனித்சின் நோபல் பரிசு பெற்றார். அதன்பிறகு அவரது நூல்கள் பெரும் எண்ணிக்கையில் முதலாளித்துவ நாடுகளில் பிரசுரிப்பது துவங்கியது; அவற்றின் ஆசிரியர் சோவியத் ஒன்றியத்தின் மீதான ஏகாதிபத்தியத் தாக்குதலுக்கான மிகவும் மதிப்புமிக்க கருவிகளில் ஒருவரானார்.

சோவியத் ஒன்றியத்தில் பலபத்து இலட்சம் பேர் மாண்டு போனார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தோடு உழைப்பு முகாம்கள் பற்றிய இவரது எழுத்துக்களையும் சேர்த்து இவையும் உண்மையானவை என்பது போல் முதலாளித்தவ செய்தி ஊடகங்கள் பரப்பின. 1974-இல் சோல்ஜெனித்சின் சோவியத் குடியுரிமையைத் துறந்து சுவிட்சர்லாந்திலும் பிறகு அமெரிக்காவிலும் குடியேறினார். அக்காலங்களில் அவர் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான ஒரு மாபெரும் போராளியாக முதலாளியச் செய்தி ஊடகங்களால் சித்தரிக்கப்பட்டார். அவர் ஒரு நாஜி ஆதரவாளர் - அனுதாபி என்பது சோசலிசத்துக்கு எதிரான பிரச்சாரப் போரில் குறுக்கிடாதவாறு மூடி மறைக்கப்பட்டது.

அமெரிக்காவில், பல முக்கியக் கூட்டங்களில் உரையாற்றும்படி சோல்ஜெனித்சின் அடிக்கடி அழைக்கப்பட்டார். அவரது உரைகள் வன்முறை மற்றும் ஆத்திரமூட்டக் கூடியவையாகவும் அதீத பிற்போக்கு நிலைப்பாடுகளைப் பிரச்சாரம் செய்பவையாகவும் இருந்தன. அவற்றில் ஒன்று அமெரிக்காவின் மீது வியத்நாம் வெற்றி பெற்ற பிறகும் மீண்டும் வியத்நாமைத் தாக்க வேண்டும் என்ற கருத்து.

அது மட்டுமல்ல; 40 ஆண்டு கால பாசிச ஆட்சிக்குப் பிறகு போர்ச்சுக்கலில் இடதுசாரி இராணுவ அதிகாரிகள் மக்கள் புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடித்த போது, போர்ச்சுகலில் அமெரிக்கா இராணுவத் தலையீடு செய்ய வேண்டும் என்ற கருத்துக்கான பிரச்சாரத்தில் சோல் ஜெனித்சின் இறங்கினார். அமெரிக்கா தலையிடவில்லையெனில் சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகள் தலையிடும் என்று சொன்னார். அவரது உரைகளின் மூலம் போர்ச்சுக்கலின் பிடியில் இருந்து ஆப்பிரிக்கக் காலனிகள் விடுதலை அடைவதைக் கண்டு எப்போதும் வேதனை தெரிவித்தார்.

ஆனால், சோல் ஜெனித்சின்னுடைய உரைகளில் எப்போதுமே சோசலிசத்துக்கு எதிரான அசிங்கமான பிரச்சாரப் போருக்கு முக்கிய அழுத்தம் தரப்பட்டது தெளிவாக உள்ளது. அது சோவியத் ஒன்றியத்தில் பல பத்து இலட்சம் பேர் கொல்லப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு முதல் வட வியத்நாமில் பல பத்தாயிரம் அமெரிக்கர்களைச் சிறைப்பிடித்து அடிமைகளாக்கப்பட்டு விட்டதாகப் புளுகுவது வரை சோல் ஜெனித்சின் புளுகுப் பிரச்சாரம் நீடித்தது. வடக்கு வியத்நாமில் அமெரிக்கர்கள் அடிமை உழைப்பாளர்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்கிற சோல் ஜெனித்சினுடைய இந்தக் கருத்துதான் வியத்நாம் போர் பற்றிய "ராம்போ" சினிமாக்கள் உருவாகக் காரணமாக இருந்தது.

அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையே அமைதி ஏற்படுவதற்கு ஆதரவாக எழுதத் துணிந்த பத்திரிக்கையாளர்கள் துரோகிகளாக மாறக் கூடியவர்கள் என்று தனது உரைகளில் இந்த சோல்ஜெனித்சின் குற்றஞ் சாட்டினார். அமெரிக்காவை விட ஐந்து முதல் ஏழு மடங்கு அதிகமாக பீரங்கி வண்டிகள் மற்றும் போர் விமானங்களை சோவியத் யூனியன் பெற்றிருக்கிறது; அதேபோல அணு ஆயுதங்களைப் பெற்றிருக்கிறது - அதாவது அமெரிக்காவில் இருப்பதைவிட மூன்று அல்லது ஐந்து மடங்கு கூட சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களை சோவியத் ஒன்றியம் பெற்றுள்ளது; ஆகவே அதற்கு எதிராக அமெரிக்க இராணுவ பலத்தை அதிகரிக்க வேண்டும் என்று இதே சோல்ஜெனித்சின் பிரச்சாரம் செய்தார். சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான சோல்ஜெனித்சின்னுடைய உரைகள் வலதுசாரித் தீவிரவாதத்தைத்தான் பிரதிபலித்தது. ஆனால் அவரோ மேலும் ஒரு படி நகர்ந்து பாசிசத்தை வெளிப்படையாகவே ஆதரித்தார்.

எனவே, சோவியத் ஒன்றியத்தில் பல பத்து இலட்சம்பேர் மாண்டனர், சிறையில

**நாஜி வில்லியம் ஹெர்ஸ்ட், இரகசிய உளவாளி ராபர்ட் கான்குவஸ்ட், மற்றும் பாசிஸ்ட் அலெக்சாண்டர் சோல்ஜெனித்சின் - இவர்கள்தான் 'சோவியத் ஒன்றியத்தில் பல லட்சம் பேர் மாண்டனர் - சிறையிலடைக்கப்பட்டனர்' என்கிற கட்டுக் கதைகளை 'சப்ளை' செய்த மதிப்புமிக்க புளுகு வியாபாரிகள்.**



படிப்பகம்

www.padippakam.com

டைக்கப்பட்டனர் என்கிற கட்டுக் கதைகளை "சப்ளை" செய்த மதிப்புமிக்க புளுகு வியாபாரிகள் இவர்கள்தான்; நாஜி **வில்லியம் ஹெர்ஸ்ட், இரகசிய உளவாளி ராபர்ட் கான்குவஸ்ட், மற்றும் பாசிஸ்ட் அலெக்சாண்டர் சோல்ஜெனித்சின்,** இவர்களில் கான்குவஸ்ட்தான் தலைமைப் பாத்திரமாற்றியவன். ஏனென்றால் இவன் கொடுத்த செய்தியைத்தான் உலகெங்கும் உள்ள முதலாளித்துவ பெருந்திரள் செய்தி ஊடகம் பயன்படுத்திக் கொண்டது. மேலும் அதுதான் சில பல்கலைக் கழகங்களில் நிறுவப்பட்ட திணைப் புலன்களுக்கு அடிப்படையாக அமைந்தது. கான்குவஸ்ட்டின் வேலை முதல்தரமான போலீசு புளுகுகள்தாம் என்பதில் சந்தேகமில்லை.

1970-களில் சோல்ஜெனித்சின் மற்றும் இரண்டாம்தர ஆசாமிகளான ஆண்ட்ரேய் சக்ராவோ, ராய் மேட்வேடேவ் போன்றவர்களோடு, சோவியத் ஒன்றியத்தில் மாண்டவர்கள், சிறையிலடைக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை பற்றிய ஊகங்கள் வதந்திகள் பரப்பும் பல நபர்கள், உலகமெங்கும் ஆங்காங்கே தோன்றினர். அப்படிப்பட்டவர்கள் முதலாளித்துவ செய்தி ஊடகங்களால் பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்றனர். ஆனால், இறுதியில் இந்த விவகாரங்கள் பற்றிய முழு உண்மையும் வெளியானது; வரலாற்றுப் பொய்யர்களின் உண்மை முகங்கள் தெரிந்தன. வரலாற்று ஆய்வாளர்களுக்காக கட்சியின் இரகசிய ஆவணப் பாதுகாப்பகங்களைத் திறக்கும்படி கோர்பச்சேவ் உத்தரவு போட்டார்; அது யாரும் எதிர்பார்க்காத விளைவுகளை ஏற்படுத்தியது.

### பிரச்சாரப் பொய்கள்

சோவியத் ஒன்றியத்தில் பல பத்து இலட்சம் பேர் மாண்டார்கள் என்கிற வதந்திகள் எல்லாம் அந்நாட்டிற்கு எதிரான அசிங்கமான பிரச்சாரப் போரின் ஒரு பகுதிதான்; இதன் காரணமாகத்தான் சோவியத் ஒன்றியம் அந்த வதந்திகளுக்குக் கொடுத்த மறுப்புகளும் விளக்கங்களும் பாரதூரமாக எடுத்துக் கொள்ளப்படவுமில்லை, முதலாளித்துவச் செய்தி ஊடகங்களில் இடம் பெறவுமில்லை. அதற்கு மாறாக, அவற்றைக் கண்டு கொள்ளாமல் ஒதுக்கிய அதேசமயம், முதலாளியத்தால் விலைக்கு வாங்கப்பட்ட தனிச்சிறப்பானவர்கள் தாராளமாக இடம் பிடித்துக் கொண்டார்கள்; ஏனென்றால் இவர்கள்தான் முதலாளியம் விரும்பிய கட்டுக் கதைகளை வழங்கினர்.

அதென்ன கட்டுக் கதைகள்! கான்குவஸ்ட்டின் பொய் மற்றும் பிற விமர்சனங்களும் உரிமை கொண்டாடியபடி பல பத்து இலட்சம் பேர் மாண்டார்கள் - சிறையிலடைக்கப்பட்டார்கள் என்கிற கதைகள் எல்லாம் ஒரு விடயத்தைப் பொதுவாகக் கொண்டிருந்தன; அந்தக் கதைகள் எல்லாமும் பொய்யா என தோராயப் புள்ளி விவரங்களின் தொகுப்புத் தானே தவிர எவ்வித அறிவியல் பூர்வமான ஆய்வுகளாலும் தொகுக்கப்பட்டவையல்ல.

கான்குவஸ்ட், சோல்ஜெனித்சின், மேட்வேடேவ் மற்றும் பிறர் சோவியத் ஒன்றியம் பிரசுரித்த புள்ளி விவரங்களைத்தான் பயன்படுத்தியுள்ளனர்; உதாரணமாக தேசிய மக்கள் தொகைப் புள்ளி விவரங்கள்; இவற்றோடு அந்த நாட்டின் குறிப்பான நிலைமையைக் கணக்கில் கொள்ளாமல் எந்த விகிதத்தில் மக்கள் தொகை அதிகரித்திருக்க வேண்டும் என்று யூகித்தார்களோ அதைச் சேர்த்தார்கள்; தமது சொந்த யூகத்தின்படி குறிப்பிட்ட ஆண்டின் இறுதியில் இவ்வளவுபேர்



இளவயதில் தோழர் ஸ்டாலின்

இருக்க வேண்டுமே என்று கணக்குப் போட்டார்கள். அவ்வாறின்றி மக்கள் தொகை குறைவாக இருந்தால், இந்தக் குறைக்குக் காரணம், அவ்வளவு பேர்கள் மாண்டு போனார்கள் சிறையிலடைக்கப் பட்டார்கள்; ஸ்டாலினும் சோசலிசமும் மேற்கொண்ட கொடூரத்தின் விளைவுதான் இதுவென்று முடிவு செய்தார்கள். எளிமையான முறை. ஆனால் முற்றிலும் மோசடியானது.

மேலை உலகைப் பற்றிய அம்பலப்படுத்துதல் என்றால் இவ்வளவு முக்கியமான அரசியல் நிகழ்வுகள் பற்றி இந்த மாதிரியான அம்பலப்படுத்தும் முறையை ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அங்கேயென்றால் பேராசிரியர்களும் வரலாற்று வல்லுநர்களும் இம்மாதிரியான கட்டுக் கதைகளைக் கட்டாயம் எதிர்த்து ஆர்ப்பரித்திருப்பார்கள். ஆனால் இது சோவியத் ஒன்றியம் சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால் இந்தக் கட்டுக் கதைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. காரணம் பேராசிரியர்களும் வரலாற்று வல்லுநர்களும் தங்கள் தொழில் நேர்மைக்கு மேலாகத் தொழில் ரீதியிலான பிழைப்பு முன்னேற்றத்தை வைக்கிறார்கள்.

எண்ணிக்கையைப் பொருத்தவரை, இந்த விமர்சகர்களின் இறுதி முடிவுகள்தான் என்ன? ராபர்ட் கான்குவஸ்ட்டைப் பொறுத்தவரை, அவர் 1961-இல் செய்த கணிப்புப்படி சோவியத் ஒன்றியத்தில் 1930-களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பட்டினிச் சாவின் எண்ணிக்கை 60 இலட்சமாக இருந்தது. 1986-ல் அதே கான்குவஸ்ட் சாவின் எண்ணிக்கையை 140 இலட்சமாக உயர்த்திக் கொண்டார்.

இந்த கான்குவஸ்ட்டின் கணக்குப்படி, கட்சி, படை மற்றும் அரசு இயந்திரத்தில் 1937 களையெடுப்பு துவங்குமுன்பு சிறையிலடைக்கப்பட்ட குலாக்குகள் எனப்படும் புதிய நிலப்பிரபுக்களின் எண்ணிக்கை 50 இலட்சம். 1937-38-இல் களையெடுப்புகள் துவங்கிய பிறகு மேலும் 70 இலட்சம் கைதிகள் கூடியிருக்க வேண்டும்; அதாவது 1939-இல் 120 இலட்சம் பேர் உழைப்பு முகாம்களில் அடைக்கப்பட்டார்கள் என்று தானாகவே கான்குவஸ்ட் கூட்டிக் கொண்டார்.

கான்குவஸ்டினுடைய கணக்குப்படி இந்த 120 இலட்சம் பேரும் அரசியல் கைதிகளாகத்தான் இருக்க முடியும்! அவரது கணக்குப்படி இந்த அரசியல் கைதிகளை விட மிகவும் மிதமிஞ்சியவர்களாக பொதுவான கிரிமினல் குற்றவாளிகள் இருப்பார்கள்; எனவே, இவர்களையும் சேர்த்து சோவியத் யூனியனின் உழைப்பு முகாம்களில் 250-300 இலட்சம் பேர் அடைபட்டிருந்தார்கள் என்கிறார்.

கான்குவஸ்டின் இன்னொரு கணக்குப்படி, 1937-39 கால கட்டத்தில் ஒரு 10 இலட்சம் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டார்கள்; இதோடு மேலும் 20 இலட்சம் பேர் பட்டினியால் மாண்டு போனார்கள்; 1937-39 களையெடுப்புக்குப் பிறகு இறுதித் தொகுப்பாக 90 இலட்சம் பேர் சிறையில் இறந்திருக்க வேண்டும் என்கிறார். பின்னர் இந்தப் புள்ளி விவரங்களைச் சரிக்கட்டி 1939-க்கும் 1953-க்கும் இடையே 120 இலட்சம் அரசியல் கைதிகளை போல்ஷ்விக்குகள் கொன்று விட்டார்கள் என்கிற முடிவைக் கான்குவஸ்ட் வந்தடைந்தார். இந்தத் தொகையை 1930-களில் ஏற்பட்ட பஞ்சத்தால் இறந்தவர்கள் என்று கொல்லப்பட்ட தொகையோடு சேர்த்து ஆக


படிப்பகம்

www.padippakam.com

மொத்தம் 260 இலட்சம் பேரை போல்ஷிவிக்குகள் கொன்றார்கள் என்ற முடிவுக்கு வந்தார். 1950-இல் 120 இலட்சம் அரசியல் கைதிகள் சோவியத் ஒன்றியத்தில் இருந்தனர் என்று வேறு கான்குவஸ்ட் சாதித்தார்.

அலெக்சாண்டர் சோல்ஜெனித்சினும் இதே புள்ளி விவர முறைகளைத்தான் ஏறக்குறையப் பயன்படுத்தினார். ஆனால் பல்வேறு கருதுகோள்களின் அடிப்படையிலான இந்த அறிவியல் பூர்வமற்ற முறைகளைப் பயன்படுத்திய சோல் ஜெனித்சின் இன்னும் கடை கோடித்தனமான முடிவுகளைச் சென்றடைந்தார்.

1932-33 பஞ்சத்தால் 60 இலட்சம் பேர் மாண்டார்கள் என்கிற கான்குவஸ்டின் கணக்கை சோல்ஜெனித்சின் ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமின்றி 1936-39-களில் ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் பேர் என்று கணக்கிட்டார். விவசாயத்தைக் கூட்டுமயமாக்கியதில் இருந்து 1953-இல் ஸ்டாலின் இறந்தது வரை அங்கே 660 இலட்சம் மக்களைக் கம்யூனிஸ்டுகள் கொன்று விட்டார்கள் என்று தொகுத்துச் சொல்கிறார் சோல் ஜெனித்சின்.

இவர்கள் தவிர இரண்டாம் உலகப் போரில் 440 இலட்சம் பேர் பலியானதற்கும் சோவியத் அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று வாதிடுகிறார். இதையெல்லாம் வைத்து, பதினோரு கோடி ரஷ்யர்கள் சோசலிசத்துக்குப் பலியாகிப் போனார்கள் என்கிற முடிவுக்கு சோல் ஜெனித்சின் போனார். 1953-இல் அங்கே 250 இலட்சம் பேர் உழைப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருந்ததாகப் புளுகுகிறார்.

கான்குவஸ்ட் மற்றும் சோல் ஜெனித்சின்னுடைய புளுகுகளை கோர்பச்சேவின் புதிய சுதந்திரச் செய்தி ஊடகம் என்கிற ஒப்பாரிக் கூச்சல் முன்னுக்குக் கொண்டு வந்தது. இந்தச் செய்தி ஊடகத்தின் கோரிக்கையை ஏற்று சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடமைக் கட்சியினுடைய மத்தியக் கமிட்டி ஆவணக் காப்பகத்தை வரலாற்று ஆய்வுக்காக கோர்பச்சேவ் திறந்து விட்டார். இந்த ஆவணக் காப்பகத்தைத் திறந்ததானது மிகவும் குழப்பப்பட்ட இந்த கட்டுக் கதைகளைப் பொறுத்தவரை உண்மையில் இரண்டு வகையில் பிரச்சினையாக அமைந்தது. அதாவது உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டும் விவரங்கள் இந்த ஆவணக் காப்பகத்தில் கிடைக்கும். அதைவிட முக்கியமான உண்மை என்னவென்றால், சோவியத் ஒன்றியத்தில் கொல்லப்பட்டவர்கள் சிறையிலடைக்கப்பட்டவர்களின்

**வதந்திகள், அவதூறுகட்கு சோவியத் ஒன்றியம் கொடுத்த மறுப்புகளும், விளக்கங்களும் முதலாளிய செய்தி ஊடகங்களில் இடம் பெறவில்லை. மாறாக இவர்களால் விலைக்கு வாங்கப்பட்ட பொய்-புரட்டு ஆய்வாளர்களின் அவதூறுகளே தொடர்ந்து இடம் பெற்றன.**

எண்ணிக்கை பற்றி அண்டப் புளுகு ஆகாசப் புளுகு பரப்பியவர்கள் எல்லாம், ஆவணக் காப்பகம் திறக்கப்படும் நாளில் தாங்கள் சொல்லி வந்தவையெல்லாம் சரிதானென்று உறுதி செய்யப்படும் என்று சாதித்தார்கள். கான்குவஸ்ட், சாக்காரோவ், மெட்வேடேவ் மற்றும் எஞ்சிய அனைவரும் இப்படித்தான் கூச்சல் போட்டுக் கொண்டார்கள்.

ஆனால் ஆவணக் காப்பகம் திறக்கப்பட்டு அசலான ஆவணங்களின் அடிப்படையிலான ஆய்வு அறிக்கைகள் பிரசுரிக்க ஆரம்பித்தவுடன் வினோதமானவை நிகழ்ந்தன. கோர்பச்சேவின் சுதந்திரச் செய்தி ஊடகமும் சரி, சாவையும் சிறையிலடைப்பையும் பற்றிய ஊகக்காரர்கள் புளுகுணிகளும் சரி திடீரென்று அந்த ஆவணக் காப்பகம் மீது ஆர்வம் காட்டாமல் போய் விட்டார்கள். அதாவது வாயும் மெய்யும் பொத்திக் கொண்டார்கள்.

ஜெம்ஸ்கோவ், டௌஜின், ழெவன் ஜுக் ஆகிய ருசிய வரலாற்றாசிரியர்கள் மத்தியக் கமிட்டியின் ஆவணக் காப்பக ஆதாரங்களை ஆய்வு செய்து, தமது முடிவுகளை 1990-லிருந்து வரலாற்று அறிவியில் ஆராய்ச்சிப் பத்திரிக்கைகளில் வெளியிடத் துவங்கினர்; ஆனால் அவற்றை மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களும் எழுத்தாளர்களும் முழுக்க முழுக்க கண்டு கொள்ளவே இல்லை. இந்த வரலாற்று ஆய்வு முடிவுகள் பற்றிய அறிக்கைகள் எல்லாம் ஒரு விடயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டின. அதாவது ஸ்டாலின் காலத்தில் நடந்ததாகக் கூறப்பட்ட பொய்யுரைக்கப்பட்ட சாவுகள், சிறையிலடைப்புகள் பற்றிய சுதந்திரச் செய்தி ஊடகங்கள் கொடுத்த தகவல்கள் எல்லாம் வெறுமே ஊதிப் பெருக்கப்பட்ட புளுகுகள்தாம் என்பதை நிரூபித்தன. இதன் காரணமாகவே ஆய்வு முடிவுகளின் உள்ளடக்கத்தை அவை பிரசுரிக்கவே இல்லை; இருட்டடிப்புச் செய்தன. ஆனால், அந்த ஆய்வு முடிவுகள் எல்லாம் பெருந்திரள் மக்கள் கண்டறியாத, சிறிய எண்ணிக்கையிலான அறிவியல் ஆய்வுப் பத்திரிக்கைகளில் மட்டும் வெளிவந்தன.

**ஆவணக் காப்பகம் திறக்கப்பட்டு அசலான ஆவணங்களின் அடிப்படையிலான ஆய்வு அறிக்கைகள் வெளியானவுடன், புளுகுணிகளும், ஊகக்காரர்களும் தமது மேல் - கீழ் வாய்களைப் பொத்திக் கொண்டு காணாமல் போனார்கள்.**

முதலாளியச் செய்தி ஊடகங்கள் போடும் வெறியாட்டத்தோடு அறிவியல் ஆராய்ச்சி முடிவுகள் போட்டி போடுவது மிகமிகக் கடினமானது; எனவே, முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் மக்கள் திரளின் பல பிரிவினரிடையே கான்குவஸ்டும் சோல் ஜெனித்சினும் தொடர்ந்து ஆதரவு பெற முடிகிறது. மேற்குலகில் கூட, ஸ்டாலினுடைய தண்டனை அமைப்பு முறைகள் என்று சொல்லப்படுவதின் மீதான ருசிய ஆராய்ச்சியாளர்களுடைய அறிக்கைகள் பத்திரிக்கைகளின் முன் பக்கங்களாலும் வானொலிச் செய்தி ஒளிபரப்புகளாலும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன - இருட்டடிப்புச் செய்யப்பட்டன. ஏன்? ஏன் என்பதற்கான பதிலை கம்யூனிச எதிரிகளும் அறிவர்; கம்யூனிஸ்டுகளும் அறிவர். இனி, அறிய வேண்டியவர்கள் மக்கள் தான்!

**இத்தொடரின் மூலம்: சுவீடன் நாட்டின் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் புரட்சியாளர்கள்) உறுப்பினர் மரியோ சூசா நார்த்ஸ்டார் காம்பஸ் என்ற வட அமெரிக்கப் பத்திரிக்கையில் எழுதிய கட்டுரை. கல்கத்தாவில் இருந்து வெளிவரும் ஃபிரான்டியர் என்ற ஆங்கில வார இதழ் (ஜனவரி 9-15, 2000) அக்கட்டுரையை மறுபிரசுரம் செய்ததில் இருந்து சில விளக்கங்கள் - சேர்க்கைகளுடன் இத்தொடர் மொழி பெயர்க்கப்பட்டது.**

www.padippakam.com

சிறுகதை

# இடைவெளிகள்

சிவசுப்ரமணிய ஜெயசேகர்

யெவ்கனி கிரிகோவ் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பத் தயாரானார். வோல்கா நதிப் பிரதேசத்தில் அது பனிக் காலமாதலால் மாலைவேளை வெகு சீக்கிரமே மறையத் தொடங்கியதுடன் பட்டுப் போன்று மென்மையான பனிப்பொழிவும் ஆரம்பமாகியிருந்தது.

கிரிகோவ் அதைப் பொருட்படுத்தாமல் காலணிகளை எடுத்து மாட்டிக் கொண்டார். வலது காலணியில் ஒருபக்கம் பிய்ந்து போய் பிதுங்கிக் கொண்டு தெரிந்தது. விரல்களால் அதனை உள்ளே தள்ளினார். கால் உறைகளிலும் ஆங்காங்கே கிழிசல்கள். சற்றே அதிருப்தியுடன் தனது கோட்டின் மீது கண்களை ஓட விட்டார். மூன்று இடங்களில் கிழிந்து போய் தைக்கப்பட்டிருந்தது.

இந்த கம்பளிக் கோட்டை வாங்கி எவ்வளவு நாளாயிற்று! கிரிகோவ் பெருமூச்சு விட்டார்.

உக்ரேனிய ஆடுகளிலிருந்து பெறப்பட்ட நல்ல தரமான கம்பளியாக இருக்க வேண்டும். அதனால்தான் இவ்வளவு நாள் உழைத்திருக்கிறது. இப்போதெல்லாம் கூட்டுப் பண்ணையின் கூட்டுறவுக் கடைகளில் கூட கம்பளி கிடைப்பதில்லை. தொழிலாளர்களுக்கு வேண்டுமளவு கம்பளி கொடுத்த நாட்கள் எங்கோ போய்விட்டது. நாடு மெல்ல மெல்ல மாறிக் கொண்டு வருகிறது. ஆனால் உழைத்து ஓய்வு பெற்ற வயதான தொழிலாளர்களுக்குப் புரியாத மாற்றம். மனதிற்குப் பிடிக்காத மாற்றம். தலையை உதறிக் கொண்டு கிரிகோவ் வெளியே காலடி எடுத்து வைத்தார். சாலையில் கிடந்த பனித்துகள்களில் காலடிகள் பதிந்து வழி விட்டது. மெல்ல தள்ளாடியவாறு நடக்கலானார்.

சற்று தூரம் நடக்க ஆரம்பிக்க ''நீலக்கண் தாத்தா'' ''நீலக்கண் தாத்தா'' எனும் குழந்தைகளின் கூக்குரல்கள் கேட்டது. பனிப்பொழிவுகள் பார்வையை மறைக்காதிருக்கும் வண்ணம் கைகளைப் பிடித்துக் கொண்டே திரும்பிப் பார்த்தார்.

சாலையின் எதிர்ப்புறம் தொழிலாளர்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள இகார் ஏசோகின் குழந்தைகள்தான் அவ்வாறு கூக்குரலிட்டன. கிரிகோவின் இதழ்க் கடையில் புன்னகை அரும்பிற்று. குழந்தைகளைப் பார்த்து தன்னருகே வருமாறு சைகை காட்டினார். குழந்தைகள் ஓடி வந்து அவருடைய கால்களைக் கட்டிக் கொண்டு மீண்டும் 'நீலக்கண் தாத்தா' என்றன.

கிரிகோவ் பிறக்கும்போதே அவருக்கு மிக அழகான நீல நிறக் கண்கள் இருந்ததாக அவரது தாயார் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறார். கிரிகோவ் குழந்தையாக இருக்கும்போது அவரைத் தூக்கிக் கொண்டு வெளியே செல்லும் காலங்களில் எல்லாம் தனது குழந்தையின் நீலக்கண்கள் பெருமையை அனைவரிடமும் பீற்றிக் கொள்வது அவரின் தாயாரின் வழக்கமாம்.

தாயாரைப் பற்றிய சிந்தனை எழுந்ததும் கிரிகோவிற்கு துக்கம் தொண்டையை அடைப்பது போல இருந்தது.

எவ்வளவு இனிமையானவள்! எத்தனைக் கஷ்டங்களைத் தாங்கியிருக்கிறாள். குடிகாரக் கணவனிடமும், அவன் இறப்பிற்குப் பின் வேலை செய்த முதலாளிகளிடமும் எத்தனை உதைகள் வாங்கியிருக்கிறாள். எல்லாம் தனக்காக. ஆனால் என்ன பலனை அனுபவித்தாள். அது புரட்சிக்கு முந்தைய காலம். நாடும் மக்களும் திணறிக் கொண்டிருந்த நேரம். குளிர் காலத்தில் உறைந்து கிடந்த வோல்கா நதியின் மீதே அவளும் இறந்து, விறைத்துக் கிடந்த அக்காட்சி இன்னமும் அவரது மனதில் நீங்காது இருக்கிறது.

அந்த நீலக்கண் பாப்பா நீலக்கண் தாத்தா ஆன பின்னும் இன்றும் வாழ்வின் ஆரம்ப காலங்களில் அனுபவித்த அதே துன்பத்தின் நிழல்கள் தொடர்கிறதே. முதலாளித்துவத்தின் அதே கோர வடிவம் தோன்றி பயமுறுத்துகிறதே.

கோட்டின் பைகளைத் துழாவி கைகளில் கிடைத்த ஏதோ இனிப்பு வகைகளை ஏசோகின் குழந்தைகளிடம் கொடுத்தார். குழந்தைகள் குதூகலித்தனர். அப்போதுதான் குழந்தைகளைக் கவனித்தார். கந்தலான ஆடைகள், கவனிப்பாரற்ற தலைமுடி, அழுக்கான உடல்கள். ஏசோகின் என்னதான் செய்கிறான் குழந்தைகளையும், குடும்பத்தையும் கவனிக்காமல். குழந்தைகளை முதுகில் தட்டிக் கொடுத்து அனுப்பி விட்டு மேலே நடக்க ஆரம்பித்தார்.

பனி பொழிந்து கொண்டிருந்ததால் சாலையில் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் குறைவாகக் காணப்பட்டது. மாதா கோவிலின் அருகில் உள்ள திருப்பத்தில் இகார் ஏசோகின் அவர் எதிரே வந்தான். அவருக்குத்தான் வயதான காரணத்தினால் பார்வை சற்று மங்கலாக ஆரம்பித்திருந்தது. சாலையில் வெளிச்சம் வேறு குறைவாக இருந்தது. ஆனால் இகார் ஏசோகின் தன்னைவிட 40, 50 வயது சிறியவன். இவரைக் காணாதது போல நடந்தான். நடையிலே தள்ளாட்டம் தெரிந்தது. நன்றாகக் குடித்திருக்க வேண்டும். அவன் அருகில் நெருங்கியதும் மட்ட ரகமான வோட்காவின் வாடை வீசியது.

இப்போதெல்லாம் முன்பு போல் இவன் வேலைக்குப் போவதில்லை என கேள்விப்பட்டது நிஜம்தானோ? கூட்டுப் பண்ணை நிலங்கள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்ட போது ஏராளமானவர்கள் வேலையை இழந்தனரே அதில் இவனும் ஒருவனோ? இவன் இப்போது வேலை செய்யுமிடம் தென்கிழக்குப் பகுதியில் இருப்பதாகத்தானே அவன் மனைவி கூறினாள். இவன் மேற்குப்புறச் சாலையில் இருந்தல்லவா வருகிறான். புதிதாக அங்கு யாரோ சூதாட்ட விடுதி ஒன்று ஆரம்பித்ததாக அவர் கேள்விப்பட்டது அப்போது ஞாபகத்திற்கு வந்தது. வேலைக்குப் போகாமல், சூதாட்டமும், குடியுமாய் குடும்பத்தைக் கவனிக்காமல், சே! என்ன வாழ்க்கை. மீண்டும் இந்த அருவெறுப்பை நோக்கி அடியெடுத்து வைக்க யார் வழியமைத்துக் கொடுத்தது?

கிரிகோவிற்கு அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. ஊரின் வடமேற்கு திசையில் வோல்கா நதிக் கரையில் மரங்களுக்கிடையில் அமைந்திருந்த பெரிய இடுகாடே அவருக்கு பல சமயங்களில் மன அமைதி அளிக்கும் இடமாகும். புரட்சிக் காகப் போராடி மாண்டவர்களையும், புரட்சிக்குப் பிந்தைய காலங்களில் எதிரிகளிடமிருந்து இந்த மாபெரும் ரஷ்யாவைக் காப்பாற்ற உயிர் நீத்தவர்களையெல்லாம் அடக்கம் செய்ய ஊரின் நடுவில் இருந்த அந்தச் சிறிய மாதா கோவிலில் இடம் இல்லாத காரணத்தால் உருவாக்கப்பட்டது, அந்த இடுகாடு. அதில்தான் கிரிகோவின்

> நாடு மெல்ல மெல்ல மாறிக் கொண்டு வருகிறது. ஆனால் உழைத்து ஓய்வு பெற்ற வயதான தொழிலாளர்களுக்கு புரியாத மாற்றம். மனதிற்குப் பிடிக்காத மாற்றம்.



படிப்பகம்

www.padippakam.com



எத்தனை நண்பர்கள், உறவினர்கள், தோழர்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றனர்.

பெரும்பாலோர் இந்த இளைய ரஷ்ய சமுதாயத்திற்காக உயிர் துறந்தவர்கள். கூட்டுப் பண்ணை விவசாயத்தின்போது ஏற்பட்ட வெள்ளத்திலிருந்து கோதுமை வயல்களைக் காப்பாற்ற உயிர் துறந்த மாஷ்கோஷ். தொழிலாளர் குடியிருப்பு கட்ட காடுகளில் மரம் வெட்டும்போது தவறி மரம் விழுந்து அடிபட்டு இறந்த கெமல்நிகோவ், எதிர்ப்புரட்சிக்காரர்களிட மிருந்து கூட்டுப் பண்ணை தானியத்தைக் காப்பாற்றும் போராட்டத்தில் உயிர் விட்ட பென்சா, அவ்தேயுஷிச்....

இப்படி எத்தனையோ தோழர்களை இழந்திருக்கிறோம். விரல் விட்டு எண்ண இயலாது. அந்தத் தோழர்கள் துயிலும் மரத்தினடியிலாவது தனக்கு நிம்மதி கிடைக் கட்டும் என பெருமூச்செறிந்தவாறே நடக்க ஆரம்பித்தார்.

இடுகாட்டிற்குச் செல்லும் சாலைத் திருப்பத்தில் திரும்பியபோது தட தட எனும் சத்தத்துடன் எதிரே மோட்டார் சைக்கிள் ஒன்று வருவது தெரிந்தது. வண்டியை இவர் மீது மோதாமலிருக்க வண்டியோட்டி முயன்றபோது சற்றுத் தடு மாறிச் சரிந்தனர். வண்டி நின்று போனது. கிழவனின் குறுக்கீட்டால் தங்களது பயணம் தடைப்பட்டது காரணமாக இருவரும் கிரிகோவினை முறைத்தும் பார்த்தனர்.

கிரிகோவிற்கு இப்போது அவர்களை நன்கு அடையாளம் தெரிந்தது. பேத்யேஸ் கோவின் மகன்கள் அவர்கள் இருவரும். பழைய கூட்டுப் பண்ணை கண்காணிப்பா ளரின் மகன்கள். வெளிநாடு சென்று படித்துத் திரும்பியவர்கள். அரசாங்க வேலை செய்ய மனமில்லாமல் ஆடம்பரப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அருகிலுள்ள நகரத்தில் கடை நடத்துவதாக கேள்விப்பட்டதுண்டு.

வண்டியை இருவரும் மாறி மாறி உதைத்துப் பார்த்தார்கள். கிளம்புவதாக இல்லை. முணுமுணுத்துக் கொண்டே வண்டியைத் தள்ளிக் கொண்டு கிளம்பலா னார்கள். கிரிகோவ் அப்போதுதான் வண்டியைக் கவனித்தார். ஜப்பான் நாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வண்டி அது. ரஷ்யப் பனிச்சா லையில் செல்லும் திறனற்றது. என்ன செய்வது ரஷ்ய மோட்டார் சைக்கிள்கள் இந்த இளைஞர்களின் கண்களுக்கு அழகற்றதாகத் தென்படுகிறது. மெல்லிய புன் சிரிப்புடன் மேலும் நடக்க ஆரம்பித்தார்.

பேத்யேஸ்கோவின் மகன்கள் இப்போது வேறு எதைப் பற்றியோ சத்தமாக பேசிக் கொண்டு செல்வது காதில் விழுந்தது. கண் பார்வை மங்கிய போதும், கிரிகோவிற்கு காதின் கூர்மை குறைய் வில்ல. பிரஸ்திரோய்கா, கிளாஸ்நாஸ்ட், கோர்ப்பசேவ் என்ற சொற்கள் கோர்வை யின்றி காதில் வந்து விழுந்தன. சமீப கால மாக நாடு திசை திரும்பியிருப்பதற்கும், இந்தச் சொற்களுக்கும் மிகுந்த சம்பந்தம் இருப்பதாக கிரிகோவ் நம்பினார். எனவே தான் அவற்றைக் கேட்ட மாத்திரத்தில் மனதில் இனம் புரியாத வெறுப்பு தோன்றிற்று. மேற்கொண்டு நடக்க இய லாமல் இடுகாட்டின் வாசலில் அமைக்கப் பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தார்.

பனிப்பொழிவு இப்போது குறைந்தி ருந்தது. எனவே முன்னைக் காட்டிலும் வெளிச்சம் சற்று கூடுதலாக இருந்தது. கையுறைகளைக் கழற்றி கைகளைத் தேய்த்துச் சூடேற்றிக் கொண்டார். கூட்டுப் பண்ணையின் வயல் வெளிகளில் கடும் குளிரில் வேலை செய்ய நேரும் போதும் தோழர்கள் ஒருவருக்கொருவர் மற்றவர் கைகளைத் தேய்த்துக் கொடுப்பதுண்டு. ஓரிரு வருடங்கள் கடும் உழைப்பிற்குப் பின்னால் மின்சார சூடேற்றி வண்டிகள் வயல் வெளிக்கருகில் நிறுத்தப்பட்டி ருக்கும். குளிரிலிருந்து தப்பிக்க தொழிலா ளர்கள் ஓய்வெடுக்க நேரமில்லாத காலம் அது. பின்னர் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி தொழிலாளர்களுக்குத் தேவை யான ஓய்வைக் கொடுத்தது. கடும் வேலைப் பளு குறைந்தது உண்மைதான். ஆனால் இந்த ஓய்வும், உறக்கமும் தான் இன்றைய சமுதாயத்தை இப்படிச் சிந் திக்கத் தூண்டியதா?

சாலையின் தூரத்தில் மூன்று இளை ஞர்கள் சாலையில் கிடந்த பனிக் குவி யலை அள்ளி பந்தாக்கி கால்களில் உதைத்து மகிழ்ந்து சிரித்தவாறு நடந்து வந்ததைக் கவனித்தார் கிரிகோவ். நல்ல வச தியான குடும்பத்தைச் சேர்ந்த உயர் படிப்பு படித்த இளைஞர்களாக இருக்க வேண்டும்.

கிரிகோவின் இளம் பருவத்தில் பள்ளி செல்லும் வாய்ப்பே அவருக்கு கிடைத்த தில்லை. குடிகார தகப்பனிடம் அடி வாங்கி கோழிக் குஞ்சு போல பதுங்கிக் கிடக்கும் தாயுடன் ஒண்டிக் கொள்வார். தந்தையின் மறைவிற்குப் பின்னர் தாய்க்கு உதவியாக காட்டில் உலர் பழங்களும், சுள்ளியும் பொறுக்கி காலம் கழிந்தது. பின்னர் கட்சிப் பணிகளிலும், கூட்டுப் பண்ணை வேலை யுமாக கழிந்தது அவரது காலம்.

கம்யூனிசத்தையும், அதன் தத்துவங்க ளையும் அவர் கற்றுக் கொண்டது புரட்சிக் களத்திலும், வயல் வெளிகளிலும், மக்களி டத்திலும் தான். வகுப்பறைகளில் அல்ல.

இன்றைய இளைஞர்களுக்கு அடிப் படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகிறது. முந்தைய தலைமுறை யினால். எனவே கற்பனைக் களங்க ளில்தான் கம்யூனிசம் கற்றுக் கொடுக்கப் பட்டிருக்குமோ? பாடக் கசப்பு அந்த வாழ்வியல் தத்துவங்களிலும் ஏற்றப்பட்டி ருக்குமோ? அதனால்தான் அவர்களது சிந்தனைகளும், செயல்களும் ஒரு முகப்ப டாமல் எங்கெங்கோ விரிவடைந்திருக்கி றது. சுதந்திர தேவியின் தீபச் சுடருக்குப் பின்னே உள்ள நிழலின் கருமை அவர் களின் கண்களில் படவில்லை. விளக்கும்,


படிப்பகம்

www.padippakam.com

வெளிச்சமும், உல்லாசமுமே அவர்களைக் கவர்ந்திருக்கிறது.

யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்த இளைஞர்கள் கிரிகோவினை நெருங்கி விட்டனர். ஆனால் அவர்களது உற்சாகமும், கூச்சலும் கொஞ்சமும் குறையவில்லை. அருகில் வந்த பின்னர்தான் அவர்கள் வண்ண வண்ண பெயின்ட்களையும், அதற்கான தூரிகைகளையும் சுமந்து வந்தது தெரிந்தது.

"என்ன தாத்தா ஆட்கள் உதவி ஏதும் இல்லாமலே இங்கு வந்துட்டீங்க" என்று அவர்களில் ஒருவன் குரல் கொடுக்க மற்ற இருவரும் சந்தோஷத்தால் ஊளையிட்டனர். கிரிகோவிற்கு ஆச்சர்யமாக இருந்தது. எத்தகைய பண்பாட்டுக் குறைவான வாசகம்? அது எப்படி இவர்களை இவ்வளவு சந்தோஷப்படுத்துகிறது. இப்படிப்பட்ட இளைய சமுதாயம் எங்கிருந்து வந்தது? இந்த பண்பாட்டு மாற்றம் எப்போது ஏற்பட்டது?

"தம்பிகளா நீங்க யாரு? எந்த ஊரு"? என்று அவர்களிடம் கேட்டார் கிரிகோவ். "தாத்தா நாங்கல்லாம் கிரீவிச் கிராமத்துப் பசங்கதான். ஆனா படிக்க மாஸ்கோவுக்குப் போயிட்டோம். அதனால உங்கள எங்களுக்கு தெரியல"

"ஆமா பெயிண்ட், பிரஸ் இதுங்களோடு எங்க கிளம்பிட்டீங்க?

என்னதாத்தா உங்களுக்குத் தெரியாதா? ஆமா தாத்தா உங்க பெயர் என்ன?"

"கிரிகோவ். யெவ்கனி கிரிகோவ்"

"அதுசரி கிரிகோவ் தாத்தா நம்ம கிரிலீச் கிராமத்துக்கு வர்ற முக்கிய சாலைல ஒரு நினைவுச் சின்னம் இருக்கே, அதுகூட என்ன பேரு சொல்லுவாங்க..." அவனுக்கு பெயர் நினைவிற்கு வ்ர திணறியதும் "தோழர் ஸ்டாக்கோவிச் நினைவுச் சின்னம்" என்று அவர் எடுத்துக் கொடுத்தார்.

"ஆங்! அந்த ஸ்டாக்கோவிச் நினைவுச் சின்னங்கிற பேரமாத்தி ஜான் ஆர்தர் நினைவிடமென்று நாளைக்குப் பேர் மாத்தப் போறாங்க. அந்த இடம் முழுக்க ஒரே கலர்ல சிவப்பா பெயிண்ட் அடிச்சிருக்கே. அது நல்லா இல்ல; அதனால அதமாத்தி விதம் விதமா வண்ணம் பூச போறோம். நீங்களும் வாங்க தாத்தா விழாவிற்கு நாளைக்கு காலைல. அப்புறம் அந்த விழாவிற்கு ஆர்தரோட பொண்ணு டேரினா லண்டன்ல இருந்து வராங்க; தாத்தா, டேரினா தெரியுமா? உங்களுக்கு எங்கே தெரியப் போகுது இந்த வயசான காலத்திலே; டேரினாதான் இன்னைக்கு உலகத்திலே மாடலிங்ல நம்பர் ஒன்; ஆமா ஞாபகம் வச்சுக்குங்க."

"ஆமா! அது சரிப்பா யாரு அந்த ஜான் ஆர்தர்?" ஹா ஹா ஹா என மூவரும் நகைத்தனர்.

"இதுதான் தாத்தா இந்த ஒரே கட்சி, ஒரே சிந்தனைன்னு நம்ப நாட்டு மக்கள கிணற்றுத் தவளை மாதிரி மாத்திடுச்சு. ஜான் ஆர்தர் கூட உங்களுக்குத் தெரியல. அவரு பெரிய எழுத்தாளர். எத்தனை துப்பறியும் நாவல்கள் எழுதியிருக்கிறார் தெரியுமா? அவருக்கு உலகமெல்லாம் மில்லியுன் கணக்குல ரசிகர்கள் உண்டு. அவரு கதைய அடிப்படையா வச்சு எத்தனை ஜேம்ஸ்பாண்ட் படங்கள் வந்திருக்கு தெரியுமா? எத்தனை சீரியல் டிவிலெல்லாம் வந்துருக்கு. நமக்குத்தான் நம்ம காலத்தையே நம்மகிட்ட இருந்து இருட்டடிப்பு செய்துட்டாங்களே! இப்பதான நாம வெளிச்சத்துக்கு வந்துருக்கோம்?..." அவன் பேசிக்கொண்டே சென்றான்.

**இடுகாட்டின் மத்தியில் எல்லா கல்லறைகளுக்கும் நடுவில் ஸ்டாக்கோவிச்சின் கல்லறை கம்பீரமாக நின்றது. கொட்டும் மழையில் ஊரே திரண்டு வந்து அவனுக்கு கல்லறை எழுப்பிய நாள் மனதில் நிழலாகத் தோன்றியது.**

"தம்பி! உனக்கு இதே ஊர்தானா?"

"ஆமா, தாத்தா, அதான் அப்போவே சொன்னேன்ல மறுபடியும் ஏன் கேக்குற!"

"உனக்கு தோழர் ஸ்டாக்கோவிச்சை தெரியுமா?"

"எப்படி தாத்தா தெரியும் நான்தான் 20 வருஷமா மாஸ்கோவில இல்ல இருந்தேன்; இவுரு புரட்சி காலத்துல 40 வருஷத்துக்கு முன்னால செத்த ஆசாமியா இருக்கலாம்!"

கிரிகோவ் அவ்விளைஞர்களை காலிலிருந்து தலைவரை ஏறிட்டு நோக்கினார்.

கால்களில் விலையுயர்ந்த வெளிநாட்டுக் காலணிகள், உடலை மறைப்பது வெளிநாட்டு டெனிம் வகை துணிகள். இளைஞர்கள் முற்றிலும் மாறித்தான் போய் விட்டார்கள்.

"தம்பிநீ யாரோட பிள்ளை?"

"நான் இதே கிரீவிச் கிராமத்துல இருக்குற கிரில் இஸ்வக்கோவ்வுடபையன்தான்."

"ஓ! இஸ்வக்கோவோ பையனா நீ? நீப்பா?"

"நான் புரோபோகின் டிக்லான்கோவுட பையன்"

ஓகோ! கிரிகோவ் ஏதோ புரிந்தது போல தலையாட்டினார். இவர்களின் தலைமுறையினர் இதே கிராமத்தில் வட்டிக் கடை வைத்து நடத்தியவர்கள். புரட்சியால் ஏராளமான சொத்துக்களை இழந்ததாகக் கருவியவர்கள். கூட்டுப் பண்ணையின் ஊழல் தொடக்கத்திற்கு இவர்கள் உறவினர்களே முக்கியக் காரணம். ஆனால் ஸ்டாக்கோவிச் செருப்புத் தொழிலாளர் மாஸ்கோவின் மகன். கட்சி நலனுக்காக மாடாக உழைத்தவன். இந்த கூட்டுப் பண்ணையில் தொழிலாளிகள் வேலை செய்தபோது குழந்தைகள் காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தினை முதலில் கண்டவன்.

மற்றவர்கள் உதவிக்கு வருமுன் ஓடோடி எல்லா தொழிலாளர்கள் குழந்தைகளையும் ஒரு காயமுமின்றி வெளியே கொணர்ந்தவன். குழந்தைகள் காப்பகம் முற்றிலும் எரிந்து போயிற்று; ஒரு குழந்தைக்குக் கூட சேதம் ஏதும் இல்லை. ஊரே பதட்டத்துடன் காப்பகத்திற்கு முன் கூடிய போது தீக்காயங்களுடன் தோழர்களுக்கு மத்தியில் உயிர் விட்டவன் ஸ்டாக்கோவிச்! அவனது உயிர்த் தியாகத்தில் காப்பாற்றப்பட்ட குழந்தைகள் இப்போது கேட்கிறார்கள் யார் இந்த ஸ்டாக்கோவிச்?

அவன் நினைவிடத்தின் பெயரை மாற்றி ஜான் ஆர்தர் பெயரை வைக்கச் சொல்லி குதூகலிக்கிறார்கள். அவனது மகள் டெரினாவின் வரவிற்காகக் கொண்டாட்டம் நடத்துகிறார்கள்.

கிரிகோவ் ஏதும் பேசாமல் எழுந்தார். இடுகாட்டின் மத்தியில் எல்லா கல்லறைகளுக்கும் நடுவில் ஸ்டாக்கோவிச்சின் கல்லறை கம்பீரமாக நின்றது. கொட்டும் மழையில் ஊரே திரண்டு வந்து அவனுக்கு கல்லறை எழுப்பிய நாள் மனதில் நிழலாக தோன்றியது. மெல்ல அதனை நோக்கி நடந்தார். ஸ்டாக்கோவிச்சின் கல்லறையைத் தொட்டதும் அவருக்குள் இனம் புரியாத உணர்வு ஒன்று எழுந்தது.

கல்லறை மீது ஏராளமான பறவைகள் எச்சமிட்டிருந்தன. வசந்த காலத்தில் மட்டும் வந்து போகும் பறவைகள். கிரிகோவ் தோட்டத்தின் மூலையில் இருந்த வாளியையும், பிரஷ்ஷையும் எடுத்துக் கொண்டு கல்லறையை சுத்தம் செய்ய ஆரம்பித்தார். இடுகாட்டிற்கு வெளியே இன்னொரு இளைஞர் கூட்டம் ஆர்ப்பரித்த கூச்சலுடன் கடந்து சென்றது.

●



படிப்பகம்

www.padippakam.com

# தமிழால் ஒன்றுபட மறுக்கும் சான்றோர்!

"தமிழ் வழிக்கல்வி அரசாணை கொண்டுவந்த ஆட்சியாளர்களின் பிள்ளைகள், தமிழ்வழிக் கல்விக்கு வழி செய்த குழுத்தலைவரின் பேரப் பிள்ளைகள், தமிழ்வழிக் கல்விக்காகப் போராடும் சான்றோர் பேரவையினர் சிலரின் வீட்டுப் பிள்ளைகள் - போன்றோர் ஆங்கில வழிக் கல்வி படிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தமிழ் வழிக் கல்வியை நிர்ப்பந்திக்கின்றார்களே இது மொழிப் பற்றா அல்லது தமிழ் ஸ்டண்டா?" என்று துக்ளக், ஜூ.வி. இந்தியா டுடே போன்ற பத்திரிகைகள் எழுதுகின்றனவாம். இதற்கு மே 1-15 நந்தன் இதழ் "பதிலடி" கொடுத்துள்ளது.

"தனிச் சொத்துடைமையை ஒழிக்க வேண்டும் என்று கூறும் கம்யூனிஸ்டுகள் வீடு வாசலோடுதான் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் புரட்சி வந்தால் தன்னுடைய சொத்தும் பொதுவுடைமையில் சேர்க்கப்படும் என்று தெரிந்துதான் போராடுகிறார்கள். சான்றோர்களும் அமைச்சர்களும் தங்கள் வீட்டுப் பிள்ளைகளை ஆங்கில வழியில் படிக்க வைப்பதும் அது போன்றதுதான். தமிழ் வழிக் கல்விச் சட்டம் வந்தால் எங்கள் பிள்ளைகளுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் அது பொருந்தாது என்று யாரும் சொல்லவில்லை" என்று கூறுகிறது நந்தன் தலையங்கம்.

சான்றோர்களுக்கும் அமைச்சர்களுக்கும் எதிராக துக்ளக் வகையறாக்கள் எழுதியிருப்பது உள்நோக்கம் கொண்டதென்பதும், தமிழ் வழிக் கல்விக்கெதிராக ஒரு துரும்பு கிடைத்தாலும் அவை பயன்படுத்திக் கொள்ளும் என்பதும் அனைவர்க்கும் தெரிந்ததுதான்.

ஆனால் தங்கள் இரட்டை வேடத்தை மறைத்துக் கொள்ள கண்ட இடத்திலும் கை வைக்கிறார்கள் சான்றோர்கள். கம்யூனிஸ்டு கட்சியில் (அதாவது உண்மையிலேயே புரட்சிக்கு வேலை செய்யும் கம்யூனிஸ்டுகளின் கட்சியில்) சேர விரும்பும் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் சொத்தைக் கட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும்; அல்லது சொத்தைத் துறந்து வர வேண்டும். இந்த விதியைப் பல்லாயிரம் தோழர்கள் அமல்படுத்தியிருக்கிறார்கள். அமல்படுத்தியும் வருகிறார்கள்.

"வீடு, சிறுதொழில் போன்றவற்றையும் பொதுவடைமையாக்க வேண்டியதுதானே" என்று கேட்கலாம். முதலாளித்துவ அரசு ஆட்சி செய்யும் ஒரு சமூகத்தில் அப்படிச் செய்வதன் மூலம் முதலாளித்துவ உறவை மாற்றியமைக்க முடியாது என்பதும், இது கற்பனாவாதம் என்பதுதான் அவ்வாறு செய்யாமலிருப்பதற்குக் காரணம். கட்சிக்குள் நிலவும் வர்க்க ஏற்றத் தாழ்வை கம்யூனிஸ்டுகள் மறைப்பதில்லை; மாறாக தொழிலாளி வர்க்கத்தின் நிலையில் நின்று உடைமை வர்க்கச் சிந்தனைக்கெதிராகப் போராடுகிறார்கள். இந்தப் போராட்டம் எந்த அளவுக்கு நடக்கிறதோ அந்த அளவுக்கு கட்சி தொழிலாளி வர்க்கக் கட்சியாக இருக்கிறது.

"அவர் பூணூல் போட்டிருக்கிறாரே, இவர் சாதி பார்க்கிறாரே, அவர் வரதட்சிணை வாங்குகிறாரே" என்று தன் கட்சி உறுப்பினர்களைப் பற்றிக் கேள்வி எழுப்பினால் "இந்த சமுதாயத்தில் இப்படித்தான் இருக்கும்; நாம் ஆட்சிக்கு வந்து புதிய சமுதாயம் அமைக்கும்போது மாறிவிடும்" என்பது இடது, வலது போலி கம்யூனிஸ்டு தலைவர்கள் அளிக்கும் பதில்; தமிழ் வழிக்கல்விக்குச் சான்றோர் அளிக்கும் பதிலும் இதேதான். இந்தக் கணக்கின்படி சான்றோர் பேரவையில் சோவையும், கம்யூனிஸ்டு கட்சியில் பிர்லாவையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இது ஒருபுறமிருக்க உடைமை உறவுகளை மாற்றியமைக்கும் அரசியல், சமூகப் புரட்சியையும், பயிற்றுமொழியை மாற்றும் சீர்திருத்த சட்டத்தையும் எப்படி ஒப்பிடுவது? கருப்பு நிறம் என்பதால் காக்கையும் யானையும் ஒன்றா? பயிற்று மொழிக்குப் பொருந்தும் இந்த வாதத்தை சாதிக்கும் பொருத்தலாமா? சாதியைக் கடைப்பிடித்துக் கொண்டே சாதி ஒழிப்புச் சட்டத்துக்காகப் போராடலாமா? "மதுவிலக்கு சட்டம் வரட்டும் குடியை நிறுத்திவிடுகிறேன்" என்று குடிகாரன் உறுதியளிக்கலாமா?

ஊருக்கே சட்டம் போடுவதற்காக உயிரை விடத்துணிந்த சான்றோர் "ஹூட்ல என்னா பண்ணாங்கன்னு" தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்து கொள்ளக் கூடாதா?

சட்டம் கிடக்கட்டும் சட்டம். எந்த சட்டத்தையும் வைத்து அரசாங்கம் மிரட்டாத போதே மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிப் பள்ளிகளின் லட்சக் கணக்கான பிள்ளைகள் தமிழில் படிக்கிறார்களே, அவர்களுடைய பெற்றோர்களெல்லாம் ஒருவேளை சான்றோர்களோ என்று விசாரித்துப் பார்த்தால் 'ஏழைகள்' என்று பதில் கிடைத்தது.

அதாவது வர்க்கம். என்ன சோதனை! "தமிழால் ஒன்றுபடுவோம்" என்று தொடங்கினால் "வர்க்கத்தால் வேறுபடுவோம்" என்று வந்து முடிகிறதே. இதைப் பற்றித் தனியாகத்தான் எழுத வேண்டும்.

**சட்டம் கிடக்கட்டும் சட்டம். எந்த சட்டத்தையும் வைத்து அரசாங்கம் மிரட்டாத போதே மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிப் பள்ளிகளின் இலட்சக்கணக்கான பிள்ளைகள் தமிழில் படிக்கிறார்களே, அவர்களுடைய பெற்றோர்களெல்லாம் ஒருவேளை சான்றோர்களோ என்று விசாரித்துப் பார்த்தால் 'ஏழைகள்' என்று பதில் கிடைத்தது.**

● தொரட்டி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEW PAPER
FOR INDIA UNDER NO. 42647/87

Reg. No. TN/Chief PMG-303 / 2000

www.padippakam.com

## ஒன்றுமில்லாத போதிலும்...

வாங்க வக்கில்லாதபோது
பஞ்சாமிர்தத்துக்குப் பதிலாகப்
பொறிகடலைப் பொட்டலம்
வியாபாரப் பிரசித்தி.

'டைட்டானிக்'
'பொற்காலம்'-என
வளையல் வண்டி முன்
கனவுகள் விரிய
கன்னிப் பெண்கள்.

அடம் பிடிக்கும்
பிள்ளைகளோடு
பலூனையும் சுமக்கும்
அப்பாக்கள் ஏராளம்.

திருப்பதி தெரியாத
தெருவாசிகளுக்குத் தோதாய்
சவரக்கத்தியோடு
காத்திருக்கும்
மஞ்சள் துணிப் பைகள்.

ஏகப்பட்ட கிராக்கிகளோடு
ஏற்றுமதியாகும்
வீடுகளுக்கென,
விரித்த கடைகளில்
மொய்க்கும் கூட்டம்.

மோர்ப் பந்தல்
அன்னதானம் உட்பட
அத்தனைக்காகவும்
திருவிழாவாகிறது.
திருத்தலமாகிறது.
உள்ளே
ஒன்றுமில்லையெனினும்.

- மகேந்திரன்

## விலக்கு

தொட்டதுக்கெல்லாம்
நொட்டுஞ் சொல்லி
தங்கையைத் திட்டுவாள்
அம்மா.

அன்றும் அப்படித்தான்
'சாமியறைக்குள் போகாதே'
'சாமான்களைத் தொடாதே'
'ஆட்டுக்குத் தூரமாயிரு'
அடுக்குவாள் உத்தரவுகளை.

பழைய மரபுகளைக்
கட்டியழும் அந்த நேரங்களில்
நஞ்சாய் எரிச்சல் ஏற...

விலக்காக
பல வருடமாய்
சாமியறைக்குள் தொங்கும்
பார்வதி படத்தை
வீசியெறிவது எப்போது சகோதரி?

- தஞ்சை மணிகோ

## நடப்பு

கண்விழி பிதுங்கி
முதுகை வளைத்து
உன்னி
மூச்சைப் பிடித்து
பாரமோ ஆளோ
ஏற்றிப் போகும் போது
பாவமாகத்தானிருக்கும்
பார்க்க

என்றாலும்
எப்போதாவது
எனக்கென்னும் போது
என்னாலும் முடிவதில்லை
பேரம் பேசாமலிருக்க.

-மா. கண்ணன்

படிப்பகம்